ஓம் பரப்பிரம்மணே நம:

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கவல்லதான விகடமும், ஆநந்தகரமான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்களும் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடு

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
 திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.)

கமலம்-8.	சென்னை ஸ்ரீமுகஹு புரட்டாசிமீ 1உ	இதழ் 90.
Vol. 8.	1933-ம்ஹு செப்டம்பர்மீ 16உ	No. 90.

ஆநந்த  தர்சனம்

"என்னமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணவே" என்றார் பெரியோர். பகவானிடம் தங்களின் மனம் பதிந்துவிட்டபோது மற்றொன்றைக்காணச் சிந்தை செல்வதில்லை. பார்க்கவும் விரும்புவதில்லை; இன்னொன்றைக் கவனிக்கவும் பொழுது இருப்பதில்லை. உலகத்து மற்ற வஸ்துக்களெல்லாம் அற்பமாகவே தோற்றும். சித்தம் பரந்தாமனையே நாடி நிற்கும். அந்த சுகவாரிதியிலேயே மனம் பரவசப்பட்டிருக்கும். கற்புடைய மாதர்கள் தங்கள் கணவர்களிடம் மட்டுமே கருத்தைவைத்து அவர்கள் ஸமீபமாயிருந்தாலும், தூரத்திலிருந்தாலும் தங்கள் ஹிருதயத்திலிருப்பதாகப் பாவித்து ஸதா பதி பக்தி செய்வர். மற்றொரு அன்னியனைக் கனவிலும் எண்ணார். எண்ணுதற்கு நினைவும் போகாது. இவ்விதமே, பரமபக்தர்கள் பகவானையே என்றும் மனத்திலிருத்தித் துதித்து மற்ற எதையும் நோக்காதவராய், எங்கும் பகவத் ஸ்வரூபமாயிருக்கக் கண்டு மகிழ்வர். தங்களின் இஷ்டதெய்வத்தையன்றி மற்றொன்றைக் கருதார். ஒரு ஆற்றின் ஜலத்தைப் பல கால்வாய் வழிகளில் செல்லவிடுவதில் ஜலப்பிரவாகத்தின் வேகம் குறைந்துவிடுவதுபோல, ஒரே இஷ்ட தெய்வத்தைச் சிந்திப்பதா லுண்டாகிற பக்தியின்வேகம், பல தெய்வ வணக்கத்திற் செல்லும்போது குறைந்து மலினப்பட்டு விடுகின்றது. பதிவிரதை தன் நாயகன் ஒருவனையே தியானிப்பதுபோல், நாமும் நம் இஷ்ட தெய்வம் ஒன்றையே தியானித்துத் துதிக்கக்கடவோம்.

ஃ

"பெண்டிரால் சுகங்களுய்ப்பான் பெரியதோ ரிடும்மைபூண்டு" என்றபடி, ஸம்ஸார சுகங்களிலேயே சிந்தை பிரவர்த்திக்கின்றது. மனுஷ்

யர்களின் ஆசைக்கு ஓரளவில்லே. உலக சுகத்தை யனுபவிக்குந்தோறும் அது இன்னும் நீடித்திருக்கவில்லே யென்ற அதிர்ப்தியே மேலிடுகிறது. எப்போதும் ஒரு அழகிய பொருளேக் காணும்போது ஸந்தோஷமும், அதை விட்டுப் பிரியும்போது துக்கமும் உண்டாகின்றன. இதற்காகவே பெரியோர்கள் தங்கள் பிரீதியை எந்த மனிதர்களிடமும், இதர பிராணிகளிடமும் வையாமல் பகவான் ஒருவரிடம் மட்டுமே வைத்து ஆநந்த மெய்துகின்றனர். அந்த பகவான் அப்பிரத்யக்ஷராகினும், அவரையே ஸதா தியானித்துக்கொண்டிருப்பதால் ஒருவித ஆநந்தம் அவர்கட்கு உண்டாகின்றது. பகவத்ஞானம் பேத புத்தியை நீக்குகிறது; மோக்ஷஸாதனத்தைத் தரக்கூடியது.

ஃ

"பழுது நான்மறையின் பொருளாய்" பரப்பிரம்மம் விளங்கி எல்லா விடங்களிலும் வியாபித்திருக்கின்றது. அதன் மகிமையை விவரிக்க நம்மால் ஸாத்யமா? இந்திரியங்களின் விஷயாதிகளான விருத்திகளில் அவைகளுக்கேற்றுப்போலும், யாதொன்றிலும் சேராததுபோலும், எல்லாவற்றுக்கும் ஆதாரமாயும், குணங்களற்றதாயும், குணங்களேப் பாலிப்பதாயும், எல்லா வஸ்துக்களிலும் கலந்தும் கலவாமலும், ரூபமில்லாததால் இன்னவிதமென்று சொல்ல முடியாததாயும், அஞ்ஞானிகளுக்கு வெகு தூரத்திலும், ஞானிகளுக்கு பக்கத்திலும், சிருஷ்டி, ஸ்திதி, லயங்களுக்குக் காரணமாயும், எங்கும் நிறைந்ததாயும் பிரகாசிக்கின்றது. இதனுலல்லவோ "ஸர்வம் பிரம்மமயம் ஜகத்" என்று சொல்லுகிருர்கள். லோபிகளுக்குத் தங்களின் பணத்தின்மீதே திருஷ்டியிருப்பது போலவும், பதிவிரதைக்குத் தன் பர்த்தாவின் ஞாபகமே ஸதாகாலமும் தோற்றுவது போலவும், ஞானிகள் எப்பொழுதும் பரப்பிரம்மத்தினிடமே லயித்திருப்பார்கள்.

ஃ

"பாடும் குயில்காள்! ஈது என்ன பாடல்? நல்வேங்கட நாடர் நமக்கு ஒரு வாழ்வு தந்தால் வந்து பாடுமின்" குயில்காள்! அர்த்தமில்லாத விதமாய் என்னென்னவோ பாடுகின்றீர்களே! இது ஒரு பாடலாகுமா? பகவான் நமக்கு ஞானபக்தி வைராக்கியங்கள் சித்திக்கத் திருவருள் புரிந்ததைக் குறித்துப் பாடுவதன்றோ சிலாக்கியம் என்பது இதன் கருத்து. இதுபோல, சிலர் உண்மையான பரமாத்மாவைத் துதிக்காமல், காத்தவராயன், முனீசுவரன், சனீசுவரன் முதலிய சிறு தேவதைகளே உபாசிக்கிருர்கள். அவைகளுக்குச் செய்யும் பூஜை, போடும் பலி, கொடுக்கும் காணிக்கைகளோ சொல்லி முடியாது. இந்த அஞ்ஞானிகள் பூஜாரிகளின் வார்த்தைகளில் மயங்கிப் பொருளேச் செலவிடுவர். ஒருவன் குமாரசாமி எனக்குப் பிரத்யக்ஷம்; இதோ என் கையிலுள்ள தகடு அவர் நேரில் கொடுத்தது என்பான். காளி, மாரி, என் மீது ஆவேஸமாக வருமென்பான். ஹனுமான் எனக்கு வசியமென்று சிலர் பிதற்றுவர். இந்த மோசக்காரர்களிடம் ஹனுமான் ஓடிவருவானேன்? அவர்

நாம் பிறருக்குத் தரவேண்டிய ஒரு அணுவை எத்தனேயோ தடவைகளில் மறந்துபோய் எப்பொழுதோ ஒரு நாள் அதைச் சலிப்புடன் கொடுத்துத் தீர்க்கிறேம். ஆனுல், நமக்குப் பிறர் தரவேண்டிய அணுவையோ ஏன் இன்னமும் தரவில்லேயே என்று தினமும் எதிர்பார்க்கிறேம்.

சிரஞ்சீவியாயிருந்தால் ராமத்தியானத்திலிருக்கட்டும். அசுசியும் பொய் வசனமும் உரைக்கும் இவர்களிடம் அவர் எதற்காகக் கட்டுப்பட்டாரோ தெரியவில்லை. இத்தகைய மூடபக்தியினரின் மனம் பயத்தால் பீடிக்கப்பட்டுத் தவிக்கும். அவர்களின் மூடபக்திக்கு வரம் கொடுக்கப் பாசாங்கினரான ஆவேசிகளும் பூஜாரிகளும் தோன்றினர்கள் போலும்!

ஃ

"இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றவான்" மாறி மாறி வரும் இன்ப துன்பங்களிலும் பகவான் நம்மிடமே இருந்து வருகிறார். நமது ஏழேழ் பிறவிக்கும் தொடர்ந்து துணையாக வந்து நிற்பார். நமது புத்தி மயங்கிவிடுவதால் துக்கத்தில் பகவான் தூரமாக இருப்பதுபோலவும், ஸுகத்தில் நமது அருகிலே இருப்பதாகவும் நினைத்துக்கொள்கிறோம். இது அறியாமையாகும். எந்தப் பொருள் கிடைத்தாலும் ஸந்தோஷமுண்டாகிறது. ஸந்தோஷத்தோடு துக்கமும் உருண்டு வருகிறது. பொருளை ஜாக்கிரதையாகக் காப்பாற்றக் கவலைப்பட்டு, அதையே அடிக்கடி சிந்திக்க நேரிடுகிறது. ஸுகத்திலும் துக்கமுண்டு; துக்கத்திலும் ஸுகமிருக்கிறது. பேதமுள்ளவரை வியவஹாரங்கள் வளரும். பேதிப்பது மனதின் காரியம். ஒரு பெரியவர் மனதை பக்ஷிக்கு ஒப்பிடுகிறார். பக்ஷி ஓரிடத்தில் நில்லாமல் பறந்துகொண்டிருப்பதுபோல், மனமும் ஓர் நிலையிலில்லாமல் ஸஞ்சலித்துக்கொண்டேயிருக்கும். மனதில் எவ்வித எண்ணமுண்டானாலும், அதற்கு இடம் கொடாதிருப்பதே உத்தம வழியாகும் மனதின் தகாத விருப்பங்களை நாசம்செய்து, பகவானிடத்தில் பற்றுதல் கொள்ளும்படித் திருப்பவேண்டும். மனதாரச் செய்யும் பூஜைகளே பலனைத் தரக்கூடியவை.

ஃ

"ஏத்துகின்றோம் நாத்தழும்ப இராமன் திருநாமம்" என்று பகவானைப் பூஜித்து ஆத்மாநந்தத்தைப் பெற்றவர்களில் மாளவதேசத் தரசனான சிகித்துவஜனின் சரித்திரம் கேட்கத் தகுந்தது. அவன் ஸத்குணமே உருக்கொண்டவன். உத்தமியும் வித்யாவதியுமான சூடாலை அவனது தர்மபத்தினி. இருவரும் இரண்டுடலும் ஓர் உயிரும்போல் நேசத்துடன் யௌவன காலத்தைக் கழித்தனர். மண்குடம் உடைந்தால் ஜலம் வெளியாவதுபோல் யௌவன ரஸம் நீங்கி வார்த்திகம் வந்தது. ஞானசாஸ்திரமே ஜெனன ரோகத்தைத் தீர்க்கும் ஔஷதம். ஸதிபதிகளுக்கு ஞானத்தால் சுகமுண்டாகுமேயன்றி மற்றெதனாலும் ஸந்தோஷம் உதிக்காதென்று தெரிந்தது. அதுமுதல் ஆத்மஞானத்தையடையப் பிரயாஸப்பட்டனர். சூடாலை சாஸ்திரங்களைப் படித்து விவேகியாயிருந்தாள். "நான் என்று எதற்குச் சொல்லுகிறோம்; மனதிலிருந்து பிரியாத இந்த மோகம் எது?" என்று ஆராய்ந்து அநேக தத்வங்களையறிந்தாள். இவ்வாறாக, மனைவியுந் தானும் ஓர் நினைவாகி சிகித்துவஜன் ஞானம்பெற்று ஆநந்தமடைவதானான். சிகித்துவஜனைப்போல் மனதையடக்கி, புத்தியால் வஸ்துக்களைப் பிரித்துப் பார்த்தால் உண்மை புலப்படும். ஜீவகோடிகள் முக்தியடைய அநேக வழிகள் ஏற்பட்டிருக்கின்றன. லோகரக்ஷகனைத் தியானித்து மோக்ஷாநந்தத்தைப் பெற்று ஸுகித்தவர்கள் கணக்கில்லாமலிருக்கின்றனர்.

ஃ

"மெய்யர்க்கே மெய்யனுவர்" எவர் உண்மையான பக்தர்களோ அவர்களுக்கே பகவான் அருள்புரிவார். சபரி என்னும், பக்தை இராமருடைய வரவை எதிர்நோக்கி, அவருக்காகப் பலவித பழங்களைப் பொறுக்கித் தான் பல்லாற் கடித்து, புளித்தவைகளை யெறிந்து, ருசி பொருந்திய பழங்களை மீத்துவைத்தாள். ஏகபத்நி விரதராகிய ராமமூர்த்தி அப்பழங்களைத் தின்று ஸந்தோஷித்து முக்தியளித்தார். மகானுபாவனுகிய தாசரதி காலிற்பட்ட கல்லுருவாகிய அகல்யை பெண்ணுருவாய் எழுந்து சென்ருள். மேலே கூறிய இரண்டு உத்தமிகட்கும் பகவான் கிருபைசெய்தும், சூர்ப்பநகையை மட்டும் தம்பியைக்கொண்டு அங்கஹீனப்படுத்தித் துரத்தினுர். நித்ய பிரம்மாச்சாரியான ஹனுமார் ஸீதையின் அடிபணிந்தார். திரிசடை சீதைக்குக் கூறிய ஸமாதான வார்த்தைகளை மறைந்திருந்து கேட்டு அகமகிழ்ந்தார். ஆயினும், இலங்கணி யென்னும் கொடிய ராக்ஷஸியைக் கொன்ருர். இவற்ருல், நாம் அறிந்துகொள்ளும் விஷயமென்ன? புருஷர்களாயினும், ஸ்திரீகளாயினும் உண்மையான பக்தியும், ஸதாசாரமும் உள்ளவர்கள் பகவத் கிருபைக்குப் பாத்திரராவர் என்பதே.

ஃ

"நின்னுருவம் மறப்பேனல்லேன்" எவ்விதம் மறக்க முடியும்? உலகிலுள்ள யாவும் பகவத் தோற்றமாயிருக்கையில், அந்தப் பரந்தாமனை மறக்க ◌ம் இயலுமோ? உல◌ ்திலுள்ள இயற்கைப் பொருளும் செயற்கைப் பொருளும் கடவுளி னிருப்பையும், அவருடைய மகிமையையும், கருணாரஸத்தையும் நன்ருய் விளக்கும். அப்பொருள்களைக்கொண்டு பகவானை யறியாதது நம்முடைய அறியாமையேயன்றி வேறில்லை. அருகே ஓடும் அருவியைக்கண்டும் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளாதவன் கசடனன்ருே? அதைப்போல் ஸமஸ்த பொருள்களையும் கண்டு கடவுளின் இருப்பைத் தெரியாதவன் மூடனே.

ஃ

"மணமில்லாத புஷ்பம், குணமில்லாத நாரி, பணமில்லாத புருஷன்" ஆகிய மூவரும் பதர்களே. பணத்தைத் தேடி நல்விஷயத்திற் செலவிடும்படி தர்மசாஸ்திரம் கூறுகிறது. சோம்பேரியாயிருக்கும் புமான் பிறரால் இகழப்படுவான். குணமில்லாத ஸ்திரீயை எல்லாரும் வெறுப்பர். அவளால் குடும்பத்திற்கு க்ஷேமக்குறைவு உண்டாகும்; பாபகிருத்யங்கள் அதிகப்படும். மணமில்லாத புஷ்பம் குப்பையிற்ருன் கொட்டப்படும். அவ்விதமே, ஈசுவரபக்தி செய்யாதவனின் வாணுட்களும் வியர்த்தமேயாகும்.

ஃ

"புதுமையிலும் புதுமை" உலகத்தில் எத்தனையோ ஆச்சரியங்களிருக்கின்றன. ஒருதரம் ராமா என்ருல் ஸகல பாபங்களும் தொலைந்து போகின்றன; இது ஸத்தியம் என்கிருர்கள். இப்படிச் சொல்லி நாமாவின் மகிமையைப்பற்றி வியக்துகூறும் பாகவதர்கள் உடனே ராம ராம ராம என்று பலமுறை கூறுவதேன்? இதனுல் அவர்கட்கு நாமாவின் மகிமை நன்ருய்த் தெரியவில்லையென்று அறிகிருேம். பசி தீர்ந்தவன் அப்பொழுதே மறுபடியும் உண்பாஞ? அதுபோல் ஒருதரம் ராமாவென்று துதித்துப் பாபம் ஒழிந்து புண்யனுனபின் சும்மாவிருப்பதன்ருே இயற்கை. என் பலமுறை கூறவேண்

டும்? இதனால் அவர்களுக்கு நிச்சயஞானம் உண்டாகவில்லையென்று ஊகிக்கிறோம். ராமநாமத்தை உச்சரித்த பின்னும் தன்னைப் பாபியென்று ஒருவன் நினைத்துக்கொள்வானாயின், அவனுக்கு அந்நாமத்தில் நம்பிக்கையில்லையென்று நாம் சொல்லத் தடையுண்டோ? ராமத்தியானத்தாலுண்டாகும் ஆநந்தத்தில் எவ்வளையே மறந்து கூறுகிறோமெனில், அவ்வளவுக்கு இவர்கள் பக்குவிகளா யிருக்கக் காணோம். ஆகவே, இது ஒரு புதுமை. ஒவ்வொருவருக்கும் மரணம் உண்டென்று கூறும் மனிதன் தனக்குமட்டும் அது வெகு தூரத்திலிருப்பதாகப் பொய் நம்பிக்கைகொண்டு அநேகரை வஞ்சிக்க நினைக்கிறான். இந்த பிராந்தி ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டிருப்பது எல்லாவற்றிலும் பெரிய புதுமை. ஆகவே, பிரபஞ்ச ஸுகம் சாஸ்வதமல்லவென்பதை யுணர்ந்து நமது சித்தத்தைப் பகவானிடத்தில் செலுத்தி, ஸதா அப்பரம்பொருளைத் தியானிக்கக்கடவோம்.

இராட்டினம் நல்ல பொழுது போக்கு.

ராட்டினத்தை ஏழைகள் மாத்திரம் உபயோகித்து வரவில்லை. காருண்ய சக்ரவர்த்தினியாகிய விக்டோரியா அம்மையாரும் இந்த எளிய கருவியைப் புறக்கணிக்கவில்லை. பால்மோரல் எனும் இடத்தில் தம் வீட்டில் தம்முடைய கையால் தினந்தோறும் நூல் நூற்பதில் சிறிது நேரம் கழித்து வந்தார். சாதாரண உடையோடு கைம்பெண்களுக்குரிய குல்லாயைத் தலையில் தரித்துக்கொண்டு நூல் நூற்குங்காலத்துப் புகைப்படம் எடுப்பதில் வெட்கப்படவில்லை. எளிய ஏழை மக்கள் நூல் நூற்கும்போது அவர்களுடன் சேர்ந்து உட்கார்ந்து தானும் நூல் நூற்று 'டீ' குடிப்பதில் அவர் பெருமை பெற்றதோடு மிக்க மகிழ்ச்சியும் அடைந்தார்.

மேலும், நூலைச் சேகரித்துவைப்பது ஏழைகளுக்கு மாத்திரம் உரித்தானதன்று. சாலமன் தன் கணக்கற்ற செல்வத்தில் எகிப்பது தேசத்தினின்றும் கொண்டு வந்த நூற்களைத் திரட்டி வைத்திருந்ததாகப் புத்தகங்கள் கூறுகின்றன.

ஆதலால் நூல் நூற்பதும், அதைச் சேகரித்து வைப்பதும் ஏழைகளோடு நில்லாமல் பணக்காரர்களும் விரும்பிச் செய்வார்களாயின் அது உற்சாகமான பொழுது போக்காகும்.

அமிர்தகுணபோதினி

ஸ்ரீமுக௵ புரட்டாசி௴ 1௳

கலாஞான அபிவிர்த்தி.

ஆநந்தங்கள் யாவற்றிலும் கலா ஞானத்தால் வரும் ஆநந்தமே ஆநந்தம்! கலா ஞானத்திலேயே தன் வாழ்நாளை விநியோகித்திருப்பவனுக்கு, எவ்விதமான நிந்தனைக்கும் இடமாகாத ஆநந்தத்தை அனுபவித்தலே பழக்கமாகி விடுகின்றது. பின்னால் மனக்கிலேச முண்டாக்குகின்ற இன்பத்தை அவன் ஒருபோதும் நாடுகிறவனல்லன். கலா ஞானத்தால் அவன் அனுபவிக்கும் ஆநந்தங்கள் யாவும்—எளிதில் கிடைக்கத்தக்கனவும், மாட்சிமை பெற்றனவும், குற்றமற்றனவுமாம். சிற்றின்ப நுகர்ச்சிக்குப் பின்னால் அவமானம், ஆசாபங்கம், அனுதாபம் ஆகிய இவை உண்டாவதுபோல் கலாஞானத்தினது பேரின்பத்திற்குப் பின் உண்டாவதில்லை. கலாஞானமாகிய கருந்தனத்தைக் கைக்கொண்டு, அறிவு வளரப்பெற்று, அதை முற்றும் தனதாக்கிக்கொள்வதனால் விளையும் இன்பத்தைவிடச் சிறந்தது வேறொன்றுண்டோ? இப்பிரபஞ்சத்தில் எதுவும் சாஸ்வதமல்லவாயினும், கலா ஞானத்தைத் தன்னிலேகொண்டவன் மட்டும் எவ்வகைத் துரதிர்ஷ்டத்தாலும் கெடுக்க முடியாத என்றும் அழியாப் பேரின்பம் ஒன்றைப் பெற்றிருக்கிறான். அவ்வின்பமானது அவனுக்குப் பலவித நன்மைகளையும் விளைத்து, எவ்வகைத் தீமைகளையும் நேராதபடி காத்துக்கொண்டு, ஆயுள்முழுதும் அவனைவிட்டுப் பிரியாமலே இருக்கின்றது என ஸிட்னி ஸ்மித் என்பவர் சொல்லுகிறார்.

ஃ

மேன்மேலும் கலாஞானத்தைச் சம்பாதிப்பதிலேயே புத்தியைச் செலுத்தியிருப்பவனுக்கு அனுபவிக்க எவ்வளவோ பேரின்பங்கள் களஞ்சியம் களஞ்சியமாய்க் கிடக்கின்றன. ஒரே தேசத்தாருடைய கல்விச் செல்வம் மாத்திரமல்ல; இப்பூலோகத்துச் சகல தேசத்தாருடைய கல்விச் செல்வமும் பேராநந்த முண்டாக்கும் பொருட்டு அவனுக்குப் பிரத்தியக்ஷமாயிருக்கின்றன. தற்காலத்துக் கல்வி கேள்விகளைப்போலவே முற்காலத்துக் கல்வி கேள்விகளும் அவனுக்கு எளிதில் கிடைக்கத்தக்கவையாம் காலத்தினாலும், தூரத்தினாலும் பரிபக்குவமான பெரியோர்களுடைய வாய்மொழிகள் ஆதி

காலந்தொட்டு நடந்தவைகளை அவனுக்கு விளங்கச்சொல்லுகின்றன. ஸகலமான ஸத்புருஷர்களும் பண்டிதர்களும் கலாஞானப் பிரியனுடைய நேசர்களேயாம். மேலான காரியங்களை முடித்த மஹான்களோடு உல்லாஸமாய்ப் பேச்சாடுவதற்கு அவன் சக்திவந்தனாய் விளங்குவான். முனிவர்கள் அறிவால் உணர்ந்துகொண்டதும், தத்துவ சாஸ்திரிகள் தத்துவ விசாரம் பண்ணினதும், பாவலர்கள் பாடியதும், அமைச்சர்கள் ஆலோசித்துச் சொன்னதும், சாஸ்திர பண்டிதர்கள் விஷய பரிசோதனை செய்ததும், மிகுந்த பலபராக்கிரமசாலிகள் ஸாகஸச் செயல்களால் விளக்கியதும்—ஆகிய இவையெல்லாம் கலாஞானம் பெற்றோனுக்கு மேன்மேலும் தன் அறிவை வளர்த்துச் செல்வதற்கு உதவியாயிருக்கும் பொருட்டேயாம். ஒருவனுக்குக் கலாஞானம் உண்டாகியிருக்குமானால் எல்லாம் உண்டாகும்; அதில்லாவிடின் மற்றெதுவுமில்லை.

"அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்."

ஃ

உலகத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் இருவிதமான கல்விகளுண்டு. பிறர் கற்பித்துக் கொடுப்பதனால் உண்டாவதொன்று; தானே பயிற்சிசெய்து கற்றுக்கொள்வது மற்றொன்று. இவ்விரண்டினுள் பின்னது மிகவும் சிறப்பானது. கற்றுக் கொடுத்த சொல்லும் கட்டிக்கொடுத்த சோறும் துணையாகா. "ஒவ்வொருவன் கற்கிற கல்வியிலும் தற்பயிற்சியினால், அதாவது பிறருதவியின்றித் தானே பயிலுதலினால், கற்பித்துக் கொள்ளுகிற கல்வியே மிகச் சிறந்தது" என்று ஸர் வால்டர் ஸ்காட் என்பவர் கூறியிருக்கிறார். உலகத்தில் பாஷையிலாயினும், சாஸ்திரத்திலாயினும், இன்னும் மற்ற வித்தைகளிலாயினும் நன்றாய்த் தேர்ச்சிபெற்றவர்களெல்லாம் முக்கியமாய்த் தற்பயிற்சியால் தேறினவர்கள்தாம். பாடசாலைகளிலும், சாஸ்திர கலாசாலைகளிலும் கற்கிற கல்வியெல்லாம் பிரதம சிக்ஷையாகவேயிருக்கின்றன. அவை எவ்வளவுதூரம் நமது மனதைப் பண்படுத்தி ஓயாமல் படிப்பிலேயே செல்லும்படி பழக்குகின்றனவோ, அவ்வளவு வரையில்தான் அவைகளுக்குள்ள சிறப்பு. பிறர் கற்றுக்கொடுத்த கல்வியானது, நாமே நமது புத்தியெல்லாம் ஒரேமுகமாய்ச் செலுத்தி ஓயாமல் வருந்திக்கற்கிற கல்விக்குத் தினையளவும் ஈடாகாது. நாம் நமது உழைப்பினாலேயே கற்றுக்கொண்ட கல்வி, முழுதும் நமக்கே உரியதும் ஒருநாளும் அழிவில்லாததுமான ஒரு ஆஸ்தி போலாய் விடும். அப்படிப் பயின்று தேடிக்கொள்கிற கல்வி நிலைபெற்று நமது புத்திக்கு மேன்மேலும் கூர்மையும் தரும். நாமே வருந்திக் கற்கிற விஷயங்கள் நம் மனதில் எவ்வளவு உறுதியாய்ப் பதியுமோ, அவ்வளவு உறுதியாய், பிறருதவியைக்கொண்டு கற்கிற விஷயங்கள் ஒரு

போதும் பதியமாட்டா. நாமே வருந்திச் செய்யும் உழைப்பினல் புத்திக்கு நல்ல உறுதியும் சாமர்த்தியமுமுண்டாகும். சுயமாய் வருந்தி ஒரு தடவை ஒரு கடின விஷயத்தைக் கண்டறிவோமானுல், பிறகு அது அத்தன்மையான மற்றொரு விஷயத்தை எளிதில் அறிவதற்குரிய சக்தியைத் தானே உண்டாக்கும். இவ்வண்ணம் கல்வியறிவானது புதிதாய்ப் பல தத்துவங்களைக் கண்டறியவும், கடினமான விஷயங்களை எளிதில் அறிந்துகொள்ளவும், நமக்கு மிகுந்த வல்லமையுண்டாக்குவதுபற்றி, அதுவே ஒரு நூதனமான மனேபலமாக விளங்குகின்றது. காரியசித்தி பெறுவதற்கு நம்முடைய விடாமுயற்சியே முக்கிய சாதனம். அந்த முயற்சியில்லாமல் எவ்வளவு புத்தகங்களிருக்கட்டும், எவ்வளவு உபாத்தியாயர்களிருக்கட்டும், எவ்வளவு விஷயங்கள் முகபாடமாயிருக்கட்டும், இன்னும் எந்தெந்தத் துணைக்கருவிகளிருக்கட்டும், ஒன்றும் பயன்படாது. தாமே பயிற்சி செய்வதாலும், ஸ்வபுத்தியையே அதிகமாக உபயோகப்படுத்தி ஆராய்வதாலுமே அறிவு விருத்திகொள்கின்றது. தாமே தமக்குத் துணையாகித் தமது முயற்சியாலேயே தமது புத்தியை மலரச்செய்துகொள்வதுதான் சிறந்த கல்வி.

ஃ

கலாஞானத்தின் சிறப்பை மேலே கூறினேம். அந்தக் கலாஞானமானது தானே வருந்திப் பயில்வதனுல்தான் விசேஷமாக அபிவிர்த்தியாகக் கூடுமென்பதையும் விவரித்தோம். இங்ஙனம் பயின்று பெற்றுக்கொள்கிற கலாஞான சக்திகளை நாம் எப்படி உபயோகிக்கிறேமோ, அதற்குத் தக்கபடியே நமது சிறப்பு மிருக்குமென்பதைப்பற்றி இங்கு சிறிது விளக்குவோம். தனக்குக் கிடைத்த கலாஞானமும், அதனுல் அடையப்பெற்ற புத்திசாமர்த்தியமும் வெகு சொற்பமாகவே யிருந்தபோதிலுங்கூட அதை ஒருவன் சரியாகப் பிரயோகிப்பானுனல், மிகுந்த புத்தி சாமர்த்தியமுள்ளவனைப் போல அவ்வளவு பெருமை பெறுதற்கும் உரியவனுவான். திரண்ட ஸ்திதி ஒருவனுக்குப் பிதிரார்ஜிதமாய்க் கிடைத்தால் அதில் எப்படி அவனுக்கு ஒரு மேன்மையுமில்லையோ, அப்படியே சிறந்த புத்தி சாமர்த்தியங்கள் இயற்கையாய் அமைந்திருப்பதிலும் ஒரு மேன்மையுமில்லை. அந்தப் புத்தி சாமர்த்தியங்களை உபயோகிக்கிற விதத்தையும், அந்தப் பிதிரார்ஜித சோத்தைச் செலவிடுகிற விதத்தையும் பார்த்துத்தான் அவற்றின் மேன்மையை அறியவேண்டும். ஒரு உபயோகமுமின்றிக் கல்வியாகிய பெருஞ்செல்வத்தை மனது விசேஷமாய்த்

வீட்டில் வெறுமனே உட்கார்ந்து கொழுக்கத் தின்பவர்களால் அவ்வீட்டுக்கு உழைக்கும் பைத்தியக்காரனின் கடைசி சொட்டு ரத்தமுங்கூட உறிஞ்சப் படுகிறது. அவன் பிணமானதும் இவர்கள் வேறிடங்களை நோக்கியபடி விலகி விடுகிறுர்கள்.

தேடிவைத்துக் கொண்டிருப்பது கூடுமானதுதான்; ஆனால், அந்த அறிவு நன்மைக்கும் விவேகத்திற்கும் துணையாகி நல்லொழுக்கத்திற் புகாதிருக்குமாயின், இருந்தும் இல்லாதது போலவேதான். கலா ஞானத்தாற் பெற்ற அறிவானது இவ்வுலகில் வழங்கும் அற்பமான அக்கிரமங்களுக்கு உடன்பட வொட்டாமல் ஒருவனை விலக்கிக் காக் குமென்றாலும், உண்மையான நீதி யொழுக்கம் முதலியவைகளால் பத்திரமாய்ப் போஷிக்கப்பட்டாலன்றி, சுயப் பிரயோஜனமான துர் மார்க்கங்களினின்றும் விலக்கிக் காக்கமாட்டாது. ஆனதுபற்றியே, கல்வியில் நன்றாய்த் தெளிந்துங்கூட ஒழுக்கத்திலே மிகவும் குறை வுள்ளவர்களாயும், பாடசாலைப் படிப்பு மிகுதியாயிருந்தாலும் உலக நெறி சிறிது மறியாதவர்களாயும், நாம் பார்த்து அனுசரிப்பதற் கேற்ற மாதிரியாக நல்லொழுக்க முள்ளவர்களாயிருக்க வேண்டிய தற்குப் பதிலாக, நாம் கண்டு அஞ்சி விலகியிருக்கவேண்டிய தீய வொழுக்கமுள்ளவர்களாயும் இருக்கிற அநேகரை அங்கங்கே காண் கிறோம். எனவே, கலாஞானத்தால் பெற்ற அறிவை நல்வழியிற் கொண்டு திருப்பாவிட்டால் அது தீயோர்களைப் பின்னும் கொடிய வர்களாக்கி விடுகின்றது. இவ்வித தீயதன்மையையே தங்களுடைய பெரிய சாமர்த்தியமாகவும், தங்களுக்கு அது நன்மையைச் செய்வ தாகவும் கொண்டாடிக் கொள்வதானால் அத்தகையோரைப் பிசாசு களின் கூட்டம் என்று சொல்லிவிடலாம். பொருளுள்ளவர்களெல் லாம் எப்படிப் பெருங்கொடை யுள்ளவர்களாவதில்லையோ, அப்ப டியே விசேஷமாய்ப் புஸ்தகங்களைக் கையாண்டு கலாஞானம் கொண் டவர்கள் அனைவரும் நல்லொழுக்க முடையோராகி விடமாட் டார்கள். கலாஞானத்திற்கு வேண்டிய கருவிகளைமட்டும் கையாள்வ தான விஷயம் வேறு; அந்தக் கலாஞானத்தைப் பார்க்கிலும் பெரு மைபெற்றதான நல்லொழுக்கந் தாங்கிய சிக்ஷையால் அடையத் தக்க அறிவும் விவேகமும் வேறு. நாம் அடைந்த கலாஞானம் சிறி தளவேனும் நமது மனதைத் திருத்தித் தெளிவிக்காமலும், ஒழுக் கத்தை உறுதிசெய்யாமலு மிருப்பின் அதனால் பயன் ஏதுமில்லை.

ஃ

இனி, நமது தேசத்தில் படிப்பு எவ்வளவுதூரம் பரவியிருக் கிறதென்பதைக் கவனிப்பின், ஐந்து கிராமங்களில் நான்கு கிராமங் கள் பள்ளிக்கூடங்களையே கண்டதில்லை; எட்டுப் பிள்ளைகளில் ஏழு பிள்ளைகள் படிப்பென்பதே யில்லாமல் இருள்மூடின நிலைமையில் வளர்ந்து ஜீவித்து வருகிறார்கள். இப்படியிருந்தால் தேசத்து ஜனங் களிற் பெரும்பான்மையோர் பொதுக்காரியங்களை யறியச் சக்தியுள்

இரண்டு இருதயங்கள் ஒன்றோடொன்று காதலுற்றுக் கலக்கும் காலத் தில் அவை பூர்ணத்தை யடைகின்றன. தனியாக இருக்கும் வரையில் ஒவ்வோர் இருதயமும் குறையுற்றதாகவே இருக்கிறது.

ளவர்களாவது எப்படி சாத்தியம்? தேசத்தில் எல்லாவித நன்மைக்கும் மூலகாரணமாயுள்ளது கல்வியாகும். கல்வியறிவுள்ளவனுக்கும் அந்த அறிவு இல்லாதவனுக்கும் உள்ள பேதத்தை நாம் அனுபவத்தில் ஒவ்வொரு நிமிஷமும் பார்க்கிறோம். எப்படிப்பட்ட தொழில் செய்கிறவனாயிருந்தாலும், அவனுக்குப் படிப்பிருந்து, அதனால் நாளுக்குநாள் விருத்தி செய்துகொள்ளக் கூடியவனாயிருந்தால், அதனால் மிகுந்த லாபமும் திருத்தமும் பெறுவானென்பது நிச்சயம். இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்டில் வேலை செய்வோரது கட்சியொன்று இருந்து வருகிறது. பெரிய கைத்தொழிற்சாலைகளில் வேலைசெய்து கூலி பெறுவோரும், அல்லது தாமே சிறுமுதல் வைத்துத் தொழில்செய்து சம்பாதிப்போருமே இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள். அதாவது, நமது தேசத்தில் நெசவுத்தொழில் செய்கிறவர்கள், தட்டான், தச்சன், கருமான் இவ்வித வேலைகளைச் செய்கிறவர்கள், விவசாயத்தாலோ, பட்டணங்களில் கூலிவேலைகள் செய்வதாலோ ஜீவிப்பவர்கள் ஆகிய இவர்களெல்லாம் பார்லிமெண்டில் அங்கத்தினர்களானதுபோலாகிறது. இந்தத் தொழில் வகுப்பார் எல்லோருக்கும் பார்லிமெண்டுக்கு அங்கத்தினர்களை நியமிப்பதில் வோட்கொடுக்க அதிகாரமுண்டு. தங்களில் ஒருவரைப் பார்லிமெண்டின் அங்கத்தினராக நியமிக்கவும் சுதந்திரமுண்டு. இத்தொழிலாளர்களின் கட்சியே பார்லிமெண்டில் ஓங்கி நிற்பதுமுண்டு. மகா கல்விமான்களாயும், செல்வாக்குள்ளவர்களாயும், உலகமெல்லா மறிந்துவியக்கும் ராஜதந்திரிகளாயு மிருக்கிற பிரமுகர்களுக்குச் சரிசமானமாக இத்தொழில் கட்சியார் பார்லிமெண்டில் ஸ்தானம் பெற்றிருப்பதோடுகூட, சில சமயங்களில் அப்படிப்பட்ட கீர்த்திமான்கள் சொல்லுவதைக் கண்டித்துப்பேசி, தாங்கள் சொல்லுவதே சரியென்றும் சாதிப்பார்கள்! சாதாரண வேலை செய்வோர்களும் தொழில் செய்வோர்களுமான ஏழைமக்களுக்கு இவ்வளவு துணிவும் சுதந்திரமுமிருப்பது ஆச்சரியமல்லவா? நம் தேசத்தில் அற்ப சொற்பமான பொருள் வைத்திருப்போரும், அந்தஸ்துள்ளவர்களும் எத்தனையோ வீண் கர்வம் பாராட்டுகிறார்களே! சாமானிய ஏழைகளைத் தலைநிமிர்ந்து பார்த்துப் புன்னகை நகைப்பதுகூடத் தங்களுக்கு இளப்பமென்று கருதி, ஏழைகளைக் கண்டால் நிந்தித்து அவமானப்படுத்துவதும், அருகே அண்டவொட்டாமல் செய்வதுமாய்க் கர்வம் கொண்டாடுகிறவர்கள் அநேகராவர். இங்கிலாந்து முதலிய மேல்நாடுகளில் இப்படிப்பட்ட வீண் பெருமையடிக்கும் இயல்பு நாளுக்குநாள் நழுவிக்கரைந்துபோய்க்கொண்டிருக்கின்றது. எப்படிப்பட்ட பெரிய மனுஷ்யனானாலும், எவ்வளவு பொருளும் எவ்வளவு படிப்பும் படைத்திருந்தாலும், ஏழைகளைக் கண்டால், அவர்களை ஏதோ சிருஷ்டியில்

எப்பொழுதும் உன்னிடம் ஒரு பணமாவது இருக்கப் பார். அதன் அருமை பிறகுதான் அந்தந்த அவசரத்தில் உனக்குத்தானே தெரியவரும்.

எறிந்துபோட்ட வஸ்துக்களைப்போலப் பாவித்துக் கேவலமாய் இகழ்வது இங்கிலாந்துபோன்ற தேசங்களில் சாத்தியமல்ல. ஏன் இப்படி சாத்தியமல்லவேன்றால், அங்கே படிப்பு விசேஷமாகப் பரவி, பிரதி மனுஷ்யனும் அவனவன் சுதந்திர பாத்தியங்களின்னவையென்றறிந்து, மனுஷ்யருடைய தாரதம்மியத்துக்கு முற்றிலும் பொருளாவது அந்தஸ்தாவது காரணமல்லவேன்றும், அவனவன் மானமே அவனவனுச்குப் பிரதானமேன்றும் நன்கு உணர்ந்திருக்கிறான். இப்படிப் பட்ட உணர்ச்சி நம்தேசத்தில் உண்டாவதற்குப் படிப்பு எங்கணும் பரவிக் கலாஞானம் வளர்ந்து அனைவரும் கல்வி கற்றவர்களாகவேண்டும். அப்போதுதான் இந்த சுதந்திர உணர்ச்சியும், தன் மதிப்பும், துணிகரத்துடன் எதிர்வாதம் செய்ய சக்தியும் நம்மவருக்கு உண்டாவது சாத்தியமாகும். அத்தகைய காலம் எப்போது வருமோ?

ஃ

முற்றிலுமே கல்வியில்லாமையும், கற்கப் புகுந்துங்கூடப் போதிய கல்வி பெறுமையுமான பொல்லாப்புகள் ஒருபக்கம் வருத்திவர, மற்றொரு பக்கமோ உயர்தரக்கல்வி பெற்றவர்களில் அநேகர் ஜீவனத்திற்கே மார்க்கமின்றித் தவிப்போரா யிருக்கின்றனர். கலாசாலையிற் பட்டம்பெற்ற ஒருவர் கல்கத்தாவில் ரிக்ஷா வண்டி இழுத்து அதனால் ஜீவிக்கும்படி நேரிட்டதாகவும் பத்திரிகைகளில் ஒரு செய்தி வெளிவந்தது. இதனிலுங் கேடு வேறுண்டோ? உயர்தரக் கல்விபெற்றோர் பிழைப்புக்கு வழியற்றுத் திண்டாட, எந்தக் கல்வியுமே காணாத, அல்லது சொற்ப கல்விபடைத்த வியாபாரிகள் எவ்வளவோ பெரிய வர்த்தகங்களை நடத்தி ஏராளமான லாபம் அடைகிறார்கள். ஆகவே, உயர்தரக் கல்வியுடன் தொழில் வியாபார மர்மக் கல்வியையும் சேர்த்து, இரண்டையும் கலந்த முறையில் போதிக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் எங்கும் வலுத்து வருகிறது. இதனால் போதிக்கப்படும் கல்வி முறையில் பெரிய தவறு இருப்பதாக விளங்குமேயன்றி, அது கலாஞானத்தை இழிவுபடுத்திய தாகாது. கலாஞானத்திற்கு எப்போதுமுள்ள விசேஷித்த கௌரவம் என்றைக்கும் இருந்துகொண்டேதான் இருக்கும். தொழிலிலோ, உத்தியோகத்திலோ ஒருவர் ஈடுபடுவதாயினும், அத்துறையில் ஏற்படக்கூடிய சிக்கலான விஷயங்களைக் கவனித்துச் சரியான ஒரு முடிவுக்கு வருவதற்குப் பொது அறிவாகிய கலாஞானத்தின் அஸ்திவாரம் வேண்டியதாகவே இருக்கும். இவ்வித கலாஞானத்தைத் தற்போதுள்ள விலையேறப்பெற்ற உயர்தரக் கல்வியின் மூலமாய்த்தான், பெரிய வித்தியா பட்டங்களைச் சுமந்துதான், அடையவேண்டு மென்பதில்லை.

வழக்கு தோற்ற வக்கீல் தன் தோல்வியை மறைக்க அதிகமாகச் சிரித்துக்கொள்வார். மற்றவர்களோ அவருடைய சிரிப்பைக் கவனியாமல் தோல்வியைப்பற்றியே எண்ணுவார்கள்.

உயர்தரக் கல்வி பயிலாமலும், சர்வகலாசாலைப் பட்டங்களை யடையாமலுமே அநேகர் விசேஷித்த கலாஞான வல்லுநர்களாய் விளங்கியிருக்கிறார்கள்; பெரிய உத்தியோகங்களை ஏற்று உன்னத பதவிகளில் வீற்றிருந்து மிருக்கிறார்கள். கலாஞானத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமென்ற விருப்பமுள்ளோர் எத்துணைச் சொற்ப கல்வியிலிருந்துங்கூடத் தங்களின் இடைவிடா முயற்சியால் நாளடைவில் பெற்றுக்கொள்ள முடியும். கலாஞான வல்லுநராய்ப் பிரகாசிப்பதினும் மிக்க பெருமை இவ்வுலகில் வேறு எது?

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர், முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்."

கோட்டாவி விடுதல்.

கொட்டாவி விடுவதனால் இரண்டுவித நன்மைகள் உண்டாகின்றன. முதலாவது சுவாசப்பையில் நல்ல காற்று சேர்வதற்கு ஏதுவாயிருக்கிறது. சாதாரணமாக மூச்சு விடுவதனால் சுவாசப்பையில் காற்றுக் குறைவதும் நிறைவதுமில்லை. மூச்சை வெளியேவிட்டு உள்வாங்குங் காலங்களிலெல்லாம் ஒரு குறிக்கப்பட்ட பிரமாணங்கொண்ட காற்று குறைவின்றி சுவாசாசயத்தில் எப்போதும் இருக்கும். இந்த மிச்சமான சுவாசம் காலத்தில் பழுதடைந்து இரத்தத்தையும் கெடுத்துவிடும். அதனால் நரம்புகளுக்கும் பழுது நேரிடும். அப்பொழுதுதான் சுவாசப்பை முழு தத்துவத்தோடும் விரிவதனால் கொட்டாவி உண்டாகின்றது. கொட்டாவியினால் புதிய காற்று உட்செல்ல, அது முன்னிருந்த பழய நச்சுக்காற்றை வெளிப்படுத்தி விடுகின்றது. மேலும், கொட்டாவியினால் வாயோடு நெருங்கிச் சம்பந்தப்பட்டிருக்கும் பிடரி, நாசி, செவிகளின் வாயில்கள் திறந்து விரிக்கப்படுவதினாலும் நல்ல வாய்வு அவ்விடமெல்லாம் செல்கின்றது. கொட்டாவி விடும்போது உண்டாகும் சப்தம் காதின் நடுவுக்கும் தொண்டையின் பின்புறத்துக்கும் தொடர்பாயிருக்கும் ஒருவகைக் குழல் திறந்து விரிவதனால் உண்டாவது. குளிரினால் வரும் செவிடு, இக்குழலில் சேருகிற நீர்த்திரட்சியினால் உண்டாகின்றது.

நிழல் அகப்படுமோ? கனவில் கண்டது கைக்குக் கிட்டுமோ? கட்டிய மனக்கோட்டை இடிந்தது கொஞ்சமா? நெஞ்சமே! நீ பொறுத்துச் சகித்திராவிடில் இவ்வுலகினிடையே ஒரு கணமும் வாழ முடியாது.

பழமொழி குறிப்புகள்

4. மக்கள்.

(299—ம் பக்கத் தொடர்ச்சி.)

338. "அருக்காணி நாச்சியார் குரங்குப்பிள்ளை பெற்றாளாம்."

அருக்காணி என்றால், பெருங்குணம் பொருந்திய ஓர் ஸ்திரீ. அவ்வித மேன்மை பொருந்திய ஒரு நங்கை துஷ்டத்தனமுள்ள பிள்ளையைப் பெறும்படியும் நேர்வதுண்டு. எத்தனையோ உத்தமர்களுக்கு அவர்களின் பெயரைக் கெடுக்கக்கூடிய பிள்ளைகள் பிறந்து காலமுழுதும் தங்களைப் பெற்றவர்கள் துக்கப்படும்படிச் செய்திருக்கிறார்கள். பிறந்ததுமட்டும் பெரிய இடமே தவிர, நடத்தைகள் யாவும் கோணல்களாயும், அற்பத்தனமும் கபடமும் மிகுந்தவர்களாயும் தோன்றிக் குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிக் காம்புகளாகவும் முடிந்திருக்கின்றனர். வித்வான்கள் சிலருக்கு மூடப்பிள்ளைகள் பிறந்ததுமுண்டு. இவ்விதமே, சில இடங்களில் இதற்கு நேர் விரோதமாக, பயனற்றதிலிருந்து நல்லது தோன்றுவதுமுண்டு. அதை,

339. "நத்தை வயிற்றில் முத்துப் பிறந்ததுபோல்"

என்ற பழமொழியால் அறியலாம். நத்தையானது காண்பதற்கு எவ்வளவோ கேவலமான பிராணி. அப்படியிருந்தும் அதனிடமேதான் மேன்மையான உயரிய முத்துக்கள் உற்பத்தியாகின்றன. இவ்விதமே, தாழ்ந்த தரத்தினளான ஒரு சாமான்யப் பெண்ணிடமிருந்து ஸர்வோத்கிருஷ்டமான குணங்கள் அமைந்த புத்திரன் பிறக்கலாம். அது அவள் செய்த பூர்வ புண்ய பலன். மகான்களில் அநேகரும், பக்தர்களிற் பலரும் சாமான்ய இடங்களில் ஜனித்து உலகுக்குத் தங்களின் உன்னத விசேஷங்களை விளக்கியிருக்கிறார்கள். இவ்வாறாகப் பெருங்குணம் அமைந்தவர்களுக்கு அல்பகுணமுள்ள மக்கள் உதிப்பதும், மிக்க இழிகுணமுள்ளோர்க்கு உத்தமர்கள் பிறப்பதும் ஒருபக்கம் நிகழ, வேறு சிலருக்கோ அவர்களின் குணத்திற்கும் திறமைக்கும் மேற்பட்ட மக்கள் பிறந்து ஆநந்தத்தை விளைவித்திருக்கின்றனர். உலகில் சாதாரணமாகப் பெற்றோர்களின் குணங்களைத் தழுவியே மக்களும் தோன்றுவது சகஜம். அதில் உத்தமர்களுக்கு அன்னோரின் மேன்மைகள் இன்னும் அதிகப்படும்படியான குழந்தைகள் பிறப்பாராயின் எவ்வளவோ கொண்டாடத்தகும். அப்படியும் சில இடங்களில் நிகழ்வதை,

340. "துப்பாக்கி வயிற்றில் பீரங்கி பிறந்ததுபோல"

என்ற பழமொழியானது சிறப்பாய் எடுத்துச் சொல்லுகிறது. பீரங்கியும் துப்பாக்கியும் சண்டைக்கருவிகளின் வகுப்பைச் சேர்ந்தது. இரண்டுக்-

கும் ஜாதி, குணம் ஒன்றுதான். ஆனால், துப்பாக்கியைப் பார்க்கிலும் பீரங்கி அதிக தீவிர வேகமும் பெருமையும் கொண்டது. துப்பாக்கியின் வயிற்றில் பீரங்கி பிறப்பதெனில், தாய் தந்தையர்களின் நற்குண விசேஷங்கட்கும் மேன்பட்டதான குணச் சிறப்புகள் வாய்ந்த பிள்ளைகள் உதிப்பதை இது எடுத்துக் காட்டுகிறது. இத்தகைய பிள்ளைகளால்தான் பிந்திய பல தலைமுறைக்கும் பெயர் சொல்லும்படியான பிரக்யாதியும் உன்னதமும் குடும்பத்திற்கு உண்டாகின்றன. இப்பழமொழியின் கருத்தை இன்னும் தெளிவாக விளக்கி,

341. "தாய் எட்டு அடி, பிள்ளை பதினாறு அடி"

என்று சிறப்பித்துச் சொல்வார்கள். வேங்கைப்புலியின் இனத்தில் தாய்ப்புலி எட்டு அடியை ஒரே தடவையில் தாண்டிக்குதித்தால், அதன் இளங்குட்டி தனது சிறு பருவத்திலேயே பதினாறு அடி தாண்டிக் குதிப்பதுண்டாம். அதை இங்கு மேன்மையான பிள்ளைகளுக்கு ஒரு உதாரணமாய்க் குறிப்பிட்டிருக்கிறது. பெற்றோர்களின் பராக்கிரமத்தைவிட அவர்களின் குழந்தைகள் அதிகமான பராக்கிரமம் பொருந்தியவர்களா யிருப்பார்கள் என்பது இப்பழமொழியின் கருத்து. துஷ்யந்தன் தன் குமாரனான பரதனை முதன் முதலாகப் பார்க்கும்போது அவன் தன் தந்தையைவிட புஜபல பராக்கிரமசாலியாய்ச் சிங்கங்களைப் பிடித்து விளையாடிக்கொண்டிருந்தான். இவ்விதமே, ஒரு வியாபாரியைவிட அவர் குமாரன் திறமை வாய்ந்தவனாக இருப்பதுமுண்டு. தந்தை கிராமத்துப் புரோகிதராய் சாமான்ய வாழ்வில் காலங் தள்ளினராக, அவரது குமாரன் பிரபல உத்தியோகஸ்தனாக ஆனதுமுண்டு. இவ்வாறான உத்தமப் புதல்வர்கள் உதிப்பதற்குப் பூர்வபாக்கியம் இருக்க வேண்டும்.

342. "எமன் பிள்ளையைப் பேய் அடிக்குமா?"

எமன் என்பது இங்கு தைரியகுணத்தைக் குறிக்கும். மிக்க சாமர்த்தியமுள்ளவனை "அவன் வேலையிலே எமன்" என்று சிலாக்கியப்படுத்திச் சொல்வதுண்டு. எந்த எதிர்ப்புக்கும் அஞ்சாதவன் என்பதும் பொருள். அவ்விதம் அஞ்சாத் தன்மையாய் எமனைப்போல நிற்பவனைப் பேய் எதிர்க்க முடியுமா? எதிர்ப்பின் பேய்க்கும் ஒரு பலத்த அடி கொடுத்துத் தள்ளுவான். எமனைப் போன்ற தீரனுக்குப் பிறந்தபிள்ளை அதுவும் ஒரு எமனைப்போலவே இருக்கும். எதற்குமே பயப்படாது. சிலர் தேக திடகாத்திரர்களாயிருப்பதில், அவர்களுக்குப் பிறக்கும் மக்களும் அவ்விதமே யிருந்து எதற்கும் துணிந்த நெஞ்சாகத் தைரியசாலிகளா யிருப்பதை இப்பழமொழி குறிப்பிடுகிறது. இதற்கு இன்னொரு அர்த்தமுமுண்டு. எமன் என்றாலும் பேய் என்றாலும் எவருமே நடுங்கி அச்சமடைவர். எமனையும் பேயையும் இந்த வகையில் பிறரைப் பயப்படச்செய்யும் இனமாகச் சொல்லலாம். அதாவது, எமன்—பேய் இரண்டையும் ஒரு ஜாதியென வைத்துக்கொண்டு எமன் ஜாதியில் பிறந்த பிள்ளை அதே இனத்தைச்சேர்ந்த பேய் ஜாதிக்கு ஒருபோதும் அஞ்சாதென்பது இப்பழமொழியின் கருத்து. அதாவது, எந்த இனத்தில் எவன் பிறக்கிறானோ அவ்வினத்தைச் சேர்ந்தோரின் பயம் அவனுக்கு இல்லையென்றபடி. எமனையும் பேயையும் ஒரே இனமாகவும் பாவித்தபடி. (தொடரும்.)

மன்னுயிரைக் காக்கும் மாண்பு.



இப்பூவுலகிலே மனிதர்கள் பெறத்தக்க பேறுகள் பலவற்றிலும், கடவுளுடைய பேரருளினால் நாம் பெற்றிருக்கும் உயிரே மிகவும் அருமையானதென்று நூல்கள் முறையிடுகின்றன. ஆதலால், அத்தனை அருமையிலும் அருமையான உயிருக்கு ஆபத்து நேர்ந்தவிடத்து அதைக் காக்க முயல்வதே அனைவரும் கொண்டாடத்தக்க உத்தம குணமாயிருக்கின்றது. சகலலோக சிருஷ்டி கர்த்தாவாகிய கடவுளுடைய நன்கொடையான இவ்வுயிரானது அணு முதல் அண்டமீறாகவுள்ள சராசரப் பொருள் அனைத்தினும் வெகு விசித்திரமான வகையாய் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆயினும், மற்றவைகளைப் பார்க்கிலும் மானிடர்கள் விஷயத்தில் மனோபலத்தையும் தேகபலத்தையும் மிகுதியாயளித்து, அவர்களால் பல நாடுகளும் நகரங்களும் உண்டாகும்படி செய்கின்றது. அந்த நாடு நகரங்களில் பிராணனுக்கு ஒரு தீங்கு இழைப்பது பெருங்குற்றமென்பதும், அவ்வுயிரைக் காப்பாற்றுவது சிறந்த சற்குணமென்பதும், சட்டதிட்டங்களால் விதிக்கப்பட்டு யாவரும் அனுசரித்து வரும் கோட்பாடாகும். மன்னுயிர்களிடத்தில் இரக்கமில்லாதவன் இவ்வுலக வின்பங்களை யிழப்பது மாத்திரமேயன்றி, மறுமைப் பயனையும் இழந்து கொடுநரகில் வீழ்ந்து வருந்துவானென்றும், உயிர்களிடத்தில் இரக்கமுடையவர்கள் இம்மையில் எல்லாப் பெருமைகளும் பெறுவதோடு, மறுமையிலும் மோக்ஷ மடைவார்களென்றும் நீதி நூல்கள் கூறுகின்றன. இவ்வாறு ஜீவகாருணியம் மிகவும் உத்தமமான தருமமென்று கேவலம் உபதேசம் மாத்திரம் செய்தால், அது ஒருவர் காதிலும் ஏறாதென்று கருதி. அதற்காக அநேகம் சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆபத்து வேளையில் உயிரைக் காக்கின்றவர்கள் எங்கும் போற்றப்படுகின்றனர்.

ஃ

ஆப்கானிஸ்தானத்தில் அறுபது வருஷங்கட்கு முன்பு கோரமான ஒரு யுத்தம் நடைபெற்றது. அந்த யுத்தத்தில் ஆங்கில சேனாதிபதியான ராபர்ட்ஸ் என்பவர் எதிரிகளிடமிருந்து தப்பும் பொருட்டு பயங்கரமாக ஓடும் நீரோட்ட மொன்றை எதிர்த்துப் போகும்படி கட்டளை பிறப்பித்தார். அப்போது அவர் ஒரு அதிசயத்தைக் கண்டார். அது மன்னுயிரைக் காத்த அதிசயமாம்.


அது என்னவெனில்;—அழுத்தமான ஒரு கறுப்புச் சட்டையைப் போர்த்துக்கொண்டு, தலையில் ஒரு சீராவையும், கழுத்தைச்சுற்றி ஒரு வெளுப்பான சட்டையும் அணிந்து கொண்டு ஒருவர் பக்கத்தில் நின்றார். அவர் போர்ச் சேவகரல்ல; இங்கிலீஷ் சேனையோடு வந்திருக்கும் குருக்கள்மாரில் ஒருவர். இவர்

ஒருவன் ஒருவரிடம் ஒரு காரியார்த்தமாய் சிக்கிக்கொண்டபோது, அவர் சிடுசிடுத்தாலும் மௌனமாய் அந்த வேளைக்குப் பட்டுக்கொள்ள வேண்டியே வருகிறது.

பெயர் ரெவரெண்ட் T.W. ஆடம்ஸ். இந்தக் கிறிஸ்துவப் பாதிரியார் ராணுவத்ஸதச் சேர்ந்த ஒரு மனிதன் காயம்பட்டுத் தடுமாறுவதைக் கண்டு சரேலென்று தன் குதிரையினின்று குதித்து அவனுக்கு ஒத்தாசை செய்யப்போனார். அச்சமயம் குதிரை பயந்து ஓடிவிட்டது. தைரியசாலியான மதபோதகர் காயம் பட்டவனை வேறொருவரின் வசம் கொண்டுபோய் ஒப்புவித்துவிட்டு, கால் நடையாகவே நடந்து ஒரு ஆழமான நீரோட்டத்தின்கண் வந்து சேர்ந்தார். சேர்ந்தவுடனே தண்ணீருக்குள் அந்த நிமிஷத்திலேயே ஒரு காரியம் செய்யும் படியான சமயத்தைக் கண்டார். இரண்டு குதிரைகள் முதுகு கீழும், கால்கள் மேலுமாகக்கிடந்தன: அதன் மேலிருந்த சவாரிக்காரர்களோ சேனாதிபதியின் உத்திரவுப்படி நதியைக்கடக்க இறங்கி, குதிரை வழுக்கிக் கீழே விழ, அதன்கீழ் அகப்பட்டுக் கொண்டு தண்ணீரில் மூழ்கியிருந்தார்கள். குதிரைகள் தொந்தரவு பட்டுக்கொண்டு எழுந்திருந்து ஓடப் பிரயத்தன முள்ளவைகளாய் அப்படி இப்படியும் ஆடி அசையும்போது, ஒவ்வொரு அசைவும் கீழே அகப்பட்டுக் கொண்டிருக்கும் சவாரிக்காரருக்குப் பிராணாபத்தாக விருந்தது. சௌரியமுள்ளவரான பாதிரியார் உடனே தண்ணீரிலிறங்கி வெகு வருத்தப்பட்டு முதலில் ஒரு குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து பிசாசு பலம்போன்ற பலத்துடன் இழுத்துக் குதிரையைச் சவாரிக்காரனை விட்டு வேறாக விடுவித்தார். அந்த மனிதன் விரைத்துத் திக்கு முக்காடிக் கொண்டு மெல்ல மெல்லக் கரை சேர்ந்தான். பிறகு, இவ்வாறே மற்றொரு குதிரை வீரனையும் தப்புவித்தார். இக்காரியத்தைச் சாவகாசமாக இருக்கும்போது செய்தார் என்றுலோ அப்படியில்லை; அதைச் செய்து முடித்தாரோ, முடிக்கவில்லையோ, உடனே ஆப்கானியர்கள் நெருங்கி ஓடிவர, தாம் தப்பி ஓடுவதே பெரிய கஷ்டமாயிற்று. தம்முடைய பிராணனுக்கே அபாயம் சம்பவிக்கும்படியிருந்த காலத்தில் செய்த காரியமாக அதை நினைத்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் இவர் காப்பாற்றி யிராவிட்டால் அவ்விரண்டுபேரும் சத்துருக்கள் கையில் அகப்பட்டுத் துண்டு துண்டாக வெட்டப்படுவார்கள். பாதிரியாரின் மன்னுயிரைக் காத்த தீரத்தை ஆங்கில சேனாபதி மேலதிகாரிகளுக்குத் தெரிவித்துப் போற்றினர். அதன்மேல் "விக்டோரியா கிராஸ்" என்னும் வீர விருதைக் கொடுப்பதற்கு ஏற்பட்டிருக்கும் நிபந்தனைகளை இவர் விஷயத்தில் மாற்றி, ஆச்சரியமான சாகச காரியத்தைச் செய்த இவருக்கு அந்த விருது கொடுத்து மரியாதை செய்தார்கள். ஆபத்தில் அகப்பட்டு அல்லாடினவர்களின் விஷயத்தில் தம்முயிருக்குத் துணிந்து தமக்கிருந்த ஜீவகாருணியத்தைக் காட்டி மீட்பதே வீரத்தன்மையான செய்கையாகும். ஆயுதபாணிகள்தாம் உயிரைக் காப்பாற்றக்கூடும் என்பதில்லை; அன்பு மட்டும் இருந்துவிட்டால் ஆகாததுமாகும்.

ஒரு வழக்கு இடையே மத்தியஸ்தம் செய்யப்பட்டு சமாதானமான போது; அதை முடிவு செய்த ஜட்ஜி அவ்விஷயம் கோர்ட்டை விட்டு வெளியேறக் கூடாதென்றும், பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படக் கூடாதென்றும் கட்டளை யிட்டார். அவ்விதமே சகலருக்கும் தெரிந்த மர்மமாக அது முடிந்தது. எப்பத்திரிகையிலும் ஒரு எழுத்தும் வரவில்லை.

தாசி மகளின் கற்புச்சிந்தனை.



“சீலா! நான் கூறுவதைக் கேள். ‘தாயடிக்க சேய் கெடுமோ’ என்பார்கள். அது போல உன்னைப் பெற்று அரும்பாடு பட்டு வளர்த்து உனது நலனையே கோரி வரும் நான் உனக்குத் தீங்கைத் தேடுவேனா? ஆஹா! நீ பதில் கூறாது வாளா நிற்பதைக் கண்டு என் வயிறு பற்றி எரிவது ஈசனுக்குத்தான் தெரியும். இப்படிக் குலத்தொழிலையும் குலாசாரங்களையும் ஒருங்கே நழுவ விட்டு பால சந்நியாசியாக மாற எண்ணுபவரை இவ்வுலகில் நீ கண்டும் கேட்டு மிருக்கிறாயா? அடாடா! பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு என்பது உனக்கே முற்றிலும் பொருந்தி நிற்கிறது. அடீ சீலா! உன்னைப்போல இத்தெருவிலிருக்கும் நம் ஜாதியார்களில் யாராவது குல வழக்கத்தையும் ரதிபோன்ற வாழ்வையும் கைவிட்டுவிட எண்ணுகின்றனரா? சீலா! நீ ஏதுமறியாப்பெண்; உலகநடவடிக்கை ஒரு சிறிதும் பயிலாதவள். நான் கோட்டான் போல வயதாகி, என் வயதிற்கு மிகுந்த அல்லல்களின் வாய்ப்பட்டு உழன்றவள். எனது புத்திமதியைப் பின்பற்ற மாட்டாயா? அந்திய காலத்தில் எனக்கு உற்றவர் யார் என்பதை நீ சிறிதளவேனும் யோசித்தாயா?” என்று மிகுந்த கனிவுடனும் பரிதாபமான குரலுடனும் கோகிலம் நவின்றாள்.

ஃ

அவ்வாறு கூறிய கோகிலத்தின் நேர்எதிரில் தூண்மறைவில் நின்று கொண்டு இதுவரைக்கும் மௌனமாயிருந்த மடமயிலெனத்தகும் சுசீலா யாழினிசையைப் பழிக்கும் குரலில் நிதானமாகப்பேசத்தொடங்கி “அம்மா நீங்கள் கூறுவதுயாவும் உண்மையே; எனக்கு வயது பதினாறே யாகின்றது; தங்களுக்கு மூன்றி லொருபங்கு வயதினள்என்றே என்னைக் கூறலாம்? அத்தகைய முதிர்ந்த பெரியோரும், என்னைப் பெற்று வளர்த்துப் பாலூட்டித்தாலாட்டியவருமான தங்கள் வார்த்தைக்கு மறுவார்த்தை கூறலாமா? அவ்வாறு செய்வது பெரும் பாதகமெனினும் எனது ஜீவிய வாழ்க்கையைக் குலைத்துப் பாழாக்க நான் இசையலாமா? அம்மா! நான் உலகைத் துறந்து பாலசந்நியாசியாகப் போவதாக யார் தங்களுக்குக் கூறினது? எனக்கிஷ்டமுள்ளவரைத் தேர்ந்தெடுத்து வைதீகக் கிரியைகளுடன்—விவாஹமுடித்து அவர் ஒருவரையே அல்லும் பகலும் நினைத்து அவர் கதியே எனக்கும் சாலும் என்று வாழவெண்ணியிருக்கிறேன். திருப்தியில்லாத வாழ்வு ஒரு வாழ்வா? அம்மா! விலைமகளிர் நட்பு, வேசையரின்பம் என்பன போன்றவைகளை அரும் பெரும் கிரந்தங்களிலும் மிகத் தீயநடையில் உவமானித்திருகின்றனர். தாங்கள் ஒரு சிறிதளவு படித்திருந்தாலும் அது நன்றாய்த் தெரிந்திருக்கும். அது இல்லாததாலேயே என்னைக் கடுகடுத்துக் கோபிக்கிறீர்கள்” என மொழிந்தாள்.

ஃ

கோகிலம் துள்ளி எழுந்து, “ஹூம்! படித்துக் கெட்டது உன்னோடிராமல், என்னையும் படிக்க வைக்கப் பார்க்கிறாயா! சீ! கழுதை! உன்வாய் வேதாந்த மெல்லாம் சோறு

போடுமோ? என்னிடம் கூறிவிட்டு காலடி வைக்கும் அறை யாருடைய தென்பதை யோசித்தாயா? ராதா மங்கலம் ரெட்டியார் என்ருல் இப் பக்கங்களில் இரண்டு வயது குழந் தையும் அறிந்திருக்கும். இவ்வூர் கோவிலிலும் அவர் ஸர்வாதிகாரம் வகிக்கிருர். எனக்குப் பனிரண்டு வயது முதல் அவர் அடிக்கடி நமது வீட்டுக்கு வந்து போய்க்கொண் டிருக்கிருர். இப்பொழுது நான் கிழவியாகி தொங்கு சதையும் நரைத்த மயிருமா யிருக்க, அவரது எழில் மிகுந்த வதனத்தைப் பார்த் தாயா? வலிய வரும் ஸ்ரீதேவியைக் காலாலுதைப்பது போல அத்தகைய சீமானை உதைத்துத்தள்ளினுல் உன் கதிதான் என்ன? இவ்வீடும் அவர் கட்டியதுதான். நாளைக்கு அவர் நினை த்தவுடன் நாம் கோவிலில் அனுப வித்து வரும் மானியங்களை நிறுத்தி விட்டால் உன் கதிஎன்ன? பாழாய்ப் போகவேண்டியது தானே!" என அலக்ஷியமாயும் அழுத்தத்துடனும் கூறக்கேட்ட அவ்விள நங்கை பெரி தும் மனம் வருந்திஞளெனினும், மிக் க தீரத்துடன் "அம்மா! உலகில் எல் லோரையும் சிருஷ்டித்துத் தண் ணீர் வார்ப்பவர் ராதா மங்கலம் ரெட்டியார் தாஞ? அவர் படி யளக் காவிட்டால் நாம் பட்டினியே கிடப் போமா? நமது மானியத்தை மறுக்க ரெட்டியாருக்கிருந்த அதி காரப்பல்லைத் தான் சென்ற சட்ட சபையில் பிடுங்கி விட்டார்களே! அது தங்களுக்குத் தெரியாததா? அதுவுமில்லையெனில், கற்பைக் குலைத்துக்கொண்டு குலமாதர் இடும் சாபங்களுக்குப் பாத்திரமாகி உப்பரிக் கையில் வாழ்வதைவிட எங்காவது பணிப்பெண்ணுக அமர்ந்து அவரது உதவியில்லாமல் வயிறு வளர்க்க இயலாதா?" — எனக்கூறி முடிக்கு முன் கோகிலம் சீறி விழுந்து "ஏதேது! பேசாதிருந்தால் இன்னும் கூறுவாய் போலிருக்கிறதே! அடி யாத்தே! இவ்வளவு கிறுக்கு உனக் கிருக்குமென்று முன்னுல் அறிந் திருந்தால் பிறந்தவுடனேயே பாத கம் செய்திருப்பேனே! துஷ்டக் கழுதை! செல் வெளியில்! இவ்வளவு நாள்களாகப் பார்த்தும் இன்றைக்குக் கடைசி கெடுவிட்டுத் தீரயோசிக்கும் படி கூறியும் இதுதான் யோசித் தாயோ! நீ எங்கு பணிப்பெண்ணுக நின்று பிச்சை எடுத்துத் திரிகிருயோ நான் பார்க்கிறேன் ஒரு கை. சரி! வெளியில் சென்று உனதிஷ்டம் போல இருக்கலாம்—ஆஹா! உன்னைப் பார்ப்பதும் பாபமடீ!" என செந் தணல் வீசும் கோபக்கண்களுடன் கூறிக்கொண்டே எழுந்து விர் ரென்று உட்சென்று விட்டாள். சுசீலா இதை எதிர்பார்த்தவளே யாயினும், பெருத்த மனக்கலக்கத் துடன் மெதுவாக வெளிவந்து வீதி யில் நடந்தாள்.

II

"விமலா! என் தாயைத் தவிர எனக்கு உற்ருர் உறவினர் யாரு மில்லை. அவ்வருமைத்தாயோ ஆபாஸ ங்களி லிறங்கும்படி வற்புறுத்துகி ருள். நான் கற்ற சிறிதளவு கல்வியி லிருந்து அவ்வாழ்வு பெரும் சாபமும் நரகமுமென்று தோன்றுகிறது. அதன்படியே நான் வீடுவிட்டு வெளிக்கிளம்பி விட்டேன். இனி எக் கதி காளாக்குவாரோ ஈசன் யாரறிய முடியும்? நான் இனி எங்கு சென்ரு

நாம் பிறருக்கு நமது சௌகரியத்தைக் குறைத்துக்கொண்டு செய்வது போல, மற்றவர்கள் தங்களின் சௌகரியத்தைக் குறைத்துக்கொண்டு நமக்கு உதவுவதில்லை.

லும் எனது பெறற்கரிய தோழியின் அன்பும் ஆதரவும் குன்ருது பரிமளிக்குமா? " எனக் கண்ணீர் சொறியும் முகத்துடன் சுசீலா விமலாவினது இருகரங்களேயு மெடுத்துத் தனது கண்களில் ஒற்றிக்கொண்டாள்.

விமலா :—" சீலா! என்ன இது! காலேயிலேயே வீட்டை விட்டு வெளிவந்த உன்னே இரவு வரையில் என் வீட்டில் வைத்திருந்ததை ரெட்டியாரும் உன் தாயு மறிந்தால் எங்களே எக்கதிக் காளாக்குவார்கள் தெரியுமா? எதையும் மதியாது உன்னுடன்கூட இங்கு வந்தது எதற்குத் தெரியுமா? உனக்கு எவ்விதத்தீங்கும் நேராமல் பாதுகாக்க வெண்ணியே இப்போது ரயிலடிக்கு வந்திருக்கிறேன். அதோ பார்! ரயில் கிளம்பும் நேரமாகிவிட்டது. சென்று வா. எனக்கு எழுதும் கடிதங்களே நான் கூறியபடி மறை பொருள் விலாஸமாகவே எழுது; நான் பெற்றுக்கொள்கிறேன் " எனக்கூறவும் திரிசிரபுரம் ஜங்க்ஷனில் பிளாட்பாரத்தில் நின்றிருந்த மதருஸ் மெயில் ஊதி சிறிது நகரவாரம்பித்தது. சுசீலா உடனே தன் தோழியிடம் விடை பெற்றுக் கொண்டு அவளது பேருதவிக்கு வந்தனங்கள் கூறி "நீ ஜாக்கிரதையாக வீடு செல்வாய் " எனப் பன்முறை எச்சரித்தாள். அதற்குள் வண்டியும் வேகமாகச் செல்லவாரம்பித்தது.

ஃ

சுசீலா ராதாமங்கலம் தேரடித் தெரு கோகிலத்தின் ஒரே பெண். கோகிலம் அவளது இளமையில் மிக்க அழகும் அபூர்வ வசீகரமும் பெற்று விளங்கினுளெனினும் அந்நாட்களில் லக்ஷ்மியினருள் சிறிது குறைவென்றே கூறவேண்டும். ஒரு நாள் கோகிலம் அவ்வூர் கடைத்தெருவில் நின்று கொண்டிருக்கையில் அவ்வூரின் பெரிய குடித்தனக்காரரும் கோவிலின் ஸர்வாதிகாரியுமான ராதாமங்கலம் ரெட்டியார் ஜகஜ்ஜோதியெனவிருந்த இவளேக் கடைக்கணித்தார். அவள்மீது அளவிலா மையல் கொண்டார். அம்மின்ஞளேப் பின்தொடர்ந்து அவளது சிறிய குச்சுக்குள் நுழைந்து அவளது அன்புக்கும் ஆதரவுக்கும் பாத்திராகித் தனது ஆவலேத் தணித்துக் கொண்ட பிறகே வெளி வந்தார்? அன்று முதல் தான் கோகிலத்துக்கு சுக்கிரதசை உதயமாயிற்றெனலாம். அதன் பிறகே குபேர சம்பத்துடன் அவள் உப்பரிகையில் வாழ வாரம்பித்தாள். எனினும், இதெல்லாம் பழங்கதை; புதுக்கதையாக, இருபது வருஷங்களாய் கோகிலத்தை ஆண்டு அனுபவித்துக் கொண்டும், 'இன்னும்] கொள்ளும் ஏலேலசிங்கன் கப்பல் " என்றபடி அவளது மகளின் மீதும் காமவலே வீச ரெட்டியார் எத்தனித்தார். அவருக்கு உடந்தையாக விருந்து பெற்ற மகளேயும் வெளித்துரத்துகிருள் தாய். என்னே! காமாந்தகாரப் பேரிருளின் கூற்று!!

ஃ

ரயிலில் சென்று கொண்டிருந்த சுசீலா ஒன்றையே நம்பியிருந்தாள். தன் தாய் பலமுறை கெடுவிட்டுக் கேட்டும் கடைசி தினம் வரையில் மனச் சஞ்சலமின்றி யிருந்தது அந்நம்பிக்கையாலேயே. கற்பைக் காப்பதே நமது கடமை என விரதம் பூண்டிருந்த அந்நாரீமணிக்கு வீட்டை

துக்கத்துக்கு இடையே முயற்சியைக் கைவிடாதே. துக்கம், சோதனே ஒரு பக்கம் இருக்கட்டும். முயற்சி ஒரு பக்கம் நடக்கட்டும். செய்யவேண்டிய எதையும் நிறுத்தாமலே செய்து கொண்டு போ.

விட்டு வெளிக் கிளம்புவது சுலபமாயிருந்தது. ரயிலிலேறியதும் தனது அபூர்வ வனப்பும் சிங்கார எழிலும் தான் தன்னந்தனியே அநாதரவாகப் பிரயாணம் செய்வதும் கண்டு எல்லோரும் தன்னையே உற்று நோக்குவதை எண்ணி அம்மின்னாள் திகிலடைந்தாள். ஐயோ! ஈசா! இதுவும் நினது திருவிளையாட்டா! எனப் பெருமூச்செறிந்தாள். இரவு முழுதும் விழித்த கண்களுடன் மாறுநாட் காலையில் சென்னை வந்தடைந்தாள் சுசிலா.

III

எழும்பூர் வந்ததும் சுசிலா ரயிலிலிருந்து இறங்கி வெளிப் போந்தாள். எங்கு செல்வது! யாரைச் சென்றடைவது! எனச் சிந்தித்தாள். அம்மங்கை இங்கிலீஷிலும் தமிழிலும் 3-வது பாரம் வரையில் கற்றறிந்திருந்தாள். அதையும் தனது ஸங்கீத பரிச்சயத்தையும் கொண்டு எங்கேனும் நான்கு சிறுமிகளுக்கு உபாத்திச்சியாக அமர்ந்து வயிறு வளர்க்க எண்ணினாள் போலும்! எனினும், முன்பின்னறியாத இச்சென்னை மாநகரில் யாரைப் பின்பற்றுவது? என எண்ணிக் கொண்டே நின்றாள் மீண்டும். 'இங்கு கேட்பாரற்று அநாதை போல நிற்பதே பிறரது ஸந்தேகத்துக் கிடமாகும்' என எண்ணிக்கொண்டு அங்கு நின்று கொண்டிருந்த ட்ராமிலேறிக் கொண்டாள். 'அகதி சரணாலயம்' என்றொரு தேவதாசிகளின் சீர்திருத்த விடுதி சென்னையிலிருப்பதாகத் தன் தாய் அடிக்கடி கூறக் கேட்டிருந்தாள். அங்கு சென்று விசாரித்தால் ஏதேனும் புகலுண்டாகும் எனவெண்ணிய அந்நங்கையர்மணி ட்ராமிலுள்ளவர்களைக் கேட்டுக்கொண்டு ஓரிடத்தில் கீழிறங்கினாள். அவ்வாறு கீழிறங்கியதும் சுசிலாவுக்கு மார்பு துடித்தது நெஞ்சம் கலங்கியது. "ஐயோ! முன்பின்னறியாத என்னை அவர்கள் சேர்ப்பார்களோ! புறக்கணித்து விடுவார்களோ!" எனத் திகிலும் திக்பிரமையு மடைந்து நிமிர்ந்து சுற்றுமுற்றும் கவனித்தாள். அம்மின்னாளின் நேரெதிரிலேயே 'அகதி சரணாலயம்' என எழுத்துக்கள் பொறிக்கப்பட் டிருந்ததைக் கண்டதும் அவள் அளவற்ற மகிழ்ச்சியடைந்து 'இதுவும் கடவுளின் கருணை தான்!' என்றெண்ணியபடியே வேகமாகநடந்து அக்கட்டடத்தின் மீதேறி உட்சென்றாள். இன்னொருவரின் சிபாரிசு இன்றி அங்கு சேர்த்துக்கொள்ள முடியாதென்ற பதில் கிடைக்கவே, மனம் வாடியவளாய்க் கடலில் விழுந்துவிட நினைத்து ஸமுத்திரக்கரையைச் சேர்ந்தாள்.

ஃ

காலை முதல் துக்கத்தால் எவ்வித ஆகாரமும் கொள்ளவில்லை. ஸமுத்திரத்தில் விழுந்து சாகத் துணிந்துவிட்டவளுக்கு உணவு எதற்காகவென்று தன்னை யறியாமலே வாய்விட்டுச் சொல்லி விட்டாள். அந்த நிமிஷமே அவளது விழிகளில் கண்ணீர் ஆறாய்ப் பெருகின. தன்னை யறியாமலே கதறிவிட்டாள். அவளுக்கு அருகில் ஒரு கனவான் தனது மனைவி மக்களுடன் உட்கார்ந்திருந்தவர் இதைக் கண்டு தமது மனைவியைச் சுசிலாவிடம் அனுப்பி

ஏதோ வயிற்றில் உணவு விழுந்தது, பொழுதுபோயிற்று என்று சந்தோஷப்படாமல் சில பெண்கள் கலகத்துக்கும் அன்று எந்த வழி கிடைக்கும் என்று ஆராய்கிறார்கள். கொண்ட கணவனை எதிர்க்கிறவள் அநேகமாய் வெறுங்கழுத்தினளாகவே திண்டாடி வாடுவாள்.

ஞர். சுசிலா அவ்வம்மணியிடம் தன் உள்ளத்தை வெளியிட்டாள். அந்த அம்மை சுசீலாவைத் தழுவியணைத்து முத்தமிட்டுக்கொண்டு தன் பர்த்தா விடம் சகலமும் தெரிவித்தாள். அவர் சென்னையில் ஒரு பிரபல டாக்டராவார். சன்மார்க்கத்திற்குத் திரும்புகிறவர்களை உற்சாகத்துடன் ஆதரிக்க வேண்டுமென்று துணிந் தார். "குழந்தாய்! சுசீலா! விவாக விஷயத்தைப்பற்றி அந்தக் காலத் தைக் கடவுளே குறிப்பிடுவாரான தால், அப்போது அதைக் கவனித் துக்கொள்வோம். அதுவரை என் குமார்த்தியாக என்னிடமேயிருந்து கொள். நான் உன்னை சும்மா வைக்கப் போவதில்லை. உன் கையிலேயே ஒரு ஸம்பாத்தியம் இருந்தால் தான் உனக்கு மதிப்பு எற்படும். நாளைய தினமே உன்னை வைத்திய கலாசாலை யில் சேர்த்து விடுகிறேன். ஆறு வரு ஷங்கள்வரை சிரமப்பட்டுக் கற்றுத் தேர்ந்தால் சிறந்த லேடி டாக்டராகி விடலாம். நானும் ஒரு டாக்டரே யாதலின் எனக்குத் தெரிந்த யாவற் றையும் கற்பிக்கிறேன். நீ உயர்ந்த நிலைக்கு எட்டி விடலாம். அதற்குப் பிறகு விவாகத்திற்கு வேண்டிய கிராக்கி எற்படும் என்ருர். சுசீலா வுக்கு இந்த வார்த்தைகள் மிக்க ஆறு தலைத் தந்தனவாயினும் அடுத்த நிமி ஷத்தில் களைத்து விழுந்து மூர்ச்சை யானுள். அவளது ஆவலுக்கு ஒரு நிம்மதியான முடிவு எற்பட்டதும் சாந்தமாய்த் தன்னை மறந்தாள். டாக் டரும் ஒரு பெண்ணின் கற்பை வளர்ப்பதற்குத் தாம் செய்யப் புகுங் காரியம் மேலான தர்மமாகுமென்று கருதினர்.

ஃ

ஆறு ஆண்டுகளும் விரைவாகச் சென்று விட்டன. சுசீலா இப்பொ ழுது லேடி டாக்டராக விளங்கு கிருள். வைத்திய கலாசாலைப் படிப் புடன் வீட்டிலும் சிறந்த டாக்டரின் போதிப்பும் எற்பட்டதால் அவள் மிகத் தேர்ந்தவளானுள். ஆசார திருத்தத்தில் மிக்க விருப்பமுள்ள ஒரு கனவான் சுசீலாவைத் தனது குமாரனுன எம். எ. வரையில் வாசி த்த சோமசுந்தரத்துக்கு விவாகம் செய்து வைத்துவிட்டார்.

ஃ

ராதாமங்கலத்தில் கோகிலம் தன் புத்திரியைப் பிரிந்து வாடினு ளென்றும், பல இடங்களில் தேடி யலுத்தாள் என்றும் சொல்லத்தேவை யில்லை. சுசீலாவின் தோழி விமலா மட்டும் அவ்வப்போது கடிதங்களால் சுசீலாவின் க்ஷேமங்களை அறிந்திருந் தாள். சுசீலாவின் விவாகத்தைப் பற்றி விமலா கோகிலத்துக்குக் கூறி ஞள். மறுதினம் சுசீலாவிடமிருந்தே கோகிலத்திற்கு விவாகப் பத்திரிகை யும் வந்தது. பெற்ற வயிற்றின் பாசம் விடுமோ? உடனே சென்னை வந்து தன் புத்திரியைக் கண்டு தழு விக்கொண்டு, தான் அவளைக் கெடுத் துப் பாழ்படுத்த நினைத்த மடமைக்கு மன்னிப்பு வேண்டினுள். விவாகத் திற்குப் பிறகு விமலாவுடன் தன் ஊருக்குச் சென்ருள். சுசீலா தன் பர்த்தாவான டிப்டி கலெக்டர் சோம சுந்தரத்துடன் சுகமே வாழ்ந்து வரு கிருள். அவளை ஆதரித்துக் காத்த டாக்டரின் பூரிப்பைக் கூறவும் வேண்டுமோ?

ஜெகந்நாதாச்சாரி.

மலையினின்று விழும் நீரருவிபோலத் தெளிவாயும் பரிசுத்தமாயும் இருக்கிற சுபாவமானது தன்னைப் போலவே உலகமும் களங்கமற்றதென்று நம்பிக் கடைசியில் ஹா! மோசம் போனேனே என்று அலறுகின்றது.



பெரியாரின் மொழிகள்



'லாங்பெல்லோ' (Longfellow)வின் பொன்மொழிகள்.

He who respects himself is safe from others;
He wears a coat of mail that none can pierce.

எவன் தன்னைத்தானே மரியாதை செய்து கொள்கிறானோ அவன் மற்றவர்கள் தன்னை ஒன்றும் செய்யாதபடி பாதுகாப்புடனிருக்கலாம். வேறொன்றும் தகர்க்கமுடியாததொரு இரும்புச் சட்டையை அவன் அணிந்து கொண்டிருக்கிறான்.

O friend! O best of friends!
Thy absence more.
Than the impending night darkens the landscapeo'er.

ஓ சிநேகனே! நண்பர்களுள் சிறந்தவனே! பயங்கரமான இரவின் இருள் அழகிய நிலத்தின் தோற்றத்தை மறைப்பதைவிட உன் பிரிவு அதிக துன்பத்தைத் தருகிறது.

In character. in manners, in style, in all things, the supreme excellence is simplicity.

குணத்திலும், மரியாதையிலும், ஒழுங்கிலும், இன்னும் எல்லா விஷயங்களிலும் மிகச்சிறந்தது அடக்கமே.

O thou child of many prayers!
Life hath quick sands,
Life hath snares!
Care and age come unawares!

தவங்கிடந்து பெற்ற குழந்தாய்! வாழ்நாளில் புதை மணல்கள் இருக்கின்றன; வாழ்வில் பல கண்ணிகள் (வலை) இருக்கின்றன. கவலையும், வயதும் தெரியாமலேவந்து உதிக்கும்.

Much have we suffered, much have prayed
That He would lead us as is best,
And show us what His will, required.

சிறந்த மார்க்கத்திற்குக் கடவுள் நம்மைக்கொண்டு செல்வதற்கும், அவருடைய இஷ்டம் எதுவோ அதை நமக்குக் காட்டுவதற்கும், நாம் வெகுவாகக் கஷ்டப்பட்டதோடு பல முறையும் துதி செய்தோம்.

All through life there are wayside inns where man may refresh his soul with love!
Even the lowest may quench his thirst at rivulets fed by springs from above.

நம்முடைய வாழ்க்கையின் மார்க்கத்தில் தங்குவதற்கான சாவடிகள் இருக்கின்றன. அவ்விடங்களில்

சிலர் நன்கு கற்றிருந்தும், சாதுக்கள்போல் தோன்றியும், தங்களின் சுபாவ குணத்தை மாற்றுதற்கின்றித் தங்களின் கபட புத்தியைப் பிறர் நன்கறியும்படி வெளிக்குக் காண்பித்து விடுகின்றனர். எந்தெந்த இடத்தில் எவ்வளவு வரை சுற்றிக்கொண்டு போகமுடியுமோவென்று ஆராய்வதே தொழிலாகின்றனர்.

மனிதன் அன்போடு தன் ஆவிக்கு ஓய்வு எடுத்துக்கொள்ளலாம். மேலிருந்து வரும அருவியில் தாழ்ந்தவர்கள் கூட தங்கள் தாக விடாயைத் தணித்துக் கொள்ளலாம்.

Happy, thrice happy every one.
Who sees his labour well begun,
And not perplexed and multiplied.
By idly waiting for time and tide.

காலத்திற்கும் நாளுக்கும் வீணை எதிர்பார்த்துகொண்டும், கலவரப் படுத்திக்கொள்ளாமலும், அதிகமாக் கிக் கொள்ளாமலும் தனக்குரிய வேலையைச் செவ்வனே ஆரம்பித்துக் கொண்டால் ஒவ்வொருவரும் சந்தோஷமாக—மும்மடங்கு சந்தோஷமாக—இருப்பார்கள்.

It is better, therefore, that men. should be constantly and quietly at work, each in his sphere, regardless of effects, and leaving their fame to take care of itself.

மனிதர்கள் தத்தமக்கு வகுத்துள்ள வழிகளில் பயனைச் சுற்றும் நினையாது, அதனால் உண்டாம் புகழையும் கவனிக்காது எப்பொழுதும் அமைதியோடு தம் வேலையைச் செய்யட்டும்.

Our cradle is the starting place,
In life we run the onward race.

நம்முடைய தொட்டில்தான் ஆரம்ப இடம். அதன் பிறகு நம் வாழ்நாளாகிய பந்தயத்தில் ஓட ஆரம்பிக்கிறோம்.

Our hearts are lamps for ever burning.
With a steady and unwavering flame,
Pointing upward, for ever the same.
Steadily upward toward the Heaven.

நம்முடைய இருதயங்கள் விளக்குகள் போன்று நிலைபெற்ற அலைந்திடாத சுவாலையோடு எப்பொழுதும் மேல் நோக்கி எரிந்து கொண்டிருக்கின்றன. எப்போதும்தேவலோகத்தை நோக்கிப்போய்க் கொண்டிருக்கிறது.

The heart of honour, the tongue of truth.

கண்யமான இருதயமும், உண்மையுள்ள நாவும் வேண்டும்.

Let us, then, be what we are'
and speak what we think,
and in all things
Keep ourselves loyal to truth,
and the sacred professions of friendsihip.

நாம் எப்படி இருக்கவேண்டுமோ அவ்வாறு நாம் இருப்போம். நினைப்பதை (அப்படியே ஒளித்திடாது) பேசுவோம். நாம் எவ்விஷயத்திலும் உண்மையைக் கடைப்பிடித்தும் நட்பின் முக்கிய அம்சங்களை நிறைவேற்றலாம்.

An odour of innocence, and of prayer,
And of love, and faith that never fails.
Such as the fresh young heart exhales.

களங்கமின்மை, துதி செய்தல், அன்பு கொள்ளுதல், குன்றாத நம்பிக்கை, ஆகிய இவைகளாலான சுவாசத்தையே வாலிப இருதயம் மூச்சாக வெளியே விடுகிறது.

P. G. குலசேகரன்.

தியாஸபியும் ஹிந்து மதமும்.

இந்தியாவில் தியாஸபிகல் சபையானது மூன்று விதமாக மாறிற்று. மதாம் பிளாவெட்ஸ்கி காலத்தில் இந்த சபையை ஏற்படுத்திய இருவரும் பௌத்த மார்க்கத்தைத் தழுவியவர்களானதால், இது ஒரு பௌத்த ஸமாஜம்போலிருந்தது. இவ்விருவரும் கிறிஸ்துவமதத்திற்குப் பெரும் விரோதிகளாயிருந்து கொண்டு ஹிந்துமதத்தினிடத்தில் அன்பு பாராட்டியதால் நம் ஜனங்கள் இதை மெச்சினார்கள்.

2

பிறகு ஸ்ரீ அன்னிபிஸண்டம்மை இந்தியாவுக்கு வந்தபொழுது இந்த ஸமாஜம் சற்று மாறுதலடைந்தது. ஸ்ரீ அன்னிபிஸண்டைக் கிறிஸ்து மதத்துவேஷியென்றும், 'பிரீதிங்கர்' (Free thinker) (அதாவது, தன்னுடைய புத்தியினாலே அறியக்கூடியது தான் வாஸ்தவமென்று சொல்லுகிறவர்) வகுப்பைச் சேர்ந்தவரென்றும், கிறிஸ்தவர்களால் மிக்க கஷ்டம் அநுபவித்தவரென்றும் அறிந்தபேதை ஹிந்துக்கள் இந்த அம்மையை ஸந்தோஷத்தோடும் ஏற்றுக்கொண்டனர். மேலும், இந்த அம்மை ஐக்கிய மாகாணத்திலிருக்கும் ஓர் யோகியின் அருளினால் ஹிந்துவாக்கப்பட்டு, ஹிந்துக்களின் ஆராதனைக் கிரமமும் உபதேசிக்கப்பட்டதாகத் தெரியவரவே ஹிந்துக்களின் மனம் பெருமகிழ்ச்சியுற்றுப் பொங்கிற்று. இந்தக் குதூகலம் சிலநாள் நீடித்திருந்தது. இந்த நிலையிலிருக்கும் போதுதான் காசியில் "ஹிந்து காலேஜ்" என்ற கல்விச்சாலையை இந்த அம்மை ஸ்தாபிக்கவும், அதற்காக இந்த அம்மை கேட்ட பொழுதெல்லாம் ஹிந்துக்களிடமிருந்து பணம் ஏராளமாகக் குவிந்திடவும் சாத்தியமாயிற்று.

3

நாளடைவில் இந்த நிலையும் மாறிவிட்டது. ஸ்ரீ அன்னிபெஸண்டு தமது இஷ்ட தேவதா விக்கிரகத்தை அதைத் தந்த யோகியிடத்திலேயே திருப்பிக் கொடுத்துவிட்டார். பிறகு இங்கிலாந்துக்குச் சென்றபோது அங்கு செய்த பிரஸங்கங்களில் 'கிறிஸ்து' மறுபடியும் வரப்போவதாகக் கூறத்தொடங்கி கிறிஸ்தவச் சாயலாக மாறினார். இந்த அம்மையாரிடம் வியக்கத்தக்க குணங்கள் பல இருக்கின்றதென்றாலும், விரைவில் மாறிவிடுந் தன்மையையே அதிகமாகக் காணும்படியாயிற்று. இவ்வாறாக தியாஸபிகல் சபை மூன்று தடவைகளில் வெவ்வேறு விதமாய் மாறிப் புதுமை விளைத்தது. இந்த சபையில் அங்கத்தினராவோர் பெற்றுவந்த, இச்சபையின் அங்கத்தினரென்று பொருளமைந்த யப். டி. எஸ். (F. T. S.) என்று எழுத்துப் பட்டத்திற்குப் பழயநாளிலிருந்த பிரமிப்பு இப்போதில்லை.

ஃ

இப்போது ஹிந்துமதத்தின் கொள்கைகளுக்கும் தியாஸபிகல்சபையின் கொள்கைகளுக்கும் எவ்வித ஒற்றுமையும் கிடையாது. அது வேறு; இது வேறு. இரண்டும் வெவ்வேறுதான்.

பத்மா.



இந்த வயதினிடையே கிரீசர் இவ்வளவு பூரணமான மனமகிழ்ச்சியை அடைந்ததில்லை. உள்ளத்திலே கங்குகரையின்றிப் பொங்கி யெழுந்த இன்ப வெள்ளத்தினால் அவர் முகத்தின் வெண்ணிறம் பன்மடங்கு அதிகரித்தது. அவரது அங்கங்களும் மந்தஹாஸம் புரிவதுபோல் விளங்கின. தென்புறம் தழைத்தோங்கி நின்ற அசோகமரத்தின் கீழ் கிரீசர் அங்குமிங்கும் விரைவாய் உலாவிக்கொண்டிருந்தார். அருகாமையில் எவரும் காணப்படவில்லை. தின்று நிறைந்த வயிற்றுடன் ஒரு பசு மேற்குப் பக்கமிருந்து மெதுவாய் நடந்து வந்து மிகுந்த களைப்புடனே காதுகளை அசைத்த வண்ணம் அமைதியாய்க் கிழக்கே திரும்பிற்று. இன்னிசை பாடும் சிறு பறவைகள் பறந்து சென்று செடி கொடிகள் அடர்ந்து படர்ந்த வேலிகள்மீதும், மரக்கிளைகள் மீதும் தங்கி இன்ப விளையாட்டமர்ந்தன. மாலையின் ரமணீயமான பொன்னிறம் எங்கும் பரவியது. இளந்தென்றல் மெல்லென தவழ்ந்து விளையாடித் தழுவிக் கொள்ளவே, அசோக மரங்கள் ஆனந்த மேலீட்டினால் அசைந்து சலசலவென்று ஒலித்தன. கிரீசரும் ஆனந்த பரவசமடைந்து ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினார். ஊரிலுள்ள பெண்மக்களைப் பெற்ற தந்தையரில் தன்னைவிட அதிர்ஷ்ட முடையோன் எவனுமில்லை யென்று அவர் தம்முள் கூறிக்கொண்டவராய் தலை நிமிர்ந்து ஆகாயத்தை நோக்கி நகைத்துக்கொண்டு "கிடைப்பதற்கரிய பாக்கியம்! அவர் என்னை இங்ஙனம் வேண்டிக் கொள்வாரென்று நான் கனவிலும் கருதி யிருக்கவில்லை. விவசாயசாலையின் சொந்தக்காரரான இராமேசரை மருமகனாகப் பெறவேண்டுமென்று பெற்றோர் பலர் காத்துக் கிடக்கின்றனர். வருவது வழித்தங்காது—எனது பத்மாவின் பாக்கியமே பாக்கியம்! இனி அவளைப்பற்றி எனக்கென்ன கவலை?" என்று வாய் விட்டுக் கூறுவாராயினார்.

ஃ

பலகணியின் வழியாய் வெளியே வீசிய தங்கநிறத் தீபவொளியைக் கண்டும், வளைகளின் கலகலவென்ற ஓசையைக் கேட்டும் குதூகலமடைந்தவராய் கிரீசர் குனிந்து அறையினுள் நோக்கினார். பத்மா நீராடி ஆடையாபரணங்களணிந்தவளாய் அங்கு வந்து விளக்கேற்றி வைத்துவிட்டுத் திரும்புவதைக் கண்டார். தீபப் பிரகாசத்திலே தெளிந்து காணப்பட்ட அப்பெண்பாவையின் குறைவிலாக் கோலத்தைக் காணவும், அவர் உள்ளத்தில் அன்பு வெள்ளம் கரை புரண்டெழுந்தது. அவர் மிகு

முயற்குட்டிக்கு சிங்கத்தை மணக்கும் பாக்கியம் வருமா? தெருவில் மிதிபடும் தும்பைப்பூ சூரியனை இச்சிக்கலாமா? ஆனால், நிறைவேறாத காதலை மறந்துவிடத்தான் முடிகிறதா?

ஆர்வத்தோடு அங்குற்று, "பத்மா! என் கண்ணே!" என்று அழைத்தார். உடனே "இதோ வந்து விட்டேன், அப்பா!" என்ற இன்குரலில் அறையினின்று பதில்வந்தது. "என் செல்வமே! இங்கே வா" என்று ஒரு இராஜ குமாரியிடம் வேண்டிக்கொள்வதைப்போல் கிரீசர் அன்பு ததும்பிய குரலில் மீண்டும் அழைக்க, பத்மா விரைந்து வந்து அவரருகே நின்றாள். அவளது ஆடைகள் குளிர் நிலவு பொழிகிற நீல விசும்பிடை ஒளிரும் வெண்மேகக் கூட்டம்போல் மின்னின. அவளது அழகொழுகும் முகமும், கருத்தடர்ந்த மெல்லிதழ் புருவங்களும், செம்பவள அதரங்களும், அம் மாலையின் மங்கிய செவ்வொளியிலும் தெளிந்து இனிமையாய் விளங்கின. மிருதுவாய் வீசிய இளங்காற்று அளவற்ற ஆர்வத்தோடு தாவிக் குதித்தோடி வந்து அவள் அங்கங் குளிரத் தழுவிக்கொண்டு சுருள் சுருளாகத் தொங்கிய மைக்கரும் கூந்தலை அங்கு மிங்கும் அசைத்து விளையாடியது. வானில் உதித்த இரண்டொரு விண்மீன்கள் இமையாது அவளையே உற்று நோக்கின. அந் நங்கையின் அழகெனுந் தேனினை அமிதமாயுண்டு மயக்குற்றதுபோல் மரங்களிலுள்ள இலைகள் பல சல சலவென்றசைந்தாடி தத்தளித்துக்கீழே விழுந்தன. சுருங்கக் கூறின், நவயௌவனத்தின் சௌந்தரியம் அவளது இனிய வடிவழகுடன் கலந்து பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவள் தனக்கியல்பான குறுநகையுடன் தந்தையின் முகத்தை நிமிர்ந்து நோக்கி, "என் அழைத்தீர்கள்?" என்றாள்.

ஃ

கிரீசர் முகம் பொலிவுற்றது. மனத்தெழுந்த பேரானந்தப் பெருக்கினால் கண்களில் நீர் ததும்ப, நாக் குழற அவர் கூறினார்:—கண்ணே! நீ மகா பாக்கியவதி. நான் உன்னிடம் உண்மையைக் கூறட்டுமா?...... நான் ஒரு விசேஷச் செய்தி கொண்டு வந்திருக்கிறேன்."

ஃ

பத்மா யாதும் புகலாது மௌனம் சாதித்தாள். அவளது இமைகள் சற்று அசைந்தன. அவள் தனது இனிய பார்வையைக் கிரீசர் முகத்தில் செலுத்தியவண்ணம் அசைவற்று நின்றாள். கிரீசர் அவளை நோக்கி, "விவசாயசாலையின் சொந்தக்காரரான இராமேசர் உன்னை மணம்புரிய விரும்புவதாக என்னிடம் கூறினார்; உடனே நான் அவசரத்தோடும், அதிசயத்தோடும், அடங்காப் பெருமகிழ்ச்சியோடும் அதில் எனக்கு எவ்வித ஆட்சேபனையு மில்லையென்று பதிலளித்தேன். அவருக்கு ஏதேனும் குறையிருந்தா லல்லவா, நாம் நீண்ட யோசனை செய்யவேண்டும்?" என்றார்.

ஃ

இது கேட்டு பத்மா திடுக்கிட்டாள். அவளறியாமலே அவளது கமலதள நேத்திரங்கள் குவிந்தன. முகப்பொலிவு குன்றியது. அவள் தழ தழத்த குரலில் கூறினாள்:— "ஐயோ! அவர் கிழவராயிற்றே. நரைத்த அவரது முகம்...எனக்குக் கலியாணமே வேண்டாம், அப்பா?"

"அவர் குரூபியா?" என்று கிரீசர் வினவி வாதப்போர் நிகழ்த்த

எண்ணற்ற பெருமூச்சுகளுக்கு இடையில் தன்னந்தனியே தான் சொல்லும் வார்த்தைகளைக் கேட்க மனிதர்கள் அருகேயில்லை யாயினும், அவை இறைவன் வரை எட்டும் வலிமை கொண்டுள்ளன.

முயன்றனராயினும், பின் ஏதோ நினைத்துக்கொண்டவர்போல் திடீரெனத் தம் மனதை அடக்கிக்கொண்டு "இராமேசர் திடகாத்திர முடையவர். சுதந்தர புருடர். திரண்ட செல்வத்தை ஏகபோகமாக அனுபவித்து வருபவர். இவ்வூராரனைவரும் அவர் வார்த்தைக்கு அடங்கி ஒடுங்கிப் பணிவாக நடந்து கொள்கின்றனர். ஆகவே, நீ வாயைச் சற்று மூடிக்கொள். நமக்கு அதிர்ஷ்டம் வரப்போகிறது." என்று கூறினர்.

பத்மாவின் முகமலர் வாடியது. அவள் விட்டுக்கொடுக்காமல் தந்தையிடம் பின்வருமாறு மன்றாடினாள்:—

"அப்பா! எனக்குப்பணமும்வேண்டாம், கலியாணமும் வேண்டாம்" என, கிரீசர் அவளை நோக்கிக் கூறியதாவது:—" இப்போது உனது மனம் மாறுபட்டிருப்பதால், அவர் உன் கண்களுக்குக் குரூபியாகத் தோன்றுகிறார். அவலக்ஷணம் ?—ஓ! அதெல்லாம் அடியோடு நீங்கிவிடும். சுந்தரனை அம்மனோகரன் எவர் ஆதரவில் இருந்து வருகிறானென்று உனக்குத் தெரியுமா? ஒளி, அழகு யாவும் பணமாகும். பணமே இதயம், பணமே இரத்தம், உடலகத்திருக்கும் உயிரும் அப்பணமே. உலகினர் முதலில் விரும்பும் அழகு பணமேயாகும்."

ஃ

மனோகரன் என்ற பெயரைக் கேட்டதும் பத்மாவின் முககமலம் மலர்ந்தது. அவள் அங்கமெல்லாம் ஆனந்தத்தால் துடித்தன. இன்னதென்று வகுத்துரைக்க வொண்ணாததோர் மேல்மூச்சு அவளது தளிர் அதரங்களினூடே வெளிப்பட்டெழுந்தது. அவள் தலையசைத்து அவர் கூறியதை மறுத்தாள். கிரீசர் கலக்கமடைந்தார். அவரது சந்தோஷமெல்லாம் அறவே மறைந்தது. அவர் தாழ்ந்த குரலில் அவளை நோக்கிப் புகன்றார்.

" நீ முட்டாள்தனமாய் உளருதே! நான் அவருக்கு வாக்களித்து விட்டேன்—வலிய வரும் ஸ்ரீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளாதே—ஆம்; ஆம். உனக்குக் கலியாணம் வேண்டாமென்று கூறியது யார் ?"

"யார் என்கிறீர்களா? நானே கூறுகிறேன். என் வாழ்க்கையைப் பற்றிய விஷயத்தில் தங்களைவிட எனக்கே அதிக உரிமையுண்டு. விவாக விஷயத்தில்—அதில் எற்படும் இன்ப துன்பங்கள் என்னைச் சேருமேயன்றித் தங்களைச் சேராவாதலின், அதன் சம்பந்தமாய் வாக்கு தரவோ மறுக்கவோ எனக்கே அதிக சுதந்திரத்தை விடவேண்டியதுதான் தர்மநியாயம்" என்றாள் பத்மா.

கிரீசர் பத்மாவின் மதிமுகத்தை உற்று நோக்கினர். பாதி குவிந்த மலரிதழ் கண்களோடு அவள் அசைவற்று நின்று கொண்டிருந்தாள். அது கண்டு கிரீசர் சஞ்சலமடைந்தவராய் சற்று உறக்கக் கூறலுற்றார்:—"இது என் கெட்ட வேளையின் பயனே! பத்மா! நான் ஒன்று சொல்லுகிறேன். நீ என் விருப்பத்திற்கு இணங்காவிட்டால் நான் உயிர் தரித்திரேன். இனி நீ போகலாம். நான் உன் தாயாரிடம் இதைக் கூறுகிறேன்."

பிறர் வருகிற சமயத்தில் தங்களின் காரியங்களை மூடி மறைப்போர் பலராவர். அந்த ஜாடை யறிந்து அவர்கள் நம்மை அன்னியர்களாக நினைக்கின்றனரென உணர்ந்து மரியாதையாக ஒதுங்குவதே நலம்.

II

கிரீசர் நாற்காலியில் அமர்ந்து மிரள மிரள விழித்துக்கொண்டிருந்தார். அவரது மனைவி ஆவேசத்தோடு தன் மகளருகே சென்றாள். பத்மாவின் முகம் இரத்தம்போல் சிவந்தது. அவள் விம்மி விம்மிப் பொருமியவாறு மேற்குப் பக்கமிருந்த வேலியினருகே சென்று மாமரத்தின் கிளையொன்றைப் பிடித்துக்கொண்டு புழுதி நிறைந்த தெருவை நோக்கிய வண்ணம் நின்றாள். அவளது விழிகள் மலர, மலர ஆங்காங்கு ஒன்றிரண்டொன்றாய் கண்ணீரால் ஒட்டிக்கொண்டிருந்த இமை மயிர்கள் காற்றினால் உலர்ந்துப் பிரிந்தன. அவள் முகம் சற்று வீங்கியிருந்ததெனினும் அவளது அருந்துயர் ஒருவாறு நீங்கி யிருந்தது. இந்நிலையில் அவள் மெல்ல நகைத்தனள். அவள் கண்கள் ஆனந்தப் பேரொளி வீசித் திகழ்ந்தன. முகம் முன்னையிலும் பன்மடங்கு பொலிவுற்று விளங்கியது. பத்மா உறுதியான குரலில் தனக்குள்ளாகவே பின்வருமாறு கூறிக் கொண்டனள்:—

"நான் என் வீணாகக் கவலைப்படவேண்டும். வருவதெல்லாம் வரட்டும். மணம் புரியினும், புரியா விடினும் எனக்கென்ன? எனது வாழ்நாளின் இன்பத்தை நான் ஒரு போதும் பலியிடேன். ரமணீய உலகில் நான் இன்புற்று வாழ்வேன்; இன்பமற்ற உலகை நான் அடியோடு வெறுப்பேன்."

ஃ

பத்மா கலைந்த கூந்தலைச் சரிப்படுத்தி முகத்தின் மாசைத் துடைத்துக்கொண்டு வீட்டிற்குள் விரைந்தேகினள். முன்போல் அவளிடம் சுறுசுறுப்பும் உற்சாகமும் குடிகொண்டன. அது கண்டு அவளது தாயார் பேராச்சரிய மடைந்தாள். தந்தையோ முன்னிலும் அதிக சந்தோஷத்தோடு பத்மாவை மார்போடணைத்து "நீ நீடூழி வாழ்க!" என வாழ்த்தினர். பத்மா பதில் ஒன்றும் கூறவில்லை.

ஃ

கிரீசர் வீட்டில் எல்லாரும் குதூகலமாக விருந்தனர். அங்கு எப்போதும் கேலிச் சிரிப்பும், சந்தோஷ ஆரவாரமும் மிகுந்திருந்தன. சில வேளைகளில் அவ்வீட்டினின்று வெளிப்பட்டெழுந்த பத்மாவின் இன்குரலைக் கேட்டபோதெல்லாம் வீதி வழியாகச் சென்ற இளைஞர் இதய வேதனையோடு தலை நிமிர்ந்து அவ்வீட்டை நோக்கிப் பெருமூச்செறிந்தனர். நிச்சயதார்த்த தினத்திற்குமுன் விவசாயசாலையின் சொந்தகாரரான இராமேசர் தமது காரியதரிசியான மனேகரனோடு மீண்டும் ஒருமுறை அங்கு வந்திருந்தார். அப்போது அவர் பூண்டிருந்த ஆடையாபரணங்கள் விலைமதிக்க வொண்ணாதவையாயிருந்தன. அவர் விரல்களிலிருந்த மோதிரங்களில் இழைக்கப் பெற்ற விலையுயர்ந்த வைரக்கற்கள் ஒளிவிட்டுப் பிரகாசித்தன. அதுகண்டு பத்மாவின் தாயாருக்கு உடம்பு பூரித்துப் போய் விட்டது. அவள் பார்வை அடிக்கடி அவர்மீது சென்று கொண்டிருந்தது. இராமேசரிடம் ஒருவித மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டன.

ஃ

அந்த சமயத்தில் பத்மா வீட்டினுள்ளே மதிப்பும் மரியாதையுமாக வடப்பக்கத்துச் சுவரில் சாய்ந்து நின்று வாசல் வழியாகத் தென்புறம் நோக்கினள். அங்கு விநயம் மிகுந்த கிரீசரோடு இன்பமாக சம்பாஷித்துக் கொண்டிருந்த இராமேசரும், நயன மோஹனனான மனேகரனும் வாசலுக்கெதிரே இருக்கக் கண்டாள்.

உடனே சந்திரோதய காலத்தில் பொங்கியெழும் சமுத்திரம்போல் அவள் மனம் பொங்கி விசேஷ சம்பூர்த்தி யடைந்தது. வாரி முடித்திருந்த அவள் கூந்தல் கலைந்து மலையினுச்சியில் கார்மேகம் திரண்டிறங்குவதுபோல் அவள் தோள்மீது வந்து தங்கியது. ஓர்வகை ஆனந்த புளகிதத்தளாய் அவள் நெஞ்சு துள்ளிற்று. அவள் ஆயிரம் இனிய எண்ணங்களோடு எழில் வழியும் அவன் முக விலாசத்தை இமைகொட்டாது நோக்கினள். மனோகரனும் அப்பொழுதுதான் அவளை நோக்கினன். இருவர் கண்களும் கலந்து உறவாடின. அதே நிமிடம் மனோகரனின் முகம் தன் இயற்கை நிறம் மாறி வெளிறிற்று. பத்மாவின் சர்வாங்கமும் பதறியது. உள்ளத்தில் விளக்கேற்றி வைத்ததுபோல் அவள் உச்சி முதல் உள்ளங்கால்வரை ஜொலித்தாள். மறுகணம் கதிரவன் வெப்பத்தை ஆற்றாத இளந்தருபோல் தடுமாறித் தத்தளித்து ஒருபக்கம் சாய்ந்தாள். மனோகரன் கலவரமான முகத்துடன் பின்னால் நகர்ந்து மறைந்து கொண்டனன். இராமேசர் வாசல் வழியாக நோக்கியபோது திரும்பிச் செல்லும் பத்மாவின் ரோஜாப்பூவையொத்த கன்னமும், கம்மல் ஒளிரும் காதும், சுருள் சுருளாய்ப் படர்ந்த கரிய கேசங்கள் திகழும் பொன்னிறக் கழுத்தும், அவர் கண்களுக்குத் தென்பட, அவர் உள்ளம் வெகு பரவசமடைந்து துள்ளிக் குதித்தது. மனோகரன் சற்று தூரத்தில் தன்னந்தனியனாய் நின்று பெருமூச்செறிந்தான். (தொடரும்.)

T. S. சங்கரலிங்கம்.

சிலருக்கு ஏராளமான சொத்துகளிருந்தும், சந்தோஷமாய் அனுபவிக்கப் பிராப்தமில்லை. சொத்துகளிருக்கின்றன, புத்திரப்பேறில்லை. பிறகு சுவீகாரமாக ஒரு குழந்தையை எடுத்து வளர்க்கின்றனர். அவன் சற்று பெரியவனானதும் அவனை விரோதிக்கின்றனர். தங்களைச் சேர்ந்தவர்களையும் தூற்றி வாசல்வழி மிதிக்கக்கூடாதென்கின்றனர். வருவார் போவாரிடம் தங்களின் பெரிய வீடுகளைத் திறந்து காண்பித்துப் பூரிக்கின்றனர். பூரித்து என்ன செய்ய? அந்த செல்வத்தையும் வீட்டையும் தான் ஒண்டியாகவே அனுபவித்து மகிழ முடியுமா?

ஆப்ரிக்காவிலுள்ள எதியோப்பியா எனும் கறுப்பு ஜாதியினருள் பஜோதிகள் என்றோர் பிரிவிருக்கிறது. இவர்களுடைய அரசருக்குப் பால்ய முதல் 40 மனைவிகள் விவாகம் செய்து வைக்கப்பட்டனர். அரசருக்கு வயது 70 ஆனதும் 12 பேர் மாத்திரம் அரண்மனையிலிருக்க அனுமதிக்கப்பட்டனர். மற்றவர்கள் வெளியே அனுப்பப்பட்டனர். இந்த 12 பேர்களில் தாமிறந்த பிறகு நால்வர் தம்கூடவே யிருக்கவேண்டுமென்று அவ்வரசர் எண்ணினர். அந்நோக்கம் கைகூடுவதற்காக அவர் அழகு மிகுந்த 4 பால்ய மனைவிகளைப் பொறுக்கி எடுத்துத்தாம் இறந்த பிறகு அவர்களை உயிருடன் தம் புதை குழியில் அடக்கம் செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டிருந்தார். அவருடைய வார்சுகள் அந்த மனோபீஷ்டத்தைப் பூர்த்தி செய்வித்தார்கள் என்பதாகப் போர்த்துகீஸ்கினியில் ஹ்யூஜோபெர்னாட் ஜிக் எனும் ஓர் ஆசிரியர் பிரசங்கம் செய்தபொழுது கூறினர்.

தமிழ்நேசன்.

ஜாதீய ஐக்கியத்திற்கு மத ஒற்றுமை அவசியமா?

"மதம்" என்பதும், "ஜாதீயம்" என்பதும் ஒன்றுக்கொன்று சம்பந்தமுறாத இரு வேறு விஷயங்களாகும் என்பது இங்கு முதலில் கவனிக்கப்படுதல் வேண்டும். மனிதனுடைய ஆத்மார்த்தமான நன்மைக்கும், மறுமையில் அவன் அடையவேண்டிய சுகத்துக்கும் வழிகாட்டியாக இருந்து உதவிபுரிவது மதமாகும். இம்மைப் பயனுக்கும், இகலோக வாழ்வினுக்கும் இன்றியமையாததாய் வேண்டப்படுவது ஜாதீயமாகும். ஜாதீயம் என்றால், ஒரு தேசத்திலுள்ள எல்லா ஜாதியார்களும் ஒருமனப்பட்டு, பரஸ்பரம் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துக்கொண்டு மொத்தத்தில் ஏக சிந்தையும், ஒரே அபிப்பிராயமும் கொண்டவர்களாய் ஒரு ஜனமாக நிர்மாணமாவதாகும். பொதுஜன நன்மைக்குரியதான இவ்வாறு சகல ஜாதியார்களும் ஒன்றுபடுந் தன்மையை அவ்வத் தேசங்களில் தேசாபிமானிகள் முயன்று பேராச்சரியத்தை விளைவிக்கக்கூடிய விதமாய் வெற்றியடைந் திருக்கிறார்கள்.

ஃ

மதம் மறுமைப்பயனை அளிப்பதோடு, எல்லாம் வல்ல இறைவனுடைய திருவருள் மூலமாய் இம்மைப் பயனையும் விளைக்கவல்லதென்பதும், மதத்தினின்றும் வேறுபட்டதான வெறும் ஜாதீயம் என்பது இம்மைப் பயன் ஒன்றை மாத்திரம் அளிக்கும் ஆற்றலுடையதே தவிர, மதத்தைப் போல மறுமைப்பயனைக் கொடுப்பிக்கும் இயல்புடையதல்லவென்பதும் இங்கு நுனித்து அறியப்படுதல் வேண்டும். ஃ

இருந்தபோதிலும், மனிதனுடைய சிற்றறிவினால் அறிந்திடுதற்கு ஏலாதவாறு அருவமாய் விளங்கும் முழுமுதற் கடவுளைப்பற்றிப் பிரஸ்தாபிக்க மதங்கள் எழுந்தனவாதலால், அவை மனிதனுடைய ஆன்ம அறிவின் ஏற்றத்தாழ்விற்கு ஏற்ப, எண்ணிறந்த பேதங்களோடு இவ்வுலகத்தில் நிலவி வருகின்றன. ஒவ்வொரு மதஸ்தாபகர்களும் தங்களுடைய அறிவு நிலைக்கு ஏற்பவும், ஆராய்ச்சி வன்மைக்கு இணங்கவும் முயன்று தாங்கள் உண்மையெனக் கண்டவற்றை விவரித்து மதஸ்தாபனம் செய்திருக்கின்றார்கள். பலதிறப்பட்ட அறிவு நிலையில் இருந்து மதஸ்தாபனஞ் செய்த பலருடைய கொள்கைகளையும் ஒன்றுபடுத்துவது எங்ஙனம் சாத்தியமாகும்? மக்கள் எல்லோருக்குமே ஒரே தன்மையான அறிவுநிலை ஏற்படுதல் வேண்டும். அவ்விதம் ஏற்பட்டபோதுதான் மத ஒற்றுமை உண்டாதல் சாத்தியமாகும். ஆனால், அவ்வாறாக ஒரே விதமான அறிவுநிலை மக்கள் எல்லோருக்கும் ஏற்படுமென்பது இயற்கைக்கு விரோதமாதலால், அவ்விஷயம் சாத்தியமாகக் கூடியதன்று.

ஃ

ஆகவே, மத ஒற்றுமையின் மூலமாகத் தேசநன்மையும், எல்லா ஜாதியார்களும் ஒன்றுபட்டு உழைப்பதான

(351-ம் பக்கம் பார்க்க.)



"மிக்க நெருங்கிய உறவினனாக ஒரு சண்டாளன் இருக்கிறான். அவனோ வெகு சன்மார்க்கன் போல் பசப்புகிறான். அந்தரங்கத்திலோ விபசாரக் கள்வனாகத் தோற்றுகிறான். வீட்டுப்பெண்களிடம் அதிகப் பேச்சை வைத்துக்கொள்கிறான். பெண்களை மயக்கும் தந்திரஜித்தாகவும் இருக்கிறான். தான் வரப்போக இருப்பதற்கு நமது தயவும் வேணுமேயென்று நம்மிடத்திலும் வெகு வெகு அன்பாக நடந்துகொள்கிறான். நாம் எந்த வேலையைக் கூறியபோதிலும் வெகு சிரத்தையாக முடித்துவிடுகிறான். எள் என்பதற்கு முன் எண்ணெயுடன் நிற்கிறான். ஒரு கடியாரத்தை ரிப்பேர் செய்துவாவென்றால், அதைத் தனது செலவிலேயே பழுதுபார்த்துச் செம்மைப்படுத்திக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு அதற்கு ஒரு காசும் தரவேண்டியதில்லையென்கிறான். நமது வீட்டில் ஏதேனும் அசௌக்கியமாகி மனுஷ்யாளில்லாவிட்டால் உடனே தன் மனைவியையோ, தன் தாயையோ துணைக்காக அனுப்பிவிடுகிறான். இவ்வாறெல்லாம் ஒரு பக்கம் நமக்குத் தாசானுதாசனாகவும் மகா யோக்கியமான ஊழியனாகவும் நடந்துகொள்வதைக் காண்கையில், இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்று நினைத்து அந்தப் பூனையைப் பாலுக்குக் காவலாக வைக்கலாமென்றுங் கூட எண்ணும் விதமாக நமது புத்திமாறிப் போய் அவன்மீது பிரியம் கொள்ளவும் வைத்துவிடுகிறது. இவ்விதம் விசுவாசப் பூனையாக நடந்துகொண்டு அந்தரங்கமாய்ப் பெண்களிடமும் வார்த்தைகளை வைத்துக் கொள்கிறான். இந்தச் செய்கை நமக்குச் சகிக்கமுடியாமற் போய்விடுகிறது. என்ன செய்யலாமென்று யோசித்துக் கடைசியில், அவனிடமே நேரில் 'நீ வீட்டுப் பெண்களிடம் அதிக வார்த்தை வைத்துக்கொள்வதால், நீ இனி நான் இல்லாத காலத்தில் இந்த வீட்டுக்கு வரவேண்டாம்' என்று கண்டித்துக் கூறிவிடுகிறோம். அவனும் மௌனமாகத் தலை வணங்கி நாணிச் சென்றுவிடுகிறான். இத்துடன் இவனுடைய விஷமத்தொல்லை தீர்ந்ததென்று நினைத்துக்கொண்டு ஒருவித ஆறுதலை யடைகிறோம்.

ஃ

சில மாதங்கள் செல்கின்றன. நமது வீட்டிலே ஒருவர் வியாதியாய்ப் படுக்கிறார். அவரைப் பார்ப்பதற்கு வருவதுபோல் இந்தச் சண்டா

(350-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஜாதீய ஐக்கியத்தையும் உண்டாக்கிக் கொள்ளவேண்டுமென்பது நிறைவேறாத காரியமாகும். ஜாதீய ஐக்கியம் மத ஒற்றுமை யில்லாமலே உருக்கொள்வது சாத்தியப்படும். பரஸ்பரம் மதத்துவேஷத்தை யொழித்து சமரஸ நோக்கு அதிகப்படுமாகில், அதுவே ஜாதீய ஐக்கியத்தை உண்டுபண்ணுவதற்குப் போதுமானதாகும். ஜாதீய ஐக்கியம் ஒரு உருக்கொண்டு திடம்பெற்றவுடன் மத சமரஸஞானமும் தானே யுண்டாகி, யாவரும் ஸகோதரத்வமாய் வாழ்தலும் கூடும்.

ளானும் அவன் மனைவியும் தாயும் வருகிருர்கள். நாம் அப்பொழுது அவனை என் வந்தாயென்று தடுக்க முடிகிறதில்லை. நாம் இல்லாத காலத்தில் வராதே யென்றல்லவோ நாம் அவனுக்குச் சொல்லியிருக்கிறோம். நாம் வீட்டில் இருக்கிற காலத்தில்தானே அவன் வந்திருப்பதால் அதைக் குற்றமாகப் பேசுகிறதற்கில்லை. நாமும் சரி சரியென்று இருந்துவிடுகிறோம். அந்தச் சண்டாளனும் நம்மிடம் வெகு பிரியம்போல் நடந்துகொண்டு மயக்குகிறான். வீட்டிலே குழந்தைகட்குப் பக்ஷணங்கள் வாங்கிவந்து தருகிறான். நமது வீட்டுத் தோட்டத்தில் மரம் செடிகளை யெல்லாம் சீர்திருத்தி ஒழுங்குபடுத்துகிறான். கடைக்குச் சென்று வீட்டுச் செலவுகளை வாங்கி வரவும், வீட்டுக்கான காய்கறிகள் வாங்கி வரவும் போகிறான். இப்படிப் பழக்கம் ஆனபிறகு, அதுமுதல் முன்போல் அடிக்கடி நம் வீட்டிற்கு வந்து போவதை வழக்கமாக்கிக் கொள்கிறான். நாமும் முன்புகொண்டிருந்த கண்டிப்பைத் தளர்த்திவிட்டுச் சமரஸமாக இருந்துகொள்கிறோம். வரவர இவனுடைய வரத்துப் போக்குகள் அதிகமாகின்றன. அடிக்கடி சமையற்கட்டிற்குச் சென்று அங்கு பெண்களிடம் பேசத் தலைப்படுகிறான். நமக்கு இது சகிப்பதில்லை. மறுபடியும் கோபம் அதிகமாகி, "நீ வந்தால் என்னிடம் வார்த்தை வைத்துககொண்டு அவ்வளவில் போய்விடு; வீட்டுப்பெண்களிடம் எவ்வித பேச்சும் வைத்துக்கொள்ளக் கூடா" தென்று கண்டித்து விடுகிறோம். அவனும் அந்த சமயத்துக்கு மிக்க வணங்கியவனாகச் சென்று விடுகிறான். இத்துடன் இவன் சங்கடம் ஒழிந்ததென்று ஆறுதல் கொள்கிறோம். சில மாதங்களும் கடந்து விடுகின்றன.

ஃ

தீபாவளி வருகிறது. அதற்குப் பட்டாசுக்கட்டுகள் முதலியன வாங்கி வந்து நமது குழந்தைகளிடம் கொடுக்க வருகிறவன்போல் வருகிறான். நமது குழந்தைகளோ அவன் கொடுத்த பட்டாசுக்கட்டு, மத்தாப்புப்பெட்டிகளை வெகு சந்தோஷத்துடன் வாங்கிக்கொண்டு குதூகலிக்கின்றன. நாம் அச்சமயம் என்ன செய்வது? குழந்தைகளிடமிருந்து பட்டாசுக்கட்டுகளைப்பிடுங்கி எறிந்துவிட்டு அவனையும் போ பயலே! என்று துரத்துவதா? அப்படிச்செய்ய மனம் வராமல் உறவின் பாசமும் நமது ரத்தத்திலே ஓடிக்கொண்டிருப்பதால், அவனை வா அப்பா என்று சொல்லும்படியாகி விடுகிறது. சாப்பிட்டுவிட்டுப் போ என்றும் கூறுகிறோம். அவனும் அது முதல் வீட்டோடு ஒட்டிக்கொண்டு விடுகிறான். அடிக்கடி வரப்போக ஆகிவிடுகிறான். நாம் அவசர வேலையாகப் பக்கத்து கிராமத்திற்குப்போய் ஒரு வாரம் வரையில் இருக்கும்படியாகிவிடுகிறது. அந்த சமயம் நம் வீட்டில் ஏதோ பிணி தோன்றிக்கொள்ள அதற்காகக் காணவந்ததுபோல், அவனும் அவனைச் சேர்ந்தவர்களும் ஆறு நாட்கள்வரை நம் வீட்டில் உட்கார்ந்துகொள்கிறார்கள். நாம் கிராமத்திலிருந்து திரும்பி வீடுவந்ததும் இவர்களெல்லாம் வீட்டிலிருப்பதைப் பார்க்கிறோம். வீட்டிலுள்ள கடியாரம் வாரமாய்விட்டதால் ஓடாமல்

அதிக அதிகாரம் பெற்றவர்கள் பிறருக்கு இழைக்கும் சொற்ப துன்பத்தால் ஒரு குடும்பமே வருந்தும்படியான கேட்டைச் செய்து விடுகின்றனர். அதன் பாபம் பிற்காலத்தில் அவர்களுக்குப் பலவித சோதனைகளை விளைத்து விடுகின்றது.

நின்றுபோயிருக்கிறது. அதற்குச் சாவி கொடுக்கப் போகிறோம். ஆனாலோ, முழுச்சாவியும் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பிறகு அந்தரங்கமாய் விசாரிக்கையில் நாம் வருவதற்குச் சற்றுநேரம் முன் வரையில் கடியாரம் ஓடிக்கொண்டிருந்ததென்றும், கடியாரத்துக்கு அவன் சாவி கொடுத்தானென்றும், நாம் வருகிற நேரத்தை யறிந்து கொண்டபின் கடியாரத்தை ஓடாமல் நிறுத்திவைத்தானென்றும் தெரிகிறது. கடியாரத்துக்குச் சாவிகொடுத்தது தப்பிதமல்ல; இந்த விதமாய்க் கபடமாகக் கடியாரத்தை நிற்க வைத்து, அதற்குச் சாவியே தராதது போல் காட்டுகிற வஞ்சகபுத்தி எதற்காகவென்றே நாம் கோபம் கொள்கிறோம். இதைப்பற்றி அவனிடம் கேட்டு வீண் சண்டை எதற்காக வென்று மௌனமாக இருந்துவிடுகிறோம். மறுநாட் காலையில் நமது ஜாடை தெரிந்து கொண்டுஅவனும் அவனைச் சேர்ந்தோரும் புறப்பட்டுப் போய்விடுகிறார்கள்.

ஃ

இவ்விதம் எத்தனை நாள்தான் பொறுப்பதென்று மனதுக்கு மிக்க கசப்பாகி, அவனை இனி என்றைக்கும் இந்த வீட்டிற்கு வரவேண்டாமென்று சொல்லும்படியும், நான் ஊரில் இல்லாத காலத்தில் அவன் இங்குவந்து தங்கியது தகாதென்றும் அவன் தாய்க்கு ஒரு ரிஜிஸ்தர் கடிதம் அனுப்பிவிடுகிறோம். அது முதற் கொண்டு அவனும் வருவதில்லை. எனக்கு ரிஜிஸ்தர் கடிதம் அனுப்பினனேயென்று அவன் தாயும் ஆங்காரப்பட்டுக்கொண்டு வருவதில்லை. பிறகு நாம் வெளியூருக்குப் போயிருக்க நேர்ந்தால், அந்த சமயம் பார்த்து அவன் வீட்டிற்கு வந்து போகிறான். இதை அவன் தாய்க்குக் கடிதமூலமாகத் தெரிவித்துக் கண்டிக்கிறோம். பிறகு வராமலே இருந்து மற்றொரு சமயம் வெளியிடங்கட்கு நாம் போயிருக்கும்போது அவனும் அவன் தாயும் அவன் தங்கையும் நமது வீட்டிற்கு வந்து நான்கு தினங்கள் தங்கிச் செல்கிறார்கள். இதை நாம் திரும்பி வந்த பிறகு அறிகிறோம். இதற்கு நாம் என்ன செய்கிறது?" என்று நன்னெறி அல்லர்பிச்சை இன்று கூடிய நமது கடையில் கேட்டார்.

ஃ

"பெண்கள் வந்து போகட்டும், அதைப்பற்றி யாருக்கும் ஆக்ஷேபமில்லை. ஆனால், அவ்விதம் வருகிற பெண்கள் வீட்டுக்காரன் இருக்கிற போது வீட்டிற்கு வருகிறதுதானே? தாங்கள் என்னவோ மிக்க ரோஷமுடையவர்களாகி வராமலிருப்பது போல் வீட்டுக்காரனுக்குக் காண்பித்துக்கொண்டு, வீட்டுக்காரன் ஊரில்லாதபோது ரகசியமாய் வீட்டுக்கு ஏன் வந்துபோக வேணுமோ? தாங்கள் வந்ததை வீட்டுக்காரனிடம் சொல்லாதிருக்கும்படி வீட்டிலுள்ள பெண்களுக்கு ஏன் சொல்லவேணுமோ? ஒரு பக்கத்தில் வீட்டிலுள்ள மற்றவர்களுக்கு இப்படியாக மிக்க வேண்டியவர்களாகக் காட்டிக்கொள்கிறது; மற்றொரு பக்கத்தில் வீட்டுக்காரனைத் துவேஷித்துத் தாங்கள் மகா ரோஷமுள்ளவர்களாக நடித்துப் பெருமை கொண்டாடிக்கொள்கிறது; இவ்விதமாக ஒருபக்கம் பகையும், மற்றொரு பக்கம் உறவுமாக

சிலர் ஒருவனை வெகு பிரீதியாக நேசித்துத் தாங்கி, அதிசீக்கிரத்தில் தானே அன்னிய மனிதர்களாக மாறிவிடுகின்றனர். நெருங்கிவரினும் தூர விலகுகின்றனர். இது என்ன நிலையற்ற சுபாவமோ?

இருப்பது பிரித்துக் கெடுக்கிற மித்திரபேத தந்திரமல்லவா? இத்தகையோர் விஷப்பாம்புக்குச் சமானமானவர்களானாலும், பெண்கள் வந்துபோவதைப்பற்றி நாம் ஒன்றும் சொல்லாமலே, அவர்கள் வந்ததே தெரியாதது போல ஜாடையாக இருந்துவிடலாம். ஆனால், அநுகூல சத்துருவாகவும், பெண்களிடம் அதிகப் பேச்சுகள் வைத்துக்கொள்கிறவனாகவும் இருக்கிற அந்த மனிதன் வீட்டுவாசல் ஏறாதபடி எப்போதும் கண்டித்து வைக்க வேண்டியதுதான். அவனுடைய சகவாசமே கூடாதுதான். இத்தகையோர் குடித்தனத்தைக் கெடுக்கும் குளிர்ந்த கொள்ளிகள்" என்று தண்டாயுதம் செட்டியார் பகர்ந்தார்.

ஃ

"ஒரு சங்கதியைக் கேட்டதும் ஆத்திரமுண்டாகிறது. கடுங்கோபத்துடன் துள்ளுகிறோம். ஆனால், நாம் புத்திசாலித்தனத்தோடும் அப்போது செய்ய வேண்டிய காரியமென்ன? ஆத்திரமுண்டாக்கிய சங்கதியைப் பற்றி நாளை ஒரு முடிவோ, தீர்மானமோ செய்யலாமென்று ஒதுக்கி வைத்து; இன்று அந்த சங்கதியிலிருந்து நமது மனத்தைச் சற்றே விலக்கிக்கொண்டு ஆறவிடுவதே சரி. பிறகு நாளைக்கு இந்த விஷயத்தைப் பற்றி நாம் சாந்தமான உள்ளத்தோடும் யோசிக்கப் புகுந்தால் நேற்று ஆத்திரப்பட்டுச் செய்யவிருந்த முடிவை இன்று மாற்றிக்கொள்ளும் படியாகவும் தோன்றக்கூடும்" என்று ஜெயராம் தேவர் செப்பினர்.

ஃ

"ஆம், ஆத்திர கோபங்களை ஒரு தினம் வரையிலாவது அடக்கி வைப்பதே சரி. நேற்று கோபத்தால் துள்ளிக் குதித்தோம். இன்று அதை நினைத்துப் பார்த்தால் நேற்று அவ்விதம் கோபத்தால் ஆரவாரித்திருக்க வேண்டியதில்லை யென்றும், அவ்விதம் தடபுடல் செய்யாமலே இருந்திருந்தால் நன்றாயிருந்திருக்குமென்றும், அவ்விதம் கோபமாகத் துள்ளியது அவசரப்பட்ட பெரும் மூடத்தனமென்றும்இன்று நமக்குத் தோன்றலாம்" என்று மோர்க்குழம்பு பண்டாரம் ஆதரித்துப் பேசினர்.

ஃ

"வீட்டில் குழந்தைக்கு மிக்க வியாதியாக இருக்கிறது. மூன்று மைலுக்கு அப்பாலுள்ள இடத்தில் வைத்தியர் இருக்கிறார். அங்கு நமது மனைவியைக் குழந்தையுடன் ஒரு பெண் துணையோடும் அனுப்புகிறோம். மனைவியின் பந்து வீட்டாருக்கும், நமக்கும் விரோதமாதலால், உன் உறவினர் வீட்டுக்குப் போகாதே என்று மனைவிக்குக் கண்டிப்புடன் சொல்லுகிறோம். அவளும் நான் அங்கு போகவில்லை யென்று கூறிவிட்டு வைத்தியரிடம் சென்று மருந்து வாங்கிக்கொண்டு திரும்பி வருகிறார்கள். இதற்குப் பிறகு இன்னொருவர் மூலமாக நமக்கு ஒரு சங்கதி எட்டுகிறது. அவள் தன் பந்து வீட்டுக்குப் போய் விட்டு வந்து, நம்மிடம் அதைச் சொல்லாமல் மறைத்துவிட்டதாகத் தெரிகிறது. இதில் நமது மனது எவ்வளவோ கோபமும் ஆத்திரமும் கொள்கிறது. நமக்கு விரோதமா

மிகுந்த பசியுடனே ஒருவன் தன் உறவினர் வீட்டுக்குச் செல்ல, அங்கு உபசாரப் பேச்சுகள் கண்டதன்றிப் புசிக்க எவரும் அழைத்தாரில்லை. பின்னர் நண்பனின் இல்லம் செல்ல, அங்கும் உல்லாசமான ஸம்பாஷணைகளிற் பொழுது போனதே தவிர, தனது களைப்பான முகத்தை எவரும் கவனிக்கவில்லை. தன் கையிலுள்ள சொந்தக் காசைப்போல எவரும் உதவார்.

யிருக்கப்பட்ட வீட்டிற்கு, நாம் போக வேண்டாமென்று சொல்லியிருந்துங் கூட இவள் எப்படிப் போகலாம்; போய்விட்டு அதை நம்மிடம் சொல்லாமல் மறைத்தும்விட்டாளே; இவ்வளவு கபடமா என்று ஆக்கிரகப்படுகிறோம். உடனே நாம் மனைவியை யழைத்து இதைப்பற்றி விசாரிப்பதா, அல்லது சகித்துக்கொண்டு போகவேண்டுமா?'' என்று உலகளந்த பெருமாள் கேட்டார்.

ஃ

தும்பிக்கையாழ்வார் இதற்கு நான் பதில் சொல்லுகிறேன் என்று எழுந்தார். ''ஒன்றை மறைத்து ஒருவர் செய்யும்போது அதை ஜாடையாக விட்டுவிட்டு, மற்றொரு சந்தர்ப்பத்தில் அதைத் தான் அறிந்தேயிருப்பதாக மெதுவாகச் சுட்டிக்காட்டினைத்து, பொறுமைப்பட்டுக் கொள்வதுதான் தக்கது. தன் குழந்தைக்கு அதிக பிணியாக இருக்கையில் தன்னைப்போன்ற பெண்ணிடமும். தனக்கு வேண்டிய உறவினரிடமும் சொல்லிக்கொண்டு அவர்களால் ஒரு ஆறுதலும், பிணிக்குச் செய்யவேண்டிய சிகிச்சா பக்குவ விவரமும் பெறவே புத்திபோகும். அந்த வகையில் அப்பெண் நமக்கு விரோதமான இடத்துக்கு நமக்குத் தெரியாமலே போய் வந்திருப்பதை,—குழந்தையின் வியாதியை உத்தேசித்து,—இப்போது நாம் ஒன்றும் கண்டித்துக் கேளாமல், அப்பெண் போய்வந்ததையே அறியாததுபோல மவுனமாய் இருந்து விடுவதே சரியாகும். இப்போது குழந்தை குணப்படுவதில் நாம் கவனத்தைச் செலுத்தவேண்டுமேயன்றி, மனைவி மறைத்த சங்கதிகளைப்பற்றி வாதாடிக்கொண்டிருப்பது கூடாது. அவ்விஷயத்தை இந்த சமயம் நழுவ விட்டுவிட்டு, பிறகு ஒரு காலத்தில் அதைப்பற்றிக் கண்டித்து அவளுக்குப் புத்தி கூறுவதே சிலாக்கியமாகும்'' என்றார். இத்துடன் நமது கடையும் முடிவுபெற்றது.

'பஹதூர்' பொன்வண்டுசெட்டியார்

பிறருடைய துன்பத்தினால் தன்னைச் சந்தோஷப்படுத்திக்கொள்கிறவன் துவேஷமென்னும் வலையில் அகப்பட்டுக் கொள்கிறான்.

எதெதை மறந்தேன்?



நீ புறப்படும் போது "எதெதை மறந்தேன்" என்று உன்னையே ஒரு கேள்வி கேட்டுக்கொண்டு ஒரு நிமிஷம் வரை நின்று சற்றே சிந்தித்துப் பார். எது உனக்கு முக்கியப் பொருளோ அதைத் தான் நீ மறந்துவிட்டிருப்பாய். நீ புறப்படுகிற அவசரத்தில் அது உன் ஞாபகத்திலிருந்து விலகிப்போயிருக்கும். எத்தனையோ மனிதர்கள் வெகு விரைவாக வீட்டை விட்டுச் சென்றுவிட்டுப் பாதிதூரம் போனதும் ஞாபகம்வந்து மறுபடியும் வீட்டிற்குத் திரும்பித் தாங்கள் மறந்ததை எடுத்துக்கொண்டு சென்றிருக்கிறார்கள். ஆகவே, புறப்படுமுன் "எதெதை மறந்தேன்!" என்று யோசித்து எடுக்கவேண்டியவற்றை நிதானமாய் எடுத்துக்கொண்டு புறப்படு. அவ்விதமே, உன் வேலையை முடித்துக்கொண்டு புறப்படுகிற இடத்திலும் "எதெதை மறந்தேன்?" என்று சிந்தித்துப் பார். உன் குடை, பாதரக்ஷை இதுபோன்ற சிலவற்றை நீ புறப்படுகிற அவசரத்தில் மறந்துவிடுவாய். ஆதலின், எல்லாம் சரியாக இருக்கிறதாவென்று சிறிது யோசித்து நின்று, எதையும் மறக்கவில்லையென்று தெரிந்தபின் புறப்படு. அவசரப்படேல். வீட்டில் மறந்துவைத்தாலும் மறுபடிவந்து எடுத்துக்கொள்ளலாம். நீ போகிற இடத்தில் மறந்துவைத்துவிட்டாலோ, மறுபடியும் உனக்கு அது கிடைக்காது. வைத்தவர் மறந்தால் எடுத்தவர் கொடார்.

உன் பாதரக்ஷையை நீ ஓரிடத்தில் மறந்து வைத்துவிட்டுச் சென்றுவிடுகிறாய். அவ்விடமுள்ளோர் அந்தப் பாதரக்ஷைக்குரிய மனிதர் அங்கேயே இருப்பதாக நினைத்துக் கொள்வதால் அதை எவரும் எடுப்பதில்லை. அது அப்படியே நெடுநேரம் வரையில் கிடக்கின்றது. நீ வீட்டுக்குச் சென்று விடுகிறாய். வீதியில் நடக்கும் ஒரு சண்டையில்—"அவனைச் செருப்பாலடித்தாலும் தோஷமில்லை" யென்று நீ சொல்லும்போது உடனே உன் கால் செருப்பின் ஞாபகம்வந்து வீட்டில் தேடிக் காணாமல், பிறகு ஓ! அந்த இடத்திலேயே வைத்து மறந்துவிட்டோம் என்று எண்ணியவாறு விரைந்து ஓடுகிறாய். அங்குள்ள உன் பாதரக்ஷையை அதற்குரியவர் அருகிலேயே இருப்பதாக மற்றவர் நினைத்து விடுவதால், அதை எவரும் தொடாமல் நீ வைத்த இடத்திலேயே இருக்கவும், நீ சந்தோஷத்தோடும் எடுத்துக்கொள்கிறாய். இது மறதியின் அவதி. பாதரக்ஷைக்குப் பதிலாக உன் சிறு குழந்தையின் கால் கொலுசு திருகாணி கழன்று அங்கு விழுந்துவிட்டால், அதை நீ பார்க்க மறந்துவிடும்போது மறுபடியும் உனக்கு அது கிடைக்குமா? பிறர் வைத்து மறந்ததை அபகரித்துக்கொள்ளும் கடைக்காரர்களும் வண்டிக்காரர்களும் எவ்வளவோ பேருண்டு. யோக்கியர்கள் எங்கேயோ சிலர் தான். ஆகவே, "எதெதை மறந்தேன்?" என்று நீ புறப்படுமுன் நன்கு யோசித்து; நீ இருந்த இடத்தை நன்றாகக்கவனித்துவிட்டு, பிறகு நிதானமாகப் புறப்படப் பழகு.

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

புரட்டாசியில் பேயாட்டங்கள்!



ஆமடா ! அப்பா! விகடன் வெகுநாளாகச் சொல்லவேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்தேன்! பன்னிரண்டு மாதங்களிலே புரட்டாசி மாதத்துக்கு ஒரு தனி மகத்துவம் இருந்துகொண்டிருப்பதிலே, அந்த மாதத்தில் ஐந்து சனிக்கிழமைகளுக்கு விரதமிருப்பதும், தெருத் தெருவாய் பஜனை கோஷ்டிகள் மேளதாளத்துடன் சுற்றி வருவதும், வருஷமொருமுறை பெரிய அன்னதானமாக இந்த மாசத்துச் சனிக்கிழமைகளில் செய்வதும், 'சனிக்கிழமை விரதம்' என்று ஒரு பேர் சொல்லிக்கொள்வதும், நவராத்திரி, சாஸ்வதிபூஜை, ஆயுதபூஜை அனுஷ்டிப்பதும், கொலுவுகள் வைப்பதும், ஏழுமலை வெங்கடாஜலபதிக்குப் பிரியமான மாதமென்று கோவிந்தா கோவிந்தா என்று கூவுவதும், திருப்பதிக்குப் புறப்படுவதும், ஒரு ஆட்டை அதன் கொம்பு காதுகளோடு அப்படியே விழுங்கி வயிற்றில் தள்ளிவிடக்கூடியவர்களுங்கூட இந்த மாதத்தில் மாமிசம், மச்சம், இன்னும் கருவாட்டையுங்கூட விலக்கிவைத்துப் புரட்டாசி முப்பது நாளும் சுசிகரமாய் நடந்துகொள்வதும் ஆகிய இவ்வளவு விசேஷங்களோடுங்கூட, பேய்பிசாசுகளின் ஆட்டங்களும் நீட்டங்களும், அது பிடித்தவர்களின் கூட்டங்களும், அவர்கள் படும் திண்டாட்டங்களும், அவற்றைத் துரத்தித் துரத்தியடிக்கிற ஓட்டங்களும், சேர்ந்துகொண்டு இந்த மாதத்தை வெகு முக்கியமான மாதமாகச் செய்துவிட்டிருப்பதை நோக்கி விகடன் ஒரு சிரிப்பு சிரித்து வியப்பும் கொள்கிறேன்!

ஃ

பேய் பிசாசுகள் பிடித்ததென்று மந்திரவாதியைத் தேடிச் செல்வோர்களின் நிலைமை ஒரு பெரிய கண்றாவியடா அப்பா! மந்திரவாதியோ ஒரு மக்குச் சாம்பிராணி! எந்தப் படிப்பும் சரிவரத் தெரிந்தவனல்ல! நாலு எழுத்துகளைப் பிழையின்றி எழுத அறிந்தவனுமல்ல. ஆனாலும், அவன் செய்கிற ஆரவாரமோ பிரமிக்கக்கூடியதாயிருக்கும்! பேய் பிடித்ததாகக் கூறும் பெண்ணின் கூந்தலைப் பற்றிக்கொண்டு அவன் அசைத்தசைத்து ஆட்டும்போது, அப்பெண்ணுக்குரிய புருஷனின் மனம் எவ்வளவோ கலங்கிப்போகிறது! தனது மனைவியை இன்னொருவன் சிகைபிடித்துக் குலுக்குகிறானேயென்று ஆத்திரம் பொங்கினாலும் அடக்கிக்கொள்ள வேண்

டியதாகிறது! பெண்ணுக்கோ சுய புத்திமாறி, பிரக்ஞையே தவறி, தன் நினைவு தனக்கில்லாமல் கண்டபடி உளறத் தொடங்கிவிடுகிறாள்! சில சமயங்களில் மூர்ச்சை போகிறாள்! சவத்துக்குச் சமமாகவும் படுத்துக் கிடக்கிறாள்! தலை தொங்கிப்போகிறது! கழுத்து நிற்பதில்லை! சிலருக்குத் தொடையுங் காலும் விழுந்து போய் எழுந்திருப்பதற்கே கூடாது போகிறது! சமைத்துக்கொண்டிருக்கும்பொழுதோ, வீட்டுக்குள் நடந்து கொண்டிருக்கும்பொழுதோ பொத்தென்று ஸ்மரணை தவறி விழுந்து விடுகிறாள்! அவளை நம்பிக்கிடந்த வீடும், அவள் மக்களின் நிலையும் அலங்கோலமாகிறது! மந்திரவாதியை அழைத்துவரும்படி எல்லோரும் வற்புறுத்துகையில், பேய் பிசாசுகள் கிடையாதென்று அழுத்தமாய்ப் பேசிக்கொண்டிருந்த நல்ல படிப்பு படித்தவர்களுங்கூட ஓட்டமாய் ஓடி மந்திரவாதியை அழைத்துவரத் தொடங்கிக்கொள்கிறார்கள்!

ஃ

மந்திரவாதி வந்து சேருகிறான்! அவன் முகத்தைப் பார்க்கும்போது அவனுக்கு எழுத்து படிப்பு வாசனை எவ்வளவென்று தெரிந்துபோகிறது! பெண்ணின்மேல் விபூதியைத் தூவி ஓம் சுவாஹா என்று என்னென்னவோ மொணமொணக்கிறான். தொங்கிக்கிடக்கிற தலைக்கு என்னவோ மந்திரம் சொல்லுகிறான்! தலை சரியாகி விடுகிறது! மற்றொரு மந்திரங்கூறி, எழுந்திரு என்கிறான்! மூர்ச்சித்துள்ள பெண்ணும் உடனே எழுந்து உட்காருகிறாள்! இது எல்லோருக்கும் வியப்பைக் கொடுப்பதால் மந்திரவாதியை வெகு மகிமையாக எண்ணத் தொடங்கிக் கொள்கிறார்கள்! அவனும் தன் கதையை அவிழ்க்கத் தொடங்கி விடுகிறான்! பெண்ணின் மேல் மூன்று பிசாசுகள் ஏறிக்கொண்டிருக்கிறதாம்! முனீஸ்வரன் வேறே ஏறியிருக்கிறதாம்! காட்டேரியின் பார்வை பட்டிருக்கிறதாம்! ஆனதால் தான் அவளைச் சாப்பிட ஒட்டாமலும், நித்திரை செய்யவிடாமலும் பாதிக்கிறதாம்! மந்திரவாதி தான் ஓட்டி விடுவதாயும், பணம் அதிகம் செலவாகுமென்றும், ஆடு கோழி பலி தந்தாகவேண்டுமென்றும் கூறுகிறான்! "வைத்தியர்களுக்கு வீணாய்ப் பணத்தைக் கொடுத்துக் கெட்டுப்போனீர்கள்! அப்போதே நான் வந்திருந்தால் சௌக்கியமாயிருக்குமே" யென்று தன் வீரப்பிரதாபங்களை விவரித்து விட்டு, பேய்பிடித்த பெண்ணை எதிரில் உட்காரவைத்து மஹாமயக்கான ஜெபமந்திரம் செய்யத் தொடங்கிவிடுகிறான். இது ஸாமான்ய மந்திரவாதியின் தொழிலாகும்!

ஃ

பிரம்மாண்ட மந்திரவாதி வேறே யுண்டு! அவன் வீட்டில் அநேகர் காத்திருப்பார்கள்! தேங்காய், இளநீர், பழம், வெற்றிலை, பாக்கு, குடம், சாம்பிராணி, புஷ்பம் முதலியவைகள் அவன் வீட்டில் மூலைக்கு மூலை சிதறிக்கிடக்கும். அவனுடைய தரிசனம் அகப்படுவதே கஷ்டம். அவனுக்குக் காணிக்கை, கப்பம் கொடுக்கிறவர்கள் கணக்கிலர்! ஜடாமுனி, பிரம்மராக்ஷஸ், முனிசுவரன், காளி, காட்டேரி, துர்க்கை முதலிய உயர்ந்த பூதங்களே அவனிடம் வரக்கூடியவை! பொரிசு பெற்றுக்கொள்

"உன்னை நான் மணக்காவிடினும், இந்த ஜென்மத்தில் உன் அன்பை ஒரு காலம் பெற்றிருந்தேனென்ற இன்ப நினைவே எனக்குப் போதும். அதுவே என் ஜீவியத்தின் ஆறுதல்" என்று ஒரு காதலன் இயம்பினான்.

பவர்களுக்குக் கொஞ்சம் உள்ளே நுழைய முடியுமாம்! எனையோர் ஒரு நாளெல்லாம் தெருவில் காத்துக் கொண்டு கிடக்கவேண்டுமாம்! மாவிலைத்தோரணம், ஸ்வாமி மண்டபம், வாழைமரங்கள், தீபம், மஞ்சள், குங்குமாதிகள் அவனெதிரில் ஏராளமாய் நிறைந்திருக்கும்! வந்தவர்களை உட்காரவைத்து ஏதோ ஒரு ஜலத்தை அவர்களின்மேலே தெளிப்பான். இதற்குள் அவன் வீட்டுக்குள்ளேயே பழக்கிவைத்திருக்கும் இரு பெண்கள் பிசாசு பிடித்ததுபோல் அங்குவந்து அவன் முன்பாக ஆடி மிக்க பயங்கரமுண்டுபண்ணுவர். அது உண்மையான பேயாட்டமாகவே தோன்றும்! அதை இவன் லக்ஷியம் செய்யாததுபோல் நடித்து ஒரு அறைக்குட் சென்று கதவைத் தாளிட்டு சில நிமிஷங்களானதும் வெளியே வருவான்! கையில் பிரம்பு அல்லது தடிகளிருக்கும்! குரங்கு பல்லை யிளிப்பதுபோல் இவனும் அடிக்கடி பயங்கர ஸ்வரூபமாய் பற்களைத் திறந்து மூடி கசகுசவென்று மந்திரங்களை உச்சரிப்பான்! அவனது கோர ரூபத்தைப் பார்த்தாலே எப்படிப்பட்டவர்களுக்கும் அச்சமுண்டாகுமெனில் ஸாமான்ய ஸ்திரீகள் அஞ்சத் தடை என்ன? அவனைக் கண்டாலே புதிய பிசாசு பிடித்ததுபோல் தான்! அவனே ஒரு பெரிய பிசாசு !!

ஃ

ஹ்ரீம், ஹ்ரீம், ஹ்ரூம், சுவாஹா என்று மந்திரங்களை உச்சரித்து, எங்கே பிடித்தாய் பேசமாட்டாயோ, தகுந்த பூசைவேண்டுமோ சொல்லென்று எதிரிலுள்ள பெண்களைக் கோலால் அடிப்பான்! பேய் பிடித்த பெண்களோ எதற்கெனவே பயத்துடன் தாறுமாறாய்ப் பிதற்ற நினைத்திருந்தவர்கள் தாம் பட்ட அடியால் திகிலடைந்து மனம் வந்தபடி உளறுவார்கள்! அந்த வார்த்தைகளுக்கெல்லாம் ஒவ்வொரு சாதுர்ய அர்த்தங்களை ஏற்படுத்தி, கண்ணாலும் சொல்லாலும் மறுபடியும் பயமுறுத்துவான்! பேதைப் பெண்கள் அவன் எதிரில் தலைவிரித்தாடிக் குய்யோ முறையோவென்று கத்துவார்கள்! ஊமைப் பிசாசே! ஏன் வாய்திறந்து பேசேன் என்று மறுபடியும் கை சலிக்க அடிப்பான்! பெண்களின் முக்கியஸ்தர்களிடம் பிடித்த பேய் எளிதில் விடாதென்றும், பணத்தை முன்பின் பாராமல் செலவழித்தால் துரத்திவிடுவதாகவும் பேசுவான்! நூறு ரூபாய் வேண்டுமென்பான்! பேய்பிடித்த அநேக இடங்களைத் தான் துரத்திவிட்டதாயும், பொன்னுசாமி செட்டியாரின் மகளுக்குப் பிடித்த பேயைத் தானே ஓட்டிவிட்டதாகவும் வரிசை ஜாபிதா ஒப்புவிப்பான்! நமது ஜனங்களோ எதைக் கண்டாலும், கேட்டாலும் நிச்சயமென்றெண்ணுவது வழக்கம்! கடன் வாங்கியாவது மந்திரவாதிக்குத் தொலைத்தழுவார்கள்! அவனிடம் விழுந்துகிடக்கும் தேங்காய் எலுமிச்சங்களைப் பார்த்துப் பிரமித்து விடுவோர் அநேகர்!

ஃ

கடவுள் உலகத்தில் மனிதர்களைக் காப்பாற்றி வருகிறார். மந்திரவாதியிடம் பகவானுக்கு அதிகப் பிரியம் உண்டாய்விட்டதா? பூதப்பிரே

சிலர் கௌரவத்தில் திருஷ்டியுள்ளவர்களாய்ப் புது கௌரவம் வந்தாற் போதுமென்று டாம்பீகமாய் வீண் செலவு செய்கின்றனர். இதென்ன அசட்டுக் கௌரவம்? காசு ஸம்பாதிப்பதே கௌரவம், அதைச் செலவழிப்பதோ அகௌரவம்.

தங்களையோட்டும் அதிகார உத்தியோகத்தை அவனுக்கு ஈசன் கொடுத்திருக்கிறாரா? உண்மையான பேய் மந்திரவாதியே யாதுமென்று விகடன் சொல்வேன்! பேய்க்கும் மந்திரவாதிக்கும் வெகு உறவென்று அங்கு நடக்கும் பேச்சுகளால் ஏற்படுவதால், மறைந்துள்ள பேயைவிட்டு, எதிரிலுள்ள பேயைத் துரத்துவதே சரி! பேய்பிடித்த பெண்களைச் சொந்தமானவர்களோ, பர்த்தாக்களோ நெருங்கி அருகில் வரக்கூடாதென்றும், மந்திரவாதியும் அப்பெண்களுமே தனித்திருக்க வேண்டுமென்றும் சில மந்திரவாதிகள் கூறுவர். இவர்களின் வார்த்தையில் மயங்கிவிடவேண்டாம். தனித்திருக்கையில் அப்பெண்களின் கற்பைப் பலாத்காரமாய்க் கெடுத்த மந்திரவாதிகளும், அப்பெண்களைத் தங்கள் வசம் செய்துகொண்டுவிட்ட மந்திரவாதிகளும் எத்தனையோ பேர் உண்டு! யானைக்காரனையும் மந்திரவாதியென்று மயங்குவார்கள்! அவன் ஒரு பெரிய யானையை தன் மந்திரபலத்தால் வசப்படுத்தியிருக்கிறானாம்! ஐயோ! அறிவீனமேயென்று விகடன் சிரிக்கிறேன்! சர்க்கஸில் புலி சிங்கங்களைப் பழக்கியிருப்போர் என்ன மந்திரவாதம் செய்தார்களென்று இவர்கள் சிந்திப்பதில்லை! அவர்கள் மனோபலத்தாலேயே அந்த மிருகங்களை யடக்கி யாளுவதன்றி வேறெந்த மந்திரமுமில்லை! எல்லாம் தந்திரம்தான்!

ஃ

இவ்வாறாகப் பேய்பிடித்த பெண்களைப் பல மந்திரவாதிகளிடம் கொண்டுபோய் எங்கும் குணம் காணாமற் போய்விட்டால், கடைசியாகப் புரட்டாசி மாதத்தை எதிர்பார்த்து நிற்பார்கள்! மகிமையுள்ள புரட்டாசி மாதம் வந்து சேர்ந்ததும், நரசிம்மன் கோயில் முதலிய தேவாலயங்களில் இந்தப் பேயாட்டங்கள் ஐந்து சனிக்கிழமைகள் வரையிலும் நடக்கும்! சென்ற வருஷம் புரட்டாசி மாதத்து ஐந்தாம் சனிக்கிழமையோடு தொலைந்து செத்துப்போன பேய்களெல்லாம், இந்தப் புரட்டாசி மாதத்துச் சனிக்கிழமைகளில் உயிர்பெற்று எழுந்துவந்து ஆட்டங்களைக்காட்டும்! கோயிலுக்குள் இரவில் ஓர் குறித்த இடத்தில் பல பேண்கள் தலைவிரித்தாடியபடி அலங்கோலமாகக் கிடப்பது மிகுந்த பயங்கரத்தையும் பரிதாபத்தையும் தரும். ஒருவர் தீப்பந்தத்தைக் கையில் வைத்துக்கொண்டு தனக்குக் கடவுள் ஆவேசம் உண்டாகிவிட்டதுபோல் துள்ளித்தாவி ஒரு பெண்ணை இழுத்து, நீ எந்த இடத்தில் பிடித்தாய் விட்டுப்போகிறாயா இல்லையா என்று அதட்டுவார். அந்தப் பேய் போகமுடியாதென்று சொல்லவே, மறுபடியும் ஆவேசத்துடன் தீப்பந்தத்தைப் பிடித்துள்ள பக்தர் குதிப்பார்! கடைசியில் பேய் தான் ஓடிப்போவதாகக்கூறி ஓடவே, இந்தப் பக்தரும் அவரைச் சுற்றி நிற்கும் சில்லரைக்குட்டி பக்தர்களும் அந்தப் பெண்ணைத் துரத்திக்கொண்டு ஓடுவார்கள்! அதன்பின் திரும்பிவந்து மற்றொரு பெண்ணைப் பிடித்த பேயையோட்ட முன்போலவே ஆரம்பிப்பார்கள்! இவ்விதம் இரவு முற்றும் பேயோட்டும் ஆர்ப்பாட்டங்கள் கோயிலுக்குள்ளே வெகு தடபுடலாக நடந்து, பொழுது விடிந்ததும் ஒரு முடிவுக்கு வரும்!

ஃ

பேயோட்டும் வேளையில் ஆவேசம் பிடித்ததாகக்காட்டும் இந்தப் பக்

நம்முடன் கூடிக்கொண்டு வெகு அன்பாகவும் பேசுகிறார்கள். நாம் எப்போது தொலைவோம் என்றும் எதிர்பார்க்கிறார்கள்.

தர்களைக் காண்போருக்குக் கடவுளே இவ்வேடத்துடன் வந்து பேயை ஓட்டுகிருரோவென்று தோன்றும்! அவர்கள் கையில் பிடித்திருக்கும் தீப்பந்தத்தின் அக்னி ஜ்வாலை எவரையும் பிரமிக்க வைத்துவிடும்! புரட்டாசி மாதத்து ஐந்து சனிக்கிழமைகளின் இரவுகளிலும் விடிய விடியப் பேயாட்டங்கள் நடந்தவாறிருக்கும்! ஐந்தாவது சனிக்கிழமைதான் கடைசிவாரமானதால் பேயாட்டங்கள் அன்றிரவோடு முடிந்து தொலையும்! அதற்குப் பிறகு அடுத்த வருஷம் புரட்டாசி மாதம்தானும்! எந்த மந்திரவாதியாலும் போகாத பேய்கள் இந்தப் புரட்டாசி மாதத்தில் அந்த ஆவேச பக்தர்கள் துரத்துவதால் போய்விடுமாம்! பேயாட்டத்திற்கு நரஸிம்மஸ்வாமி கோயிலைத் தெரிந்தெடுக்கிருர்கள்! பேய்களுக்கும் இந்த நரஸிம்மருக்கும் என்ன பொருத்தமோ விகடனுக்குத் தெரியவில்லை! வேறு சிலர் வேறு கோயில்களையும் இந்தப் பேயாட்டங்களுக்கு ஏற்பாடு செய்வார்கள்! இவற்றை யெல்லாம் விகடன் விநோதமாய்ப் பார்க்கும் போது, புரட்டாசி மாதத்துக்கும் பேய்களுக்கும் என்னவோ நெருங்கிய சம்மந்தமிருப்பதாகவே நினைக்கும்படியாகிறது! என்ன சம்பந்தமோ! யார் போட்ட முடிச்சோ! கடவுளுக்கே வெளிச்சம்! இப்போது புரட்டாசி மாதமும் பிறந்துவிட்டது! இனி பேய்களுக்கும், அந்தப் பேய்களை ஓட்டுவோர்களுக்கும், அந்த ஓட்டுவோரைத் தாங்கிச் சூழ்ந்து நிற்போர்களுக்கும் மிகக் கொண்டாட்டம்தான்! குஷால்தான்! சுறுசுறுப்புதான்! இது ரொம்ப ரொம்ப பெரிய வேலைதான்! நீளநீளப் படித்துவிட்டு வேலை கிடைக்கவில்லையே யென்று திண்டாடுவோர்களெல்லாம் இந்த மகா பெரிய வேலைக்கு வந்துவிடலாமென்றும் விகடன் அழைக்கிறேன்! ராம்! ராம்! சுபம்! சூ!! சுவாஹா!!

எதையும் இரவுக்குமேல் பேசவைத்துக்கோள்.

வீட்டிலிருக்கிறவர்கள் காலையில் எதையேனும் ஒரு சங்கதியைப்பற்றி பிரஸ்தாபிக்க வருகிருர்கள். அந்த சங்கதி உனக்குப் பிடிக்காமலோ, அதில் நீ அபிப்பிராய பேதப்பட்டோ இருக்கலாம். அதை நீ எதிர்த்துப் பேசும்படியும் இருக்கலாம். அவ்வித சங்கதிகளைக் காலைப் பொழுதிலோ, பகலிலோ நீ வைத்துக்கொள்ள வேண்டாம். அந்த சங்கதியைப்பற்றி இரவு புசிப்புக்குப்பின் பேசிக்கொள்ளலாமென்று சொல்லிவிடு. இவ்விதம் செய்தால் அன்று பகலில் உண்டாகக்கூடிய சச்சரவோ, கோபதாபங்களோ, அதனுல் சமைப்பதற்கே முடியாமல் கலகத்திலேயே அன்றுபொழுது கழிவதோ எதுவும் இல்லாமற்போய், அன்றுபகல் முழுதும் சாமாதானமாகவே கழிந்து விடக்கூடும்.



தன்னால் சுலபத்தில் சாதாரணமாகச் செய்யக்கூடிய உதவியையும் வெகு கஷ்டத்தோடு செய்வதாகக் காண்பித்துக்கொள்ள வேண்டுமாம்!

ஃ

தன் கடிதத்திற்குப் பதில் வராவிட்டால், பழய விரோத மனஸ்தாபங்களை அக்கடிதம் பெற்றோர் மறக்கவில்லையென்று அர்த்தமாம்!

ஃ

தன் அன்பனின் ஊர் சேர்ந்து பல நாளாகியும் என்றோ ஒருநாள் வந்து அவனைக் காண்கிற அவ்வளவு உருக்கமுள்ளவர்கள்தான் கடிதங்களில் வெகு வெகு நீளமாய்ப் பிரியம் காட்டி எழுதிக்கொள்வார்களாம்!

ஃ

யாரிடத்திலுமே தனக்கு நல்ல எண்ணமில்லாமற் செய்துகொள்வதற்குப் பொறாமைக்காரனாய் ஆக வேண்டுமாம்!

ஃ

போன ஜென்மத்தில் எவரெவருடைய கடன்களைத் தீர்க்கவில்லையோ அவர்கள் இந்த ஜென்மத்தில் மனைவி மக்களாய்ப் பிறந்து பழய கடனை வசூல் செய்கிறார்களாம்!

ஃ

தனக்கு விவாகமானவுடனே வேறொரு ஊருக்குத் தன் பிழைப்பை மாற்றிக்கொண்டு போய்விடுகிறவனுக்குத்தான் செலவுகுறைந்து நாலு நகை நட்டுகள் சேர்ந்து மதிப்பும் ஏற்படுமாம்!

ஃ

போனபொழுதெல்லாம் வீட்டிலில்லாத வைத்தியரிடத்தில்தான் மருந்து சாப்பிடவேணுமாம்!

ஃ

வைத்தியரிடம் உடனே தீர்க்கக்கூடிய நல்ல மருந்திருந்தும் உதவாத மருந்தையே முதலிலும் பிறகும் தந்து பலநாள் மருந்து கொடுத்துத் தீர்த்ததுபோல் காண்பித்துக்கொண்டாலன்றி அதிகப் பணம் வராதாம்!

ஃ

ஒருவருக்குத் தான் மனதாரச் செய்த கெடுதி மோசங்களின் சாபம் மூன்று வருஷங்களுக்கு மேல்தான் தனக்கு அதன் பலனைக் காட்டுமாம்!

ஃ

வெகு தூரத்திலிருந்து அலுத்துத் தேடிவந்தவனுக்கு "அவர் வீட்டிலில்லை" என்று அங்குள்ளவர்கள் ஆசிர்வாதம் செய்வதே பெரிய உபசாரமாம்!

ஃ

அவர் இருக்கிறாரா என்பதற்குப் பதில் சொல்லாத வியாபாரி, அந்த சாமான் இருக்கிறதா வென்றால், ஆகா இருக்கிறது, விலை எட்டணா என்று அதற்குமட்டும் சிடுசிடுப்பின்றி வாயைத்திறந்து பேசுவாராம்!

ஃ

போய் வருகிறேன் என்பவர்களை இருந்து போகும்படி சொல்லாமல் உடனே அனுப்பிவிடுவதுதான் மிக்க அன்புடைமை யாகுமாம்!

ஃ

தீபாவளி நெருங்கிவிட்டதால் என்னென்ன வாங்கலாமென்று பெண்கள் இப்போதே யோசிக்கத் தொடங்கிவிட்டார்களாம்!

ஃ

வெகு அவசரமாய்ப் புறப்பட்டுப் போகிற இடத்தில்தான் தேடிப் போன ஆள் இல்லாமல் நெடுநேரம் காத்துக்கிடக்கும்படி யிருக்குமாம்!

ஃ

புருஷனின் கையில் அகப்பட்டுப் பாங்கியில் அடகுக்குப் போன நகைகள், இப்போதுள்ள பவுன் விலையில் விற்கப்படாமல் திரும்பிவந்த காலத்தில்தான் மனைவிக்குச் சொந்தமாம்!

அமைப்புப்படியே மணம்.

ஊழின் வழியே உலக நடக்கை. அவனன்றி ஓர் அணுவும் அசையாது. சந்திரவதிகதை இதற்குப் பொருந்தும். அவளுடைய பிதாவான சந்திரதயவரசன் புத்திரப் பேற்றை விரும்பிச் செய்த தவத்தில் சிவபெருமான் அவன்முன் தோன்றி, "அரசே, உனக்குப் பிறக்கையிலேயே மாங்கல்ய சூத்திரத்தோடும் கூடிய ஒரு பெண்மகவு தோன்றும். ஆயினும் மாங்கல்யம் பிறரது கண்ணுக்குத் தோன்ருது. அதனைத் தெரிந்துகூறும் உத்தமனெவனே அவனே அவளுக்குரிய கொழுநனுவன். அவ்வொரு பெண்ணுல் நீ பெரிதும் கீர்த்தியடைவை" என்ருர். அங்ஙனமே லக்ஷ்மியையொத்த சந்திரவதி பிறந்தனள், வளர்ந்தனள். விவாககாலம் நெருங்கியது. அரசர் அநேகர் இவளைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்பினர். அவர்கட்கெல்லாம் சந்திரதய அரசர் "முன்ன மெம் பெருமான் மொழிந்தவர்க்கன்றி முடிக்கிலேன் கடிமணம்" என்ருர். அரிச்சந்திர னொருவனுக்கே அவளுடைய மாங்கல்ய சூத்திரம் தோன்றியது. மாங்கல்யந் தரித்தவளை மணத்தல் பெருந்தவறென்று சினம்கொண்டு "எப்படிச் சுயம்வரம் நாட்டினீர்?" என்று மகாராஜன் வினவினுன்.

" பொறுத்துமுன் மங்கலம் பூண்ட பேதையை
மறுத்திரண் டாவது மண முடிப்பரோ
சிறுத்தவர் செய்தொழி றிறைவரைப் பிழை
னிறுத்தினீர் நீரெனே நெடிது கூறினுன்."

அதைக்கேட்டு அங்கு கூடியிருந்த அரசர்கள் கைகளைத்தட்டி வியப்பு மிகுந்தனர். அப்பொழுது சந்திரதய அரசன் அவர்களை நோக்கி, "அரசர்களே! இந்தப் பூமண்டலத்தை யாளுகின்ற அரிச்சந்திர மகாராஜன் எங்கள் பெண்ணின் கழுத்தில் தாலியிருக்கக் கண்டதற்கும், நீங்களெல்லாரும் காணுதிருப்பதற்கும் ஒரு தேவரகசிய முண்டென்று கூறினுர். அஃதாவது, பரமசிவனுர் கொடுத்த வரத்தினுலே இவள் பிறந்த நாள்முதல் கண்ணுடி நிழலிலே இவள் மங்கிலியத்தை நாங்கள் கண்டதன்றி அது சந்திரவதியின் கைக்கு அகப்பட்டதில்லை யென்ருர். இங்ஙனம் அரசர் கூறியதும், வேறேயொரு பெயரையும் நினையாத சந்திரவதி, "இந்த மாலைபோய் அரிச்சந்திரன் மார்பிலே விழக்கடவது" என்று ஆகாயத்தில் எறிந்தனள். அது அந்த மகாராஜன் மார்பிலே கூடிப் பிரகாசித்தது.

" அண்டர் நாயகன் வரமளித்த நாளையில்
வண்டணி குழலியோ டுதித்த மங்கலங்
கண்டவர் பதியிவட் சென்ற கட்டுரை
யுண்டஃதன்றிவே றுண்டு கேட்டிரால்.

கடவுளுக்குப் பயப்படுவதை விட்டுத் தனது சாமர்த்தியங்களை நினைத்து மெச்சிக்கொள்பவன் தன்னையறியாமலே மோசம் போகிறவனுகிருன்.

" மஞ்சனச் சடையினன் வரத்தில் வந்தாள்
கஞ்சன நிழலிற் காண்ப தன்றியே
யஞ்சனக் கண்ணிக்கு மங்கைக் கெய்திடா
தெஞ்சவில் யாவரு மியானும் கண்டிலேம்.

" என்றலும் வல்லிமு னெண்ணிய நாம
மொன்றல துள்ளுற வுன்னல ளாகிச்
சென்றவன் மார்பிது சேர்கென வுன்னு
மன்றலர் மாலையை வானி லெறிந்தாள்.

" வார்பயில் பூண்முலை மாலையு நெஞ்சும்
பார்பயின் மன்னவர் பற்பலர் கண்ணுந்
தார்பயில் வேலரிச் சந்திர னென்பான்
மார்பி லணைந்து மலர்ந்தன மன்னோ."

பெருமாள் நாயுடு.

வியாபாரமும் நட்பும்.

நட்பில் வியாபாரத்தையும், வியாபாரத்தில் நட்பையும் புகுத்துவதில் பல தொல்லைகள் விளைகின்றன. எதையும் முன்னதாகவே பேசி முடித்துக்கொள்வது மேன்மை. நட்பாயிற்றே, எவ்விதம் கண்டிதமாய்க் கேட்பதென்று பின்னடைவது பிறகு மனஸ்தாபமடைந்து பிரிந்திடவைக்கும். புதிதாக ஒருவர் தமது வியாபாரத்தை ஆரம்பிக்கும்போது தமது நண்பரொருவரைக் கடைக்கு மானேஜராக வைத்துக் கொண்டாரென்று கொள்வோம். மானேஜர் தமது மாதச் செலவுக்காகப் பிரதி மாதமும் முப்பது ரூபாய் போல் எடுத்துக்கொண்டுவந்து, பிறகு தமக்கு எவ்வளவு சம்பளம் என்பதைத் தெரிவிக்கும்படி வேண்டுகிறார். அவரது அரிய உழைப்புக்கு மாதம் 50-ரூபாயேனும் தருவதே மதிப்பாகும். கடையை ஆரம்பித்தவர் பிறகு கணக்குப் பார்த்து யாவும் தருவதாகக் கூறியபடி யிருக்கிறார். மானேஜர் தமக்கு ஏற்பட்ட சம்பளம் இவ்வளவுதான் என்பதை அறிய முடியாமல் வற்புறுத்திக் கேட்க, கடையின் சொந்தக்காரர் மௌனமாகிறார். தமது கணக்கைத் தீர்த்துச் சம்பள விவரம் தெரிவித்த பின்தான் வேலைக்கு வரமுடியுமென்று நின்றுவிடுகிறார். முன்பே சம்பள விவரம் கண்டிதமாகப் பேசியிருந்தால் பிந்திய மனஸ்தாபம் நேர்ந்திராது. நட்பை வியாபாரத்தில் கலக்கவிட்டு ஏங்கிப் பின்னடைவதின் விளைவு இது.

ரஸமான கேள்விகள்.

மகாத்மா தாம் சிறையிலிருந்தவாறு ஹரிஜன இயக்கப் பிரசாரம் செய்வதற்கு எவ்வித நிபந்தனையுமின்றி அரசாங்கத்தினர் அநுமதிக்காவிடில் தாம் சாகும்வரையில் உண்ணுவிரதமே என்று கூறிப் பட்டினியானுர். டில்லி சட்டசபையில் அதைப் பற்றிக் கவர்ன்மென்ட் மெம்பரான 'ஸர் ஹாரிஹேய்க்' அவர்களை ஸ்ரீமான் பகத்ராம்பூரி பின் வருமாறு கேட்டார்.

ஸ்ரீமான் பூரி:—காந்திஜீயின் நன்மைக்காக இந்த வசதிகள் அளிக்கப் படுகின்றனவா? அன்றி, ஹரிஜன இயக்கத்துக்காக இந்த வசதிகள் அளிக்கப்படுகின்றனவா?

கனம் ஹேய்க்:—சமூக சீர்திருத்த வேலையைக் கவர்ன்மெண்டார் தடுப்பதாக இருக்கக்கூடாதென விரும்புகிறுர்கள்.

ஸ்ரீமான் பூரி:—அதை உத்தேசித்துத்தான் வசதிகள் அளிக்கப்படுகின்றனவா? காந்திஜீயை அநுசரித்து அவ்வசதிகளை அளிக்க வில்லையா?

கனம் ஹேய்க்:—காந்திஜீயின் தனி ஹோதாவைப்பற்றிக் கவர்ன்மெண்டார் கவனிக்கவில்லை. ஹரிஜன இயக்க சம்பந்தமாக அவர் அநுபவித்துவரும் அந்தஸ்தை உத்தேசித்தே கவர்ன்மெண்டார் அவருக்கு விசேஷ வசதிகளை அளிக்க முன் வந்தனர்.

ஃ

ஸ்ரீமான் பூரி:—காந்திஜீக்குச் சொத்தில்லை. வாழ்க்கை நிலையும் மிக்க எழ்மையானது. அப்படியிருக்க, அவரை ஏன் 'ஏ' வகுப்புக் கைதியாக நடத்தி வருகிறுர்கள்?

கனம் ஹேய்க்:—காந்திஜீ பரம்பரையாக 'ஏ' வகுப்பில் சேர்க்கப்படக்கூடிய ஒரு உரிமையை வகிப்பதாகத் தெரிகிறது. (சிரிப்பு.)

புதிய ஜாதிப் பிரிவுகள்.



ஹிந்து சாஸ்திரப்படி நான்கு ஜாதிகளாக இருந்து, இப்பொழுது நாற்பதாயிரம் ஜாதிகளானது காலத்தின் காரியமேயன்றி வேறு சாஸ்திர ஆதாரம் பெற்றதல்ல. விஸ்தாரமான இந்தியா தேசத்தில் ஜனங்கள் காலக்கிரமத்தில் பல காரணங்களால் நாடுவிட்டு நாடுபோதல் அவசியமாயிற்று. அவ்விதம் அவசியமாகி தூரதேசத்திற் குடியேறினவர்கள் கால அளவில் அங்கேயே ஸ்திரமாக வசித்து, ஆதியில் அவர்களின் முன்னேர்கள் பிறந்து வளர்ந்த இடத்தோடு சம்பந்தமற்று, புதிதாய்ப் போன நாட்டிலே அவர்களுக்குள்ளாகவே சம்பந்தங்கள் செய்துகொண்டு, அவ்விடதது ஆசாரங்களை அனுஷ்டித்து, அவ்விடத்துப் பாஷையையும் பேச ஆரம்பித்தார்கள். அப்படிச் செய்தவர்கள் போகப் போகத் தனியான ஜாதியாகிவிட்டார்கள்.

ஃ

இந்தப் பிரிவுகள் தூரதேசவாசத்தினுலே உண்டானவைகளாயினும், மற்றக் காரணங்களாலும் பிரிவுகள் விளைந்திருக்கின்றன. கால வித்தியாசங்களால் சிற்சில ஜனங்களுக்கு சிற்சில தொழில்கள் அமைகின்றன. ஆதியில் ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்களா யிருந்தாலும், ஒரே தொழிலைச் செய்தோராக இருந்தாலும், வரவர அவர்கள் பற்பல தொழில்களைச் செய்வோராகிப் பற்பல ஜாதிகளாகப் பிரிவு படுகிறுர்கள். இவைபோன்ற பல காரணங்களால் பத்தாயிரக்கணக்கான ஜாதி வேற்றுமைகள் தோன்றலாயின.

ஃ

இவ்விதம் பிரிந்த வெவ்வேறு ஜாதிகளுக்குள்ளும் வெவ்வேறு விதமான ஆசாரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த ஜாதிகளுக்கு இப்போது ஆசாரம் அல்லது வழக்கமே பெரிதாய்விட்டதேயன்றி, தெய்வம், சாஸ்திரம், நன்மை தீமை ஆகியவைகளை மறந்தேபோயிருக்கிறார்கள். எந்தச் செய்கை எவ்வளவு தீயதாயிருந்தாலும், சாஸ்திரத்துக்கும், யுக்தி, புத்தி, அனுபோகங்களுக்கும் ஒவ்வாததாயிருந்தாலும், அது ஜாதிவழக்கமாயிருக்குமானால் அதைச் செய்வதில் அந்த ஜாதியார் யாதொரு அருவருப்பும் அடைகிறதேயில்லை. இப்படியிருப்பதானது தேச ஜனங்கள் முன்னுக்கு வருவதில் பலமான தடையென்று மந்தபுத்தி யுடையவனும் தெரிந்துகொள்ளக்கூடும்.

ஹிந்துக்களில் "பிரம்மஸமாஜிகள்" என்று சிலர் 80-வருஷகாலமாக புது ஜாதியாராக ஏற்பட்டிருக்கின்றனராயினும், அவர்கள் ஹிந்துக்களோடு சேராமலே தனியாகவே பிரிந்து கிடக்கின்றனர். ஆகவே, அந்த ஜாதியை மதித்து அதிற்சேரும் ஹிந்துக்கள் நாளடைவில் குறைந்துபோயினர். புதிதாய்ச் சேருவோரும் இல்லாது, அந்தப் "பிரம்மோ" மதமானது செழிக்காமல் க்ஷீணித்துக்கொண்டு வருகின்றது. இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ளவேண்டிய படிப்பினையாவது:—புது ஆசாரங்களைக் கால வித்தியாசங்களை நோக்கியும், தேசத்துக்கு நன்மையை விரும்பியும் அனுஷ்டிப்போர் மற்ற ஜனங்களினின்றும் நீங்கித் தனியான ஜாதியாக அமர்வதிற் பயனில்லை யென்பதே. புது ஜாதியாராக அமர்வதில் அவர்களுக்குமட்டும் சில சௌகரியங்களுண்டாகக் கூடுமேயன்றி தேச ஜனங்களுக்கு அதில் நன்மையில்லை. ஆதலின், பொது ஜனங்களைத் திருத்தித் தங்களைப்போல அவர்களையும் நவீன ஆசாரங்களை யனுஷ்டிக்கும்படி செய்யவேண்டுமானால், ஆசார திருத்தக்காரரான கல்விமான்கள் எப்போதும் போலத் தமது இனத்தாரின் மத்தியிலேயே வசித்துத் தங்களின் நன்னடத்தையாலும், ஜீவகாருண்யத்தாலும், தேசாபிமானத்தாலும், பொறுமையாலும் ஜனங்களின் மன நிலையைச் சிறுகச்சிறுக மாற்றி, காலத்துக்குத் தக்கபடி புதுமைகளை ஏற்குமாறு செய்யவேண்டும். அவ்விதமாகத் தங்களைச் சேர்ந்தவர்களையும் திருத்திக்கொண்டு, தங்களை முன்மாதிரியாகவும் காண்பித்துக்கொண்டு தங்கள் இனத்தவரோடேயே சேர்ந்துவாழ முயலவேண்டும். இதில் எவ்வளவோ கஷ்டமிருக்கிறதென்றாலும் இவ்விதம் சேர்ந்து வாழ்வதுதான் பொதுஜன நன்மையைப் பெருக்கும். புதிய கொள்கையால் ஜாதிப் பிரிவுகள் புதிது புதிதாக ஏற்படுவதைப் போல் தேசத்துக்குத் தீங்கு விளைக்கும் ஏது எதுவும் இல்லை.

உத்தியோகமானால் இந்திரப்பட்டம் கிடைத்ததுபோல் எண்ணிக்கொள்கின்றனர். இது பிசகு. உத்தியோகஸ்தர்களுங்கூடப் பிறருக்குக் கீழ்ப்படிய வேண்டியவர்களே. ஒரு நாள் வேலைக்குச் செல்லாவிடினும், ஏதேனும் தவறு நேரிடினும் வேலை தொலைந்துபோம். வர்த்தகத்திலுள்ள சுயாதீனம் உத்தியோகத்திலில்லை. ஆயினும், தாங்கள் சம்பளம் தராமலே தங்கட்கு வேலை செய்யக்கூடியவர்களை உத்தியோகஸ்தர்கள் பெறலாம். வர்த்தகனோ தனக்கு வேலை செய்யச் சம்பளம் தந்தே ஆட்களை ஏற்படுத்திக்கொள்ள வரும்.

ஸமத்வ உணர்ச்சி.

உலகத்தில் ஒருவனே அல்லது ஒரு ஜாதியோ ஸ்வதந்திரமடைய ஸமத்வம் அத்யாவச்யகமானது; ஸ்வதந்திரத்தை யடைந்த பிறகு அதைக் காப்பாற்றவும் ஸமத்வம் ஆவசியகமானது. தங்கள் ஜாதி மத வேற்றுமைகளை அவரவர்கள் வீட்டிற்குள் மாத்திரம் வைத்துக் கொண்டு பொதுக்காரியங்களில் எல்லோரும் ஸமமென்று கருதியே உழைக்கவேண்டும். ஸமத்வத்தைப் பொதுக்காரியங்களில் மறந்துவிட்டால் பெரிய ஆபத்துக்கள் உண்டாகி ஸ்வதந்திரப் பிரயத்தனமே கெட்டுப் போய்விடும். உலகத்தில் இந்த ஸமத்வத்தை எல்லா ஜாதியார்களிடத்திலும் நிலைநாட்ட அநேகர் ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் கிளம்பினர். ஆனால், ஒருவராவது இதைப் பூர்த்தி செய்து முடிக்க முடியவில்லை. ஸமத்வத்தை யறிவது சுலபமாயினும், அதை நீடித்ததாகக் கையாடிவருவது கஷ்டமெனறு ஏற்படுகிறது. ஆதலினால்தான் பாரதநாட்டில் கடவுள் ஜனங்களுக்குள் ஒருவராய்த் தாமே பிறந்து இந்த ஸமத்வத்தைப் போதித்து வந்தார். அத்துடன் நிற்காமல், பிற்காலத்தில் தமது அடியார்களை இப்பூமியில் பல ஜாதிகளிலும் பிறக்கச்செய்து இந்த ஸமத்வத்தை பாரதபூமியில் ரக்ஷித்துவந்தார். உலகத்திலுள்ள ஒவ்வொரு வகுப்பினர்களுக்கும் மோக்ஷம் உண்டென்றும், கடவுள் திருஷ்டியில் ஸகலரும் ஸமானர் என்றும், ஆகையால், தேசஜனங்கள் அனைவரும் ஸமானர் என்றும் அவ்வடியார்கள் உபதேசித்தும் அனுஷ்டித்தும் வந்தனர். தென்னாட்டு ஆழ்வார்கள், நாயன்மார்கள், வடநாட்டுப் பக்தர்கள் முதலான ஸகல திருத்தொண்டர்களும் இதையே முன்னிலையாகக்கொண்டு உலகினில் நிதர்சனப்படுத்தி வந்தனர். இந்த ஆழ்வார்களுக்கும் நாயன்மார்களுக்கும் பிற்காலத்தவர்களான ஸ்ரீமத் சங்கரபகவத் பாதாசாரியார், ஸ்ரீமத் இராமாநுஜ பகவத் பாதாசாரியார், ஸ்ரீமத் மாத்வபகவத் பாதாசாரியார் முதலான பிரஸித்த பாஷ்யகார ஆசிரியர்களும், குருநானக், குருகோவிந்த முதலான சீர்திருத்தக்காரர்களும் இந்த ஸமத்வ ஞானத்தையே பரவச்செய்து வந்தனர்.

ஃ

இந்த ஸமத்வ தருமத்தைக் கையாடிவரும் காலத்தில் ஆக்ஷேபனைக்கிடமாயும், உலக இயற்கைத் தர்மங்களின் வழியை மீறியும், அயலானுக்கு அநியாயமாய் வருத்தமுண்டாகும்படியாயும் உள்ள எவ்வித செயல்களையும் செய்யவேகூடாது. அப்படிச் செய்தால் அவன் ஸமத்வ தர்மத்திற்கே கெடுதி செய்தோனாகி விடுகிறான். அவன் ஸமத்வத்தை

குடும்பத் தலைவன் ஒரு யந்திரத்தின் ஒரு உறுப்புத்தான். குடும்ப முழுதுமே சேர்ந்து ஒரு யந்திர மாகிறது. குடும்பத்தில் ஒரு சிலருக்குள்ளாகக் கசப்பு உண்டாவது யந்திரத்திலுள்ள ஒரு சாமான் கெட்டு யந்திரம் பழுதாவதை யொக்கும்.

அழிப்பதாகவே பொருள்படும். ஸமத்வத்தை நன்கறிந்துணர்ந்து பழக்கப்படுத்தி ஆதரித்து வந்தால் அதன் திவ்யசுகம் அப்பொழுதுதான் தெரியும். நாட்டில் கொலை, களவு முதலான துன்மார்க்க காரியங்கள் என்னளவும் நடைபெறாது. ஸமத்வஞானம் உண்டானவனுக்கே ஜீவகாருணியமும் பரோபகாரகுணமும் இருக்க முடியும். ஸமத்வ தர்மம் தங்கிய ஜாதியே தேவஜாதி; மகத்துவமிக்க அந்த ஸமத்வமே ஆநந்தம்.

ஃ

ஸமத்வத்தையே ஒவ்வொருவரும் கையாடவேண்டும். கடவுளின் முன்னிலையில் ஸகலரும் ஸமானர். தொழில் முறைகளையொட்டி வித்யாஸம்போலக் காணப்படினும், மனித இயற்கையை யொட்டி ஸகலரும் ஸமானரே யாவர். யோகிக்கும் ஞானிக்கும் ஸகலரும் ஸமானராகவே தோன்றுவர். ஸமரஸஞானமே உலகினில் மனிதன் தெரிந்துகொள்ள வேண்டிய புருஷார்த்தம். "மேலோராயினும் தாழவுரை" என்ற அமிர்த வாசகத்தை எவரும் மறக்கொணாது. ஸமத்வத்தால் தேவர்கள் ஸ்வர்க்கத்தில் வாஸம்செய்து வருகின்றனர். கடவுள் ஸகல ஜீவன்களிடத்திலும் ஸமமான கருணைகாட்டி வருகிறார். ஸமத்வத்தை ஆதரித்தால்தான் நீ கடவுளுக்கு ஏற்ற பிரியனாவாய். ஸமத்வந்தான் ஸ்வர்க்க சந்தோஷம். ஸமத்வமில்லாததே துக்கம். ஸமத்வமே ஜீவகாருணியம். ஜீவகாருணியமே பரோபகாரஞானம். பரோபகாரமே கடவுள் திருவுள்ள முவந்த காரியம். ஆத்மாவை நன்கறிந்து கொள். ஆத்மாக்களில் உள்ளது ஸமத்வம். மனிதன் எய்தவேண்டியது கடவுளுடன் ஸமத்வமாம்— என்றே நமது தேசத்தின் ஆநந்த தத்வசேகரங்களான உபநிஷத்துகளில் உபதேசிக்கப்பட்டிருக்கின்றன.

ஃ

யோகம் செய்யவேண்டியவன் முதலில் அனுஷ்டிக்கவேண்டிய தர்மத்துள்ஸமத்வமேமுதன்மையானது. போகத்துக்கும் ஸமத்வசிந்தை பிரதானமானது. எவ்வுயிருக்கும் இன்புறவனவற்றைச் செய்வதற்கு ஸமத்வம் ஆவசியகம். ஸர்வத்ர ஸமதாஸ்திக்யம். (எல்லாவிடத்திலும் ஸமமாய் நினைத்து நடப்பது யோக நியமத்தின் உட்கருத்து.) தன்னைப்போலஎவ்வுயிரையும் எண்ணித் துன்புறுவனவற்றைச் செய்யாமல் ஸமத்வமாய் நடத்தி வருவதே தூய்மையாம். பிறன் மனைவியை மாதாவாகவும், பிறன் பொருளை ஓடுபோலவும், எல்லாவற்றையும் தன்னைப்போலவும் ஸமத்வசிந்தையோடும் எண்ணி நடப்பவனே பக்திமான் என்று நீதிநூல்கள் கூறுகின்றன. ஸமத்வதர்மம் ஒன்றே இவ்வுலக வாழ்வில் தூய்மையையும், மேலுலக வாழ்வில் நிச்சய சுகத்தையும் அடையச் செய்விக்கும். ஆதலின் ஸமத்வம் எங்கணும் பரவுவதாக.

தன்னை வெகு உயர்த்தியாக நினைத்துக்கொண்டிருக்கும் பெண் விவாகமாகி, தனக்குக் கணவன் ஏற்பட்டு, உலக கஷ்டங்களும் சம்சார நிர்வாகப் பளுவும் தெரிந்து, போதாக்குறைக்குத் தன்தாயும் காலமாகி, தன் ஏக ஸகோதரனும் வேற்று மனிதனாய் மாறிவிட, தனது கணவனின் நிலமும் வீடும் கடனுக்காளாகித் தீர்ந்து வாடகை வீட்டில் வசிக்கும்படி வாய்த்து, அத்துடன் அங்கஹீனமுள்ள ஒரு குழந்தைக்கும் தாயாகிவிடில், தனது சிலாக்கினைகளையெல்லாம் விட்டுத் தெய்வமே என்று அடங்கி விடுகிறாள்!



ஹாஸ்ய சஞ்சீவினி



பாலு:—இங்கு ஏதோ ஆயிரக் கணக்கில் புரளுவதாக நினைத்து, இவ்விடம் வந்தால் இவ்விடத்தியவர் களுக்கு அதனால் கஷ்டமிராதென வெண்ணிப் பலரும் ஓயாமல் வந்த படியே இருக்கிறார்கள். இந்த வீட்டை ஒரு தர்மசத்திரமென்றே கூறலாம். நண்பர்களாகட்டும், வேறு எவர்களாகட்டும், இங்கு வரின் புசிப் புக்குக் கஷ்டப்படார். காபி பலகாரம் முதல் சரிவர நடக்கும். வருகிறவர் கள் இரண்டு நாள் சேர்ந்தாற்போலத் தான் தங்கியிருந்து போவார்கள்.

கோபாலு:—பெரியவர்கள் தங்க ளின் தயாள சிந்தையாலும் பெருந் தன்மையாலும் அவ்விதம் உபசரிக்கி றார்கள். அதற்கு சந்தோஷப்படாமல் நீ ஏன் பொறுமைப் படுகிறாய்?

பாலு:—இவை வீண் செலவுகள் தானே. இவர்களெல்லாம் ஏன் இங்கு வரவேண்டுமோ? இப்படி யெல்லாம் கண்டபடி செலவிடுவதால்தான் அதி கமான கடன் ஏற்படுகிறது.

கோபாலு:—அந்த சுமைப்பொறு ப்பு வீட்டின் பெரியோர்களுக்குத் தெரியுமானதால், நீ அவர்களுக்கு யோசனை கூறவேண்டியதில்லை. ஏதோ அப்பெரியோர்களின் காலத் தில் நடந்தேறுகிற இவ்வித உபசரிப் புகளையும், இரக்கப்பட்டுச் செய்கிற தர்மங்களையும் விக்கினப்படுத்தாமல் சந்தோஷமாய்ப் பார்த்துக்கொண்டி ருந்தால், அதுவே அந்தப் பெரியோர் களுக்குச் செய்கிற உதவியாக இருக் கும்.

பாலு:—நான் சொல்லுவதின் கருத்தைத் தெரியாமல் நீ பேசுவ தால், இனி உன்னிடம் எனக்கு எந்த வார்த்தையும் வேண்டியதில்லை.

ஃ

லீலா:—உனக்கு ஒரு காரியம் ஆகவேண்டுமாயின் யாது செய்வாய்?

நீலா:—என்னைக் காப்பாற்றும் பிரபு ஒருவர் இருக்கிறார். அவரிடம் தெரிவித்துக்கொள்வேன்.

லீலா:—அவர் எங்கேயிருக்கிறார்?

நீலா:—அவர் எங்கும் இருக்கி றார். ஆகிலும், பாபியான நான் அவ ரைக் கண்ணால் பார்க்கமுடியவில்லை.

லீலா:—அப்படியானால் உன் கஷ் டத்தை அவருக்கு எப்படித் தெரி விப்பாய்?

நீலா:—எனக்கு ஒரு தூதனிருக் கிறான். அவனை யனுப்புவேன். அவன் அவரிடம் சென்று என் குறைகளைத் தெரிவிப்பான். அந்தத் தூதனின் பெயர் 'நம்பிக்கை'; பிரபுவின்பெயர் பரமேசுவரன்.

ஃ

நாயகி:—என் மனோவல்லபா! தங் களுடைய முகவாட்டத்தைக் கண்டு எனக்குத் துக்கமுண்டாகிறது. தாங் கள் ஏதும் பேசாததால் என் நெஞ் சம் புண்ணாய்த் தவிக்கிறது. பிரா ணேசுவரா! உமக்கென்ன மனவருத் தம்? சொல்லக்கூடாதா? நான் சிறிய வளாயிருந்தாலும், உங்களைத் தேற் றும் விஷயத்தில் அதற்கான கருவிக ளோடும் பெரியவளா யிருக்கிறேன். என்னிடம் ஒளியாமற் சொல்லுங்கள்.

நாயகன்:—என்னால் உனக்கு ஒரு சுகமுமில்லையே. உலகில் ஒரு மனிதனுக்கு அநேக சத்துருக்க

ளுண்டு. இப்போதுள்ள காலநிலை எனக்குப்பரமசத்துருவாயிருக்கிறது. பவுன் விலை ஏறிவிட்டதால் உனக்குப் புதுநகை எதுவும் செய்துபோட முடியவில்லையே என்பதுதான் என் பெரிய விசாரம்.

நாயகி:—புது நகைக்குப் பதிலாகத் தினமும் புஷ்பம் வாங்கிக்கொடுங்கள். மஞ்சள் குங்கும புஷ்ப சந்தன பரிமளங்களுடன் கலந்துறவாடும்பதி பாக்கியமொன்றே எனக்குப்போதும்.

ஃ

புதுமணப்பெண்:—அவர் எப்படி யிருக்கிறாரோ, நன்றாகப் பார்க்க முடியவில்லை. நான் தலை குனிந்து உட்கார்ந்திருக்கையில் எப்படிப் பார்க்கிறது?

தோழி:—நாளைக்குத்தான் நீ தூக்கம் விழிக்கவேணுமே. நன்றாகப் பார்த்துக்கொள்ளுகிறதுதானே!

ஃ

பையன்:—என் அம்மா, உனக்கு அவ்வளவு பசியாயிருந்தும் நீ அந்த வீட்டில் சாப்பிடாமலே வந்துவிட்டாயே?

தாய்:—நாம் ஒரு தடவை அவர்கள் வீட்டில் புசித்துவிட்டால், அவர்கள் பத்துதடவை நமது வீட்டுக்கு வந்து பல செலவுகள் வைத்துவிடுவார்கள். நாம் சாப்பிடவும் வேண்டாம், அவர்கள் வரவும் வேண்டாம்.

ஃ

ராமன்:—படிக்கப் புஸ்தகம்வேண்டுமோ? இன்று நான் வெளியூர் போகிறேன். திரும்ப இரண்டுமாதம் செல்லும். வந்ததும் கொடுக்கிறேன்.

ராகவன்:—இப்போது கொடுத்துப்போனால் வாசித்துவிட்டுப் பத்திரமாக வைத்திருக்கிறேன்.

ராமன்:—அது முடியாது. நான் புஸ்தகம் இரவல் தந்தால் மூன்று தினங்களுக்குள் திரும்பி வந்துவிட வேண்டும். அதற்கு நான் இங்கு இருந்தால் முடியும். பிறரிடம் அதிக நாள் புஸ்தகத்தை இருக்க விடுவதில், அவர்கள் விழுங்கிவிட்டுக் காணாமற் போயிற்றென்று பசப்புகிறார்கள். நம்மை அவன் என்ன செய்ய முடியுமென்றும் தைரியப்பட்டுத் தராமலே ஏமாற்றி விடுகிறார்கள்.

ஃ

கூட்டத்தில் ஒரு விதவை அம்மணி:—ஸ்வாமியைச் சேவிக்கும் போது இந்த ஆள் இப்படி மேலே விழுகிறானே, பாழாய்ப்போக. தூர எட்டிப்போகச் சொல்லுங்களய்யா.

அருகில் நின்றவர்:—கோள் மூட்டுகிற வேலை கோயிலில் வேண்டாம். ஸ்வாமியைச் சேவிப்பதிலேயே மனதைச் செலுத்தினால், மேல் விழுவதும், விழாததும் எதுவுமே கவனிக்க முடியாது. இந்தக் கூட்டத்தில் வந்து கஷ்டப்படுவதைவிட வீட்டிலேயே ஹாயியாக இருந்திருக்கலாமே!

ஃ

நண்பர்:—தபாலாபீஸ் உத்தியோகத்தில் தாங்கள் தெரிந்துகொண்ட அனுபவங்கள் என்னென்ன?

போஸ்ட் மாஸ்டர்:—மனிதர்களின் வாழ்வு என்றைக்கும் ஒரே தினுசாக நிச்சயத்திலில்லை என்பது தான்.

ரயிலில் செல்வோர் தங்களின் பெட்டிகளுடன் படுக்கையையும் கொண்டு செல்கின்றனர். இதில் படுக்கைக்கு எடை போட்டு நிறுத்துவதில்லை யாதலால், அந்தப் படுக்கைக்குள் புஸ்தகம் துணி முதலிய பலவற்றையும் வைத்துப் பெரிய மூட்டையாக்கிக் கட்டி அதற்கு சாதாரணமான படுக்கை யென்று பெயர் கொடுத்துவிடுகின்றனர். இதுவும் ஒரு யுக்தியே.

நண்பர்:—அது எப்படி? விவரமாகச் சொல்லுங்கள்.

போஸ்ட் மாஸ்டர்:—இறந்ததாகவும், மிக்க அபாயத்திலிருப்பதால் உடனே வரும்படியாகவும் எவ்வளவோ தந்திகள் தினமும் கொண்டுவந்து தந்து அனுப்பச் சொல்லுகிறார்கள். அவ்விதமே, இவ்வூரிலுள்ளோருக்கும் வெளியூர்களிலிருந்து எவ்வளவோ தந்திகள் வருகின்றன. எவ்வளவோ மணியாடர்கள் சிலருக்கு வந்து கொடுத்திருக்க, இப்போதோ அவர்களுக்கு எப்போதோ ஒரு மணியாடர் அபூர்வமாய் வருகிறது. எவ்வளவோ கடிதங்களைப் பிரதிதினமும் பெற்றுவந்த வியாபாரிகளையும், அவர்களின் கடைகளையும் இப்போது காணோம்! அவர்கள் போன இடமே தெரியவில்லை. திடீரென்று ஒருவன் உயர்ந்து அவன்பேருக்கு அநேக கடிதங்களும் மணியாடர்களும் வருகின்றன. சில பிரபலஸ்தர்கள் அடியோடு சாய்ந்து விழுந்து அவர்களுக்கு ஒரு கடிதம்—மணியாடர்கூட வராமற் போனதையும் என் தபால் உத்தியோக அனுபவத்தில் பார்த்திருக்கிறேன்.

ஃ

மனைவி:—இந்தப் புஸ்தகத்திலே காதலர்கள் கொடுத்துக்கொள்ளுகிற முத்தத்திற்கு 'டானிக் மாத்திரை' என்று வேடிக்கையாகப் பெயர்வைத்திருக்கிறது.

நாயகன்:—பேஷ்! சரியான பெயர்தான். அந்த டானிக் வெகு வெகு வேலை செய்யும். எங்கே நீ ஒரு டானிக் மாத்திரை கொடு.

மனைவி:—கல்யாணமாகாத காதலர்களுக்குத்தான் அந்த முத்தடானிக் மாத்திரை அருமையாகப்படுமேயன்றி, விவாகமாகிப் புருஷன் மனைவி என்றானவர்களுக்கு அத்தனை பெருமையாக அது தோற்றாது. முத்தமிட்டுக் கட்டியணைந்து சுகித்து, வயிற்றிலொரு குழந்தையையும் கொடுத்துவிட்டு, பிறகு போடிபோ என்று ஏமாற்றிக் கைவிடுவதற்கும் இந்தக் கல்யாணமானவர்களால் முடியாது.

ஃ

போஸ்டாபீஸ் குமாஸ்தா:—டிக்கட்டுக்குப் பணம் சற்றே குறைகிறது. அதற்குப்பதில் தபால் ஸ்டாம்புகளைப் பெற்றுக்கொண்டு தஞ்சாவூருக்கு டிக்கட் தருகிறீர்களா?

டிக்கட் குமாஸ்தா:—நான் விழுப்புரம் டிக்கட் ஒன்று கொடுத்தால் உங்கள் தபாலாபீஸில் அதற்கு ஸ்டாம்பு தருவார்களா?


ஃ

தாசி:—என்ன, கர்ப்பத்தடைக் கருவிகளை வைத்திருக்கிறீர்களே. நான் கேவலம் தாசிதானே. என் குழந்தைக்குச் சொத்து வேண்டுமென்று உங்களைக் கேட்கப்போகிறேனா?

செட்டியார்:—கேட்கவும், கோர்ட்டு மூலமாய்ப் பாக சொத்து பெறவும் சட்டமிருப்பதால், அந்தத் தொல்லைகள் வேண்டாமென்று இப்போதே ஜாக்கிரதைப் படுகிறேன். இப்போது நீ பல்லிளித்து வாங்கிக்கொள்கிற பணத்தோடு திருப்தி பெறு. அதற்குமேல் அதிக ஆசைப்படாதே. நான் செட்டியாரல்லவா? ஏமாறுவேனா?

நண்பர்கள் சந்திக்க வருவதாக வெகு நிச்சயமாய்க் கடிதம் எழுதுகிறார்கள். ஆனால், கடவுளின் எண்ணம் வேறாக இருப்பதால், நமது ஊர் வந்தும்கூட சந்திக்க நேரமின்றிப் புறப்பட்டுவிட்டு, தான் வராமற் போனதைப் பற்றிப் பிறகு நமக்கு விவரமாய்க் கடிதம் எழுதுகிறார்கள்.

நால்வர் சேர்ந்து சீட்டாடிக் கொண்டிருக்கையில் ஒரு சிநேகிதன் அவர்களில் ஒருவர் பக்கத்திலிருந்து தடவைக்குத்தடவை அவர் முகத்து



டன் முகம் சேர்த்துச் சீட்டைப் பார்த்து, 'இதைப்போடு, அதைப்போடு' என்று சொல்லி அவர் பிராணனை வாங்கினான். அப்பொழுது அந்த ஆட்டக்காரன் எந்நேரமாகியும் அவன் எழுந்து போகாததைக்கண்டு, தன் கைக்குட்டையை எடுத்துக் கொண்டு அதனால் அவன் மூக்கைக் கெட்டியாகப் பிடித்துக் கசக்கி உடனே விட்டுவிட்டு—"அடடா! உன் மூக்கா! என் மூக்கென்று நினைத்தல்லவா சிந்திக்கொண்டு பொடி போட நினைத்தேன்" என்று சொல்ல, அனைவரும் கலகலவென்று சிரித்தார்கள். அப்பொழுது அச்சிநேகன் நாணமுற்று எழுந்து வெளியிற் சென்று விட்டான்.

ஃ

ஒரு கிழட்டு வண்ணாத்தி இரண்டு கழுதைகளை ஓட்டிக்கொண்டு போகையில் ஒரு துஷ்டன் எதிர்ப்பட்டு,—"கழுதை ஆயா! சுகமாய் இருக்கிறாயா?" என்று க்ஷேமம் விசாரிக்க, அவள்—என் மகனே! சுகமா



யிருக்கிறேனப்பா" என்று பதில் சொன்னாள்.

ஃ

தன் குழந்தைக்கு நேற்று தந்த மருந்தில் குணமில்லையென்று ஒருவர் டாக்டரிடம் கூறிக் குழந்தையின் கையைப் பார்க்கும்படி கேட்டுக்



கொள்ள, டாக்டரோ வேறொருவரிடம் பேசியபடியே அந்த ஒருவரின் கையைப்பிடித்துப் பார்க்கத் தொடங்கினார். இதைக்கண்ட அவர் தனக்கு ஒரு ரோகமுமில்லையென்றும், குழந்தையைப் பார்க்கும்படியேசொல்லிய தாயும் கூற, டாக்டர் தன் தவறுதலை மறைத்துவிட்டு, ஓகோ அப்படியா, அக்குழந்தைக்கு நீர் தந்தையானதால் முதலில் உமது கையைப் பார்க்கவேண்டியிருந்தது என்றாராம்.

சென்ற மாதம்

சாரதா விவாகச் சட்டவழக்கு:—

"ஆனை தன்னைக் கட்டச் சங்கிலியைத் தானே எடுத்துக் கொடுத்தாற்போல" சாரதா சட்டத்திற்கு விரோதமாய் நடந்த விவாகத்தைப் பற்றிப் பிராதுகொடுத்துக் கொள்பவரின் சங்கதியுமிருக்கிறது. அவர் தமது வழக்கு உண்மையென்பதற்கு நூறு ரூபா ஜாமீன் கட்டுவதுடன், அந்த வழக்கை ஜெயிக்க வக்கீலுக்கு வேறே தக்ஷிணை அழுது பாடுபட வேண்டியிருக்கிறது. வழக்கு வெற்றியானால்தான் கட்டின ஜாமீன் தொகை ரூபா நூறும் திரும்பிவரும். வழக்கு தோற்றாலோ ஜாமீன் தொகையை இழக்கும்படி வந்துவிடும். இப்படிக் கஷ்டப்பட்டு வழக்கு கொண்டுவருவானேனென்றால், அது அநேகமாய் பரோபகாரத்திற்காகவுமிருக்கலாம்; உள்ளுக்கு ஏதோ குடைச்சல், அரிப்பு, தினவு, பொறாமை, ஆத்திரம் இருந்து, அந்த விரோதத்தின்பேரில் இவ்வளவு பாடும் தாங்கி வழக்குகொண்டு வருகிற சங்கதியாகவுமிருக்கலாம். வேலப்பூரில் சூர்யா என்பவர் தமது 11-வயது பையனுக்கு 9-பிராயமுள்ள பெண்ணை விவாகம் செய்தாரென்று ஒருவர் வழக்குக் கொண்டுவர, இந்த விவாகம் 29-4-1932-ல் நடந்திருக்க, வழக்கோ 22-5-1933-ல் கொண்டுவந்ததால், விவாகம் நடந்துவிட்ட ஒரு வருஷத்துக்குப் பிறகு கொண்டுவரும் வழக்கு செல்லாதென்றும், ஆகவே, வழக்கு தொடுத்தவர் எதிரிகளுக்கு 35-ரூபாய் நஷ்டஈடு கொடுக்கும்படியும் கோர்ட்டார் தீர்ப்பு செய்துவிட்டனர். கட்டிய ஜாமீன் தொகையையும் இழந்து, மேலுக்கு 35-ரூபாயும் அழும்படியாகிவிட்டது! ஆய்விட்ட கல்யாணம் எப்படியாவது போகட்டுமென்று தன்பாட்டில் ஒதுங்கிக் கொண்டிருந்திருந்தால் ஒரு காசும் செலவு ஏற்பட்டிராதே!

ஃ

ஸ்ரீமான் செட்டியாரின் புகழ்ச்சியும் எதிரொலியும்:—

"ஒருத்தர் போனவழி ஒருத்தர் போகிறதில்லை" என்பது பழமொழி. இந்தியா சட்டசபைத் தலைவரான ஸர். ஆர். கே. ஷண்முகம்செட்டியார் இராஜப்பிரதிநிதி லார்ட் வில்லிங்டன் பிரபுவுக்கு நடத்திய விருந்தில் அவரது ஆட்சிமுறையைப்பற்றி வெகுவாக சிலாகித்துப்பேசிப் பூரித்தார். இது ஸ்ரீமான் செட்டியார் போன வழியாகும். மற்றவர்களோ லார்ட் வில்லிங்டனின் ஆட்சி காலத்தில் அதிர்ப்தியும் கவலையுமே மிகுந்திருக்கிறதென்று சொல்லி வேறு வழியில் போகிறார்கள். வில்லிங்டன் பிரபு காலத்தில் மிக்க கௌரவங்களை ஸ்ரீமான் செட்டியார் அடைந்ததால் புகழ்ந்து பேசினார். அவரைப்போலவே மற்றவர்களும் சந்தோஷப்படும்படியாகிப் புகழ்வதற்குக் காலம் வாய்க்கவேண்டுமென்று விரும்புகிறோம்.

ஃ

எதுவும் நம் அருகே யிருக்கும்போது நமக்குத் தெரிகிறதில்லை. அது தூரத்திற் போய்விடும்போதுதான், பிரிந்தோ, இழந்தோ, கைதவறியோ போகும்போதுதான் அதன் அருமை புலப்படுகின்றது.

திருக்கோயில்களுக்குள்ளும் பேய் வருமா?:—

“பேய்க்கு வேப்பிலைபோல” என்பார்கள். வேப்பிலையைக்கண்டால் பேய் தூரப்போய்விடு மென்பது ஒரு பழமையான கொள்கை. வெளிநாட்டில் (பல்கேரியா) இளிமெண்டிரேவோ எனும் கிராமத்தில் 18-வயதுள்ள ஒரு பெண்ணின் துணிகள் முழுமையும் இரவில் கத்தரிக்கோலால் கத்தரிக்கப்பட்டிருந்தன. அப்பெண் வேறு வீட்டில் படுத்தபோதும் அங்கும் இரவில் அவளது துணிகள் கத்தரிக்கப்பட்டுப் போயின. பிறகு அவள் ஒரே துணியை யுடுத்தியபடி அவ்வூரின் மாதாகோயிலில் படுத்துக்கொள்ள, அப்போதுமட்டும் அவளது துணி கத்தரிக்கப்படவில்லையாம். தெய்வத் திருக்கோயிலினுள் பேய் நெருங்காதென்பதற்கு இது ஓர் உதாரணமாகும். ஆயினும், பேய் பிடித்த பெண் கோயிலினுள் கனத்த கூட்டத்தினிடையே பேயின் சேஷ்டையால் மூர்ச்சையாகி ஜனநெருக்கத்தில் மிதிப்பட்டுப்போக இருந்ததையும், மற்றோர் பெண் கோயிலில் பேய் வராதென்று கோயிலுக்குச் சென்றபோது, அங்கும் பேயின் சேஷ்டைகள் ஏற்பட்டுத் தவித்ததையும் கண்டிருக்கிறோம். ஆனால், ஒரு விஷயம்; கடவுளிடத்தில் உண்மையான பக்தியும், திடசித்தமும்கொண்டிருப்பவர்களை, அவர்கள் பெண்ணாக இருப்பினுங்கூடப் பேய்கள் அங்கு நாடுவதில்லை யென்பது நன்கு பரீக்ஷித்துக் கண்டறிந்த விஷயமாகும்.

ஃ

ஏழாவது யாதவகுல மகாநாடு:—

“தன் இனம் தன்னைக் காக்கும், வேலி பயிரைக் காக்கும்” என்பது போல, அவரவரும் முதலில் தமது ஜாதி ஸமூகத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடவேண்டும். தேசமுயற்சிகளிலே தமது குலத்தவரை உயர்த்துதலே முதல் முயர்சியாக இருக்க வேண்டும். தஞ்சையிற் கூடிய ஏழாவது யாதவ மகாநாடு அட்வகேட் ஸ்ரீமான் டி. கோவிந்ததாஸ் அவர்களின் அக்கிராஸனத்தின்கீழ் நடந்தேறியது. நெய், பால், தயிர் விற்றும், கோ ஸம்ரக்ஷணை செய்தும் வருவதில் யாதவகுலமே ஜனஸமூகத்திற்கு உபயோகமுள்ள முக்கியமான குலமாகுமென்று வரவேற்புத்தலைவர் கூறினது முற்றும் பொருந்தும். வெறும் வாய்ப்பேச்சிலும், எழுத்தில் தீர்மானங்களை வரையவும் நாம் மகாநாடு கூடவில்லை யென்றும், ஸ்ரீ கண்ணபிரான் அவதரித்த யாதவகுலம் மிக்க மாக்ஷியுள்ளதென்றும், உற்சாகத்தளர்ச்சியும் காரியத்தில் திருஷ்டியின்மையும் நமது ஸமூகவிர்த்திக்குத் தடையா யிருக்கிறதென்றும் அக்கிராஸனர் கூறி, “யாதவ மித்திரன்” பத்திரிகை நின்றுவிட்டதற்காகத் தமது வருத்தத்தையும் தெரிவித்தார். யாதவ குலத்தினர் கல்வியில் விசேஷ சிரத்தை கொள்ளவில்லை யென்றும், ஸமூகவாழ்விற்குப் பெண் கல்வியே ஒரு தாய்ச்சரக்கு என்றும், கல்விநிதி, ஐக்கிய நாணயச்சங்கம் முதலியன ஏற்படுத்த வேண்டுமென்றும் புகன்றார். யாதவ இளைஞர் மகாநாடும் இத்துடன் நடைபெற்றது.

கடையில் ஒன்றை வாங்கிச் சென்றபோது குழந்தையின் கால் கொலுசு நழன்று பலகைகளின் சந்தில் விழுந்துவிட, கடைக்காரர் அங்கு விழவேயில்லை, எங்கு விழுந்ததோவென்று கூறி பலகைகளைத் தூக்கிப்பார்க்க இடந்தரவில்லை. பிறகு பெரிய சச்சரவிட்டு அதன் பலகைகளை அப்புறப் படுத்திக் கவனித்ததில் கொலுசுஅடியில் விழுந்திருந்து அகப்பட்டு விட்டது.

தொழிலைக் கேவலமாக மற்ற ஜாதி ஸமூகப் பெண்கள் நினைப்பதுபோல, யாதவகுலப்பெண்கள் கருதாமல், அதைக் கௌரவமாகப் பாவித்து நடத்திவருவது போற்றற்பாலதாகும். தொழில் இளப்பமல்லவென்பதைக் காட்டும் ஜாதியினரில் சௌராஷ்டிர மாதர்களும், யாதவகுல அங்கனைமணிகளுமே பெரிய உதாரணமாக நிற்கின்றார்கள். வீட்டு வேலைகள் அதிகமிருப்பதில் அதிலே சிறுமிகளையும் சேர்த்துவிட்டு, அவர்களின் படிப்பில் சிரத்தை கொள்ளாததைச் சீர்திருத்துவது அவசியமாகும். யாதவகுல ஆடவரிற் பலர் விசேஷித்த கல்வி பெறாமல் சொற்ப சம்பாத்தியத்திலும் சாமான்ய வாழ்விலும் திருப்தியடைய முற்பட்டுவிடுவதையும் ஒழுங்குபடுத்தவேண்டும். ஸமூக க்ஷேமத்திற்குக் குலபத்திரிகையே பிரதான கருவி யென்பதை மறக்கக்கூடாது. ஸமூக க்ஷேம அபிவிர்த்திகளைத் தங்களின் குலபத்திரிகையா லுணர்ந்து இன்னும் மேலோங்குவதற்கான சிந்தையும் உற்சாகமும் கொள்ளும்படியான பழக்கம் உண்டாகவேண்டும். இவ்விதமாக ஒரு ருசி, ஒரு சிரத்தை உதிப்பதற்குக் குலபத்திரிகை இன்றியமையாததாகும்.

ஃ

ஸ்ரீ ஜவஹரிலால் விடுதலை:—

"போனமச்சான் திரும்பிவந்தான் பூமணத்தோடு" என்பதாக, ஸ்ரீஜவஹரிலால் சிறையிலிருந்தும் விடுபட்டு இப்போது வெளியில் உலாவுகிறார். காங்கிரஸ் அக்ராஸனாதிபதிகளில் முதன் முதலாக சிறைக்குச் சென்றவர் இவரே. பழயநாளில் காங்கிரஸ் அக்கிராஸனபதவி எனில் எவருக்கும் நாக்கில் ஜலம் ஊறிற்று. அந்த பதவியும் தங்கட்குக் கிடைக்குமாவென ஏங்கினர். இந்நாளிலோ காங்கிரஸ் தலைமை ஸ்தானம் சிறைத்தண்டனையுடனும் கைதியுடைப்புடனும் இருக்கிறது.

ஃ

மகாத்மா விடுதலை:—

"மாமியார் வீடு மகா சவுக்கியம்" என்று நினைத்துக்கொண்டவனைப்போல, மகாத்மா காந்திஜீயும் சிறைவாசத்தை மாமியார் வீடுபோல் நினைக்கிறாரோ யாதோ! சிறைக்குச் சீக்கிரத்தில் சென்றதுபோலவே, சீக்கிரமாகவே வெளிவந்து விட்டார். தேகத்தின் வலுவுக்காகக் காத்து நிற்கிறார். இனியும் சமரஸத்திற்கு முயற்சி நாடுவாராம். சட்டமறுப்பை விட்டுத் தொலைக்காவிடில் சமரஸம் என்பது வீண் கனவுதான். மகாத்மாக்களின் மனோ நிர்ணயத்தை சாமான்யர்கள் ஊகிப்பது கஷ்டமே.

ஃ

ஜில்லா அதிகாரி சுடப்பட்டமை—

"கெட்ட காலத்துக்கு விபரீத புத்தி" என்பதாய் மிதுனபுரியில் மூன்று மாணவர்கள் பட்டப்பகலில் பந்தாடுமிடத்தில் அங்குவந்த ஜில்லா மாஜிஸ்திரேட் மிஸ்டர் பட்ஜ் என்பவரைச் சூழ்ந்துகொண்டு சுட்டுக் கொலை செய்துவிட்டனர். இம்மூவரும் வங்காள வாலிபர்களே. இருவர் மற்றவரால் சுடப்பட்டு இறந்தனர். ஒருவன்மட்டும் கைதியாயினான். பந்தாடுமிடத்திற்குப் பரம சந்துஷ்டியுடன் வந்த மிஸ்டர் பர்ஜ் கொலையுண்டு ஆவியை யிழந்தார். என்ன கோரமிது! கீரைக்குப் புல்லுருவி கீழே முளைத்தாற்போல துராத்மாக்களின் காரியங்களால் தேசத்தின் நற்பெயருக்கே அபவாதம் வருகின்றது. ஒரு நிமிஷத்தில் தம் கணவரை இழக்கக் கொடுத்த மிஸ்டர் பட்ஜ் அவர்களின் மனைவியாரது சோகம் எழுத்தி லடங்குமோ! ஹா! கண்ராவியே!

குணாலனின் சத்திய உள்ளம்.



அசோக சக்ரவர்த்தியின் குமாரனான குணாலன் மகா சத்தியவந்தன். அதி பராக்கிரமசாலியாயினும் எவரிடத்திலும் ஸாதுவாகவே நடந்து கொண்டான். குணாலனின் சிற்றன்னை அவன் ரூபத்தில் இச்சை கொண்டாள். தன் மோகலாகிரியைத் தீர்க்கும்படி வேண்டினாள். குணாலன் தர்மஞ்ஞானத்தால் துன்மார்க்கத்துக்கு உட்படாமல் மறுத்துவிட்டான். அவள் தன் நாயகனான அசோக சக்ரவர்த்தியிடம் குணாலனைத் தூரதேசத்திலுள்ள சைன்னியத்தை பாதுகாப்பதற்காக அனுப்பும்படி போதித்தாள். அசோகன் அவளுடைய ஆந்தர்ய துவேஷத்தை அறியாதவனானதால், குமாரனைத் தூர நாட்டில் ஸைந்யாதிபதியாய் இருக்கக் கட்டளையிட்டான். குணாலன் தன் மனைவியுடன் பித்ருவாக்ய பரிபாலனார்த்தம் வெளித்தேசம் சென்றனன். சிற்றன்னை வைஷம்யத்துடன் ஸமயம் பார்த்திருந்தாள்.

ஃ

ராஜா அசோகன் ஒருநாள் முத்திரை மோதிரத்தை மறந்து வைத்துவிட, சிறிய தாய் அதை எடுத்து ஒரு கடிதமெழுதி ராஜமுத்திரையிட்டு குணாலன் வசிக்கும் தேசாதிபதிக்கு அனுப்பிவிட்டாள். கடிதத்தில் குணாலனுடைய கண்களைப் பிடுங்கிவிடும்படி எழுதியிருந்தது. ராஜாக்ஞையை உல்லங்கனம் செய்தால் சிரச்சேத தண்டனை வரும். ஆக்ஞையின்படி நடந்தாலோ ஸத்புருஷனான குணாலனின் மனம் நோகும். ஆகவே, யாரும் துணியவில்லை.

ஃ

குணாலனுக்குப் பிதாவின் கட்டளை தெரிந்தது. பலரையும் அழைத்துத் தன் கண்களைப் பிடுங்கும்படி



வேண்டினான். யாரும் ஒப்பவில்லை. தந்தையின் உத்தரவைப் பரிபாலிப்பதற்கு நான் இருக்கையில் ஒருவரைத் தேடுவானேன் என்று மனோதிடங்கொண்டு ஜனஸமூகத்தின் எதிரில் நின்று ஒரு கண்ணைத் தானே பிடுங்கிக்கொண்டான். ஹா ஹா வென்று ஜனங்கள் துக்கித்தனர். குணாலன் சிரித்த முகத்துடன் பாபிஷ்டி நய

ஒருவன் சாதாரணமாக ஒரு வார்த்தையைக் கூறியபோதுங்கூட, அதில் என்னவோ பெரிய சாதுர்யமும் ரஸமும் விசேஷமு மிருப்பது போற் காண்பித்து, அதை மதிப்புடன் ஏற்று அதற்காக ஒரு சிரிப்பும் சிரித்துக் குலாவுவோரைக் கபடஸ்தர்களென்றே மதிக்கவேண்டும்.

ணமே! உலகத்திலிருக்கும் வஸ்துக்க ளைக் கண்டு ஆச்சித்தாயே! அவை களையடைய மற்ற அவயவங்களுக்கு வழி கற்பித்தாயே! இப்போது என்ன செய்வாய் என்ருன். மறுக்ஷணமே இடது கண்ணையும் நோண்டி எடுத்து விட்டான். பிரஜைகளே! இனி எனக்கு நல்ல காலமே; உள்ளுக்குள் ளாக ஈசுவரனை நன்ருய்ப் பார்த்துக் கொள்ள இப்போது வழி பிறந்தது. என் பிதா எனக்கு உபகாரமே செய் தாரென்று பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்தான். பிரஜைகளெல்லாம் துக் கித்தனர். பதிவிரதா சிரோமணி யான அவனுடைய மனைவி குணல னின் கையைப் பிடித்துக்கொண்டு என்றும் நீங்காத் துணையானுள். இரு வரும் எவருக்கும் சொல்லாமல் அந்த நாட்டை விட்டகன்றனர்.

ஃ

அன்றுமுதல் அநேக ஊர்களில் திரிந்து பிக்ஷைவாங்கி ஜீவித்தனர்.



தேசம் தேசமாய்த் திரிந்து அசோக னின் ராஜ்யத்தில் பிக்ஷை எடுத்து வந்தனர். குணலனுடைய மதுரகண் டம் எல்லோரையும் ஆநந்திக்கச் செய்தது. அவர்கள் முற்றிலும் உரு மாறிவிட்டதால் இன்னுரென்று எவ ரும் தெரிந்துகொள்ளவில்லை. ராஜா அசோகன் பிச்சைக்காரனுடைய பாட்டைக் கேட்க வேண்டுமென்று அரண்மனைக்கு வரவழைத்தான். அர சனுக்கும் குமாரனின் அடையாளம் தெரியவில்லை. குணலன் மோக்ஷா நந்தப் பாடல்களைப்பாடினுன். அவன் மனைவி சக்ரவர்த்தியின் வம்சாவளி யில் நடந்த சரித்திரத்தை ஸங்கிரக மாய்க் கூறிக் கானம் செய்தாள். அசோகன் அவள் பாட்டால் குண லனை தனது குமாரனென்று அறிந்து கட்டிக்கொண்டு பிரலாபித்தான்.

ஃ

யாவும் அறிந்த அரசனுக்குக் கோபம் பொங்கிற்று. காமத்திலாழ்ந் துக் கொடுவினை புரிந்த தன் மனை வியை தக்ஷணமே தன் கையால் வெட் டுவதாய் வீரம்பேசி எழுந்திருந்தான். அந்தகனுன குணலன் பிதாவைத் தடுத்து, "என் சிறிய தாயார் எனக்கு உபகாரமே செய்தவள்; அவளை நான் துரோகியென்று எண்ணவில்லை; என் பாபக் கண்ணைப் போக்கி ஞான நேத்திரங்களைக் கொடுத்தவளாவாள்; ஆதலின் தந்தாய்! நீங்கள்ஸ்திரீவதை செய்யக்கூடாது" என்ருன். அசோ கன் கோபம் தணியாமல் அவளைக் கொல்ல ஓடுகையில், குணலன் தந்தை யைப் பிடித்துக்கொண்டு ஈசுவரனை ஸ்தோத்திரம் செய்தான். "பரமாத் மாவே! நான் உண்மையாய் உன்னைப் பஜித்திருந்தால் என் தந்தையின் சோகம் நீங்கவும், என் சிற்றன்னை யின் உயிர் இருக்கவும், என் கண்கள்

பொருமைக் குணத்தினருக்குப் பிறர் லாபம் அடைவதைக் காண்கையில் சகிக்கொணு வாதனைதோன்றி எரிச்சல் தரும். தாங்களாக அவ்வித லாபத்தை யடையமட்டும் தெரியாது.

முன்போல்வரும்படியும் அனுக்கிரகிப்பாயாக" என்று கூறவே, குணலனின் நேத்திரங்கள் பூர்வத்தைப்போல் ஒளி



பெற்று சோபித்தன. அசோகன் ஆச்சரியமடைந்தான். பக்திக்கு மிஞ்சினது எதுவுமில்லையென்று புத்திரனை ஆலிங்கனம் செய்றுகொண்டு ஆநந்தித்தான். அரசனின் கொடிய மனைவியும் உயிர் தப்பினுள்.

ஃ

ஈசுவர பக்திக்கு எல்லையில்லை. பரம தயாநிதியின் அருளைப் பூரணமாய்ப் பெற்றவர்களுக்கு ஒரு குறைவும் உண்டாகாது. ஒருவேளை நேர்ந்தாலும், சீக்கிரத்திலேயே க்ஷேமமுண்டாகும். சத்தியஉள்ளத்தின்மீதேதான் பகவானுக்கு என்றும் பிரியம்.

நாட்டரசன் கோட்டை "ஸ்ரீபாரதீ வாசகசாலை"யின் முதலாவதாண்டு அறிக்கை அன்புடன் வரப்பெற்ளோம். பத்திரிகைகள், புஸ்தகங்கள், உபந்யாஸங்கள் மூலமாக அறிவு வளர்ச்சிக்கு இயன்ற உதவி புரியும் நோக்குடன் இவ்வாசகசாலை நன்மணம் கமழ்கின்றது. ஐசுவரிய ஸம்பன்னர்களான கண்ணியர்களே இதன் அங்கத்தினராய் விளங்குகின்றனர். முதல் வருஷ அறிக்கை மிக்க அபிவிர்த்திமுகம் காட்டி நேர்த்தியான முறையில் ஓராண்டு பூர்த்தி பெற்றுள்ளது. பல பத்திரிகைகளும் நூல்களும் வாசகசாலையில் சேகரிக்கப்பட்டுள்ளதுடன், வரவும் செலவும் திருப்திகரமான நிலையிலுள்ளன. ஸ்ரீபாரதியாரின் பெயரால் நிலவும் இவ்வாசகசாலை, ஸ்ரீபாரதியாரைப் போன்று கஷ்ட நிலையிலுள்ள கல்விமான்களையும் ஆதரித்துச் செல்லும் உத்தம லக்ஷியங்கள் கொண்டதாகவும் விளங்குதல் சிறப்புடைத்தாகும். இவ்வாசகசாலை மேன்மேலும் அபிவிர்த்தியடையுமாறு எம்பெருமானைப் பிரார்த்திக்கின்ளோம்.

ஒவ்வொருவனும் தனது நிலைமையை ஆலோசியாமல் வெளிவேஷத்தைக் கண்டு மோசம் போகிறுன். பூர்வீக ஸம்பிரதாயங்களை யனுசரித்து வந்தவர்கள் மேல்நாட்டாரின் நடையுடைபாவனைகளை யாச்ரயித்த தினமுதல் பெற்ற பாக்கியமென்னவோ? அவர்களின் ஸ்தூலதேகம் வேறுவித வர்ணங்களைக் காட்டாது. பெண்வேஷம் தரிக்கும் புருஷரூபி தனது வேஷத்தை விலக்கினுல் புருஷனுகவே தோன்றுவான். அவரவர்களின் வர்ணுசிரமங்களுக்கேற்றபடி நடையுடை பாவனைகளைக் கைவிடாமல் அனுஸரிப்பது சிலாக்கியமாகும். டம்பாச்சாரி வேஷம்பூண்டு திரியும் ஸ்திரீ புருஷர்கள் ஒருபோதும் சுகமடையார்கள். மேல்நாட்டு ஸ்திரீகளின் நடையுடை பாவனைகளைக் கீழ்நாட்டு மாதர்கள் அனுஸரிப்பது மதவிரோதமாயும் பரிகஸிப்புக்கிடமாயும் முடியும். இத்தேசத்தினரைக் கண்டு ஐரோப்பியர்கள் ஆச்சரியமடைந்து தங்கள் டம்பாசாரங்களை மறந்துவருகிறுர்கள். அதை யுணராமல் அவிவேகிகள் அநியாயமாய்க் கெட்டலைகின்றனர்.

ஒரு தேச ஸஞ்சாரியின் கண்ணீர்.

அநேக வருஷங்களுக்குமுன் பார்க் என்னும் பிரயாணிகன் ஒருவன் நைகர் எனப் பெயர் வழங்கும் மஹாநதி உற்பத்தியாகிச் செல்லும் மார்க்கத்தைக் கண்டறிந்துவர ஆப்பிரிக்கா தேசத்திற்குச் சென்றான். அவன் துஷ்ட வனவிலங்குகளும், நாகரிகமில்லாத காடுவாழ் ஜாதி மனுஷ்யரும் ஸஞ்சரித்த பாலைவனம் மிகுந்துள்ள நாடுகளை ஊடறுத்துப்போகும்படி நேர்ந்தது. வழியில் சொல்லித் தொலையாத சிரமப்பட்டு, கஷ்டநஷ்டம் அனுபவித்து, அவன் நைகர்நதி தீரத்திற் சேர்ந்தான். அந்த நதி மிகவும் அகன்று சிறந்திருந்தது. பின் அவன் சேர்ந்த கரையினின்று ஆற்றைக்கடந்து அக்கரைக்குப்போக விரும்பியும் படகு ஒன்றும் அவன் கண்ணுக்குத் தென்படாததால், ஆற்றங்கரையை அடுத்துள்ள ஒரு கிராமத்தில் மறுநாள் வரையும் காத்திருக்க நினைத்து, இராத்தங்க விடுதியும், பசியாறப் புசிகரணமும் அகப்படுமா வென்று அவ்வூருக்குச் சென்றான். அந்தத் தேசாந்தரிக்கு அவ்வூரார் எவரும் தமது வீட்டில் சற்றே தங்கி இளைப்பாற இடங்கொடுத்து உதவவில்லை. அவன் அங்கு ஒரு மரத்தின் கீழ் பொழுதுபட்டு இருளுமளவும் உட்கார்ந்திருந்தான். தின்று பசியாற உண்டிவகை ஒன்றும் அகப்படவில்லை.




ஃ

வயலுக்குப் போயிருந்து வீட்டுக்குத் திரும்புகாலில் அவ்வழியே சென்ற கிழவியொருத்தி மரத்தண்டை களைத்திருந்த யாத்ரிகனைக்கண்டு மனது இரங்கித் தன்னுடன் வீட்டிற்கு வந்து இளைப்பாறச் சொல்ல, அவன் எழுந்து ஆவலோடும் அவள் பின்னே சென்றான். கிழவி தன் குடிசையிற் சேர்ந்தவுடன் தீபம் ஏற்றிப் பாய்விரித்து அவனை உட்காரச்சொல்லிப் போசனம் கொடுத்துப் பசியாற்றினாள். அதன்மேல் அந்த ஸ்திரீயும் வீட்டிலுள்ள மற்றப் பெண்களும் பருத்திப் பஞ்சுநூலை ராட்டினத்தில் நூற்கத் தொடங்கினார்கள்.

ஃ

அவர்கள் இவ்வேலையைச் செய்யும் சிரமம் தோன்றாவண்ணம் பொழுதுபோக்கும் பொருட்டு, தங்கள் ஜாதி இயற்கைப்படி சங்கீதம் பாடினார்கள். அவர்களில் யாத்ரிகனை உபசரித்த கிழவிக்குக் கவித்துவ சக்தியுண்டானதால் அந்தப் பிரயாணிகனையே குறித்து இரக்கத்துடன் பாடலானாள்.



தனதந்தினு தனதந்தினு தனதந்தினு தனனு
தன்னன தானதனு தனதந்தினு தனனு;

1. இடிஇடித்து காற்றடித்து மின்னிமழை பொழிய
ஏழைவெள்ளை மனிதனதில் சிக்கியுள மேங்கி (தனதந்)

2. கடும்பசியால் மிகவருந்திக் கைகால்தள் ளாடி
காதடைத்துக் கண்ணிருண்டு களைத்து உடலிளைத்து (தனதந்)

3. நம்முடைய விருட்சத்தி னடியில்வந்து சேர்ந்தான்
நலமுடனே பால்கொணர்ந்து கொடுக்கநற்று யில்லை (தனதந்)

4. செம்மையுள்ள அப்பமொன்று செய்தவன்கையில் கொடுத்து
தீப்பசியைத் தணிக்கஅவன் மனைவியுமிங் கில்லை (தனதந்)

5. யாருமற்ற பரதேசி யாகுமிவ னிப்போ
தெய்து பரி தாபமது கண்டுமன மிரங்கி (தனதந்)

6. சீருறநா மெல்லாரு மிவனுக்குப சரிப்போம்
தேவாதி தேவனருள் கூர்ந்திடுவார் நமக்கே (தனதந்)

ஃ

இந்தத் தாற்பரியமுள்ள பாடலை அக்கிழவி பாடியது கேட்ட யாத்திரிகன் உள்ளங்கசிந்து உருகி அழுதான். வீடு வாசலை, ஊர் தேசத்தை, உற்றார் உறவினரை விட்டுப்பிரிந்து பல்லாயிரம் மைல் தூரம்சென்று அன்னிய தேசத்திற் சேர்ந்த ஆருமற்ற அகதியாயிருந்த அவனுக்கு. அன்னியர் வாக்கினின்று கன்னெஞ்சையும் உருக்கத்தக்க இவ்விசைப்பாடலைக் கேட்க நேர்ந்தால், அழுகை உண்டாகிக் கண்ணீர்முத்துச் சொரிவது ஆச்சரியமல்லவே! மறுநாள் அதிகாலையில் அங்கிருந்து புறப்படும்போது அந்தக் கிழவிக்கு நன்றி கூறி வாழ்த்தித் தக்க வெகுமானமும் கொடுத்துவிட்டுச் சென்றான். நம் வீடு தேடி வந்தவர்களை நாம் மனதார உபசரித்து ஊழியக்காரர்கள்போலிருந்து எல்லாம் செய்து ஆதரித்துக் கண்ணியப்படுத்துவது கடவுளுக்குப் பிரீதியான செய்கையாகும். வருவோர் திருப்தியுடன் செல்வதே நல்ல ஆசி.

ஐயமிட்டுண்.

வரதக்ஷிணை தீக்ஷிதர்

இராமச்சந்திர ஐயர் :—என்ன தீக்ஷிதர்வாள்! இரண்டு நாளாக ஆள் மேல் ஆள்விட்டேன். சிலர் தாங்கள் ஊரிலில்லை யென்றும், மற்றையோர் வீட்டிலிருந்துகொண்டே வர இஷ்டமில்லைபோலிருக்கிறதென்றும் சொன்னார்களே?

கிருஷ்ண தீக்ஷிதர்:—இந்த அடிமைக்குத் தங்களின் பேரைச் சொன்னால் வராதிருப்பேனா? நான் வராமல் நடந்த காரியம் உண்டா?

இராம:—என்ன, மிகவும் கிராக்கியோடு பேசுகிறீர்கள். சித்திரைமாதம் பிறந்து இன்றைக்கு 20-க்கும் மேலாகிறதே. குழந்தை சகுந்தலாவுக்கு வரன் தேடுவதை இதுமுதல் உங்களுக்குப் பொறுப்பு கட்டிவிட்டேன்.

கிருஷ்ண:—எப்பொழுது இந்த சரீரம் தங்களுக்கு உபயோகப்படுமோவெனக் காத்திருக்கிறேனே. இனி நான் போகிற இடமெல்லாம் இதைப் பற்றிக் கவனிக்கிறேன்.

இராம:—நாட்களை வீணே கடத்தக்கூடாது. கலியாண மாதங்கள் இருக்கும்போதே நடக்கவேண்டும். 15-தினத்தில் வரனை நிச்சயம் செய்யும். அதற்குத் தகுந்த மரியாதை செய்விக்க எனக்குத் தெரியாதா?

கிருஷ்ண :—மரியாதையைப்பற்றி நான் சந்தேகப்படுவேனா? ஒரு சீமானுடைய குடும்பத்திற்கு அதற்குத் தகுந்த வரனைப் பார்த்துச் சேர்த்து வைக்கும் பிரயாசை எவ்வளவு என்று தங்கட்குத் தெரியாததா?

இராம:—ஜாஸ்தியாய்ச் சொல்ல வேண்டாமெனக்கு. உம்மிஷ்டப்படி நடப்பேன். இப்போது பி.ஏ, எம்,ஏ. படித்தவர்களின் சாயம் இறங்கிவிட்டது. அவர்கள் வேலைக்குத் திண்டாடுகிறார்கள். இருந்தாலும் நமது குழந்தையின் அழகுக்கும் ஞானத்திற்கும் தக்க இடமாக, எனக்குள்ள பூமியில் பாதி பூமியாவது பிள்ளைக்கு இருக்கும்படியும், பையனின் குணம் உயர்வானதாகவும் பார்க்கவேண்டும். எப்போது கிளம்புகிறீர், செலவுக்கென்னதேவை? யோசியாமல் கேளும்.

கிருஷ்ண:—தகுந்த இடம் ஒன்று இருக்கிறது. சுமார் எண்ணாயிரத்துக்கு முடிந்தால் உங்கட்கு லாபம் தான். என் சிரமத்திற்கு வெகுமதி வேறே தாங்கள் தரவேண்டும். வேளாங்கண்ணி ஐயரவர்களின் பெண்ணுக்கு இந்த இடத்தை ஏற்பாடு செய்யும்படி என்னைக் கேட்டிருக்கிறார்கள். அவர்களைவிடத் தங்கட்கே நிச்சயிக்கத்தான் எனக்குப் பிரியம். அபிப்பிராயமிருந்தால் ஒரு தந்திக்குள் முடிக்கிறேன்.

இராம:—வரதக்ஷிணை தீக்ஷிதர் என்று உமக்கு ஏற்பட்ட பெயரை என்னிடத்திலுமா காட்ட வருகிறீர்? என்னிடம் எண்ணாயிரம் ரூபாய்க்கு



வரதக்ஷிணை பேசி, அதில் நாலாயிரம் ரூபாயை நீர் விழுங்கிவிட்டு, மாப்

பிள்ளை வீட்டாரிடம் நாலாயிரம் ரூபாயைக் கொடுத்துவிட்டு, அங்கும் கமிஷன் பெற்று, என்னிடத்திலும் வேண்டியதைச் சுரண்டிக்கொண்டு ஏமாற்றுகிற தந்திர வித்தையை என்னிடத்திலும் காட்ட வந்தீரா? பாவி மனுஷ்யனே! உம்மால் எவ்வளவு குடும்பங்கள் பாழாய்விட்டன? பொருத்தமற்ற விவாகங்கள் எத்தனையோ செய்வித்து ஊராரின் பாபத்தைக் கட்டிக்கொண்டீர். இனி படித்தவனுக்குக் காசுகொடுத்து சந்தையில் மாடு வாங்குவதுபோல் வாங்க மாட்டேன். உமக்கு வேறே இளிச்சவாயன் இருந்தால் பாரும். என்னிடம் பலியாது. போம் வெளியே— என்று பிடித்துக் கீழே தள்ளினார். வரதக்ஷிணை சாஸ்திரிகள் அருகிலிருந்த ஸைகிலின்மீது விழுந்து எழுந்தார்.

கிருஷ்ண:—இப்படிப் பிடித்துத் தள்ளுவதற்குத்தானா கூப்பிட்டீர். இது தெரிந்துதானே உம்முன் வராமல் ஒளிந்தேன். உமது கையில் அகப்பட்டுத் தப்புவது கஷ்டம்தான். இன்று பூனைமுகத்தில் விழித்தேன். அது என் பாபம்.

(துக்கத்தோடும் எழுந்து செல்கிறார்.)

வரதக்ஷிணை தீக்ஷிதர் எழுந்து வெளியிற் செல்வதற்குமுன் வீட்டின் வாயிலில் வண்டியொன்று வந்து நின்றது. அதினின்றும் தீக்ஷிதர் எண்ணாயிரம் ரூபாய் வரதக்ஷிணை கேட்பதாகக் குறிப்பிட்ட நாராயணய்யரும் அவர் பத்தினியும் இறங்கி, தீக்ஷிதர் எதிரில் வருவதையும் பாராமல் அலக்ஷியமாய் உட்சென்றனர். இராமச்சந்திரய்யரும் சந்தோஷத்தோடு வரவேற்றார். அவரது குமார்த்தி சகுந்தலாவைக் கண்டதும் வந்தவர்களுக்கு மனம் பிடித்துப்போயிற்று. வரதக்ஷிணை ஏதுவும் வேண்டாமென்றும் பெண்மட்டும் கிடைத்தால் அதுவே மகா பாக்கியமென்றும், வரதக்ஷிணை சாஸ்திரி தம்மை எண்ணாயிரம் ரூபாய் வரதக்ஷிணை கேட்கும்படியும், அதில் நாலாயிரம் தமக்குக் கொடுத்தால் ஏற்பாடு செய்வதாகவும் கூறியதற்குத் தான் சம்மதிக்காமல் நேராகவே புறப்பட்டு வந்ததாயும் நாராயணய்யர் கூறினார். இராமச்சந்திரய்யர் சற்றுநேரத்திற்குமுன் தமக்கும் வரதக்ஷிணை தீக்ஷிதருக்கும் நடந்த சம்பாஷணையை வெளியிட்டுத் தாம் சகுந்தலாவை மனஸ்பூர்வமாய் இரண்டாயிரம் ரூபாய் நகைகளோடும் கன்னிகாதானமாகக் கொடுப்பதாய்க்கூறினார். இவ்விருவரும் ஊஞ்சலில் உட்கார்ந்து இவ்வாறு பேசி முடிக்கும்போது வரதக்ஷிணை தீக்ஷிதர் அங்கிருந்த பலகணியின் வழியாகத் தம் தலையை நீட்டிக்கொண்டு பார்த்தபடியே, இருவரும் ஒன்று சேர்ந்துவிட்டதில் தமக்கு உண்டான பெரிய நஷ்டத்துக்காக வாடி நின்றார். வைகாசி மாதம் ஏழாம் தேதியன்று சகுந்தலாவுக்கும், நாராயணய்யரின் குமாரனான சுந்தரரங்கன் எம். ஏ. வுக்கும் விவாகம் செய்விப்பதென நிச்சயமாயிற்று. இனி வரதக்ஷிணை தீக்ஷிதரின் தயவு எதற்காக?



அதனதன் அருமை பெருமை.

உன் கைக்கு வராமுன்னர் நீ விருப்பத்துடனும் எதிர்பார்த்துக் காத்திருந்த அவா, அது உனக்குக் கிட்டியபிறகு அவ்வளவாக இருப்பதில்லை. அது உன் சொந்தப் பொருளாகி விடுவதினால் அதில் ஒரு அலக்ஷியம் தோன்றிவிடுகிறது. அப்போது அதன் அருமையை அத்தனையாகப் பாராட்டிக் கொள்வதில்லை. அதன்மீது பிரியமில்லாமலல்ல. நம்முடையதுதானே என்ற ஒரு பராமுகத்தால் அதை ஒரு அல்பமாக நினைத்துவிடுகிறாய். பிறகு அந்தப் பொருளை எங்கோ ஞாபகப்பிசகாக வைத்துவிட்டு நீ தேடிக் கிடைக்காதபோது, அதன் அருமையை நினைத்துக்கொண்டு உன் மனம் வெகு கஷ்டப்பட்டுப்போகிறது. வேறு வேலையில் உன் புத்திசெல்லாமல் அதையே நினைத்தவாறு மறுபடியும் வீடு முற்றிலும் தேட ஆரம்பித்துவிடுகிறாய். அந்த சமயம் நீ எண்ணாத இடத்திலிருந்து அது அகப்பட்டுவிடுமானால், ஆ! இவ்விடமா இதை வைத்தோம், எப்படியேனும் அகப்பட்டதே என்று உன் சித்தம் பூரித்துவிடுகின்றது. மிகுந்த களைப்படைந்த உன் ஹிருதயம் ஆயாசத்துடனும் சிரம சாந்தி செய்துகொள்ள ஆரம்பிக்கிறது. நீ வெளியே சென்ற இடத்தில் மறந்து வைத்துவிட்டு இழக்கும்படியாகிவிடினோ, அப்போது உன்மனம் படும் பாட்டைச் சொல்லமுடியுமோ?

ஃ

ஒன்றின் அருமை அது பழுதுபட்டுவிடும்பொழுதோ, அதை கை தவறி இழந்துபோகும்போதோதான் தெரிகிறது. நமது குழந்தைகள் தானே என்று அலக்ஷியமாய் இருக்கிறோம். காலணா அது கேட்கையில் அதைத் தராது தாமதப்படுத்துகிறோம். கைக்குழந்தை தவழ்ந்து நடந்து தன்னைத் தூக்கிக்கொள்ளும்படி நம்மிடம் வரும்போது நாம் வேறு வேலையில் கவனத்தைச் செலுத்துகிறோம். இவை யாவும் அக்குழந்தை சுகமாக இருப்பதனால் நமக்கு உண்டாகிற அலக்ஷியத்தன்மையாகும். அக்குழந்தைக்கு ஏதேனும் பிணிதோன்றிக் கஷ்டப்படும்போதோ வெகு அருமையாக விசாரத்துடனும் கவனிக்கிறோம். மறைத்து நின்ற நம் அன்பெல்லாம் அந்த சமயம் வெளிவந்து விடுகின்றது. குழந்தையின் அருமை பெருமையை நன்கு உணருகிறோம். வைத்தியர் வீட்டுக்கு ஓடியலைகிறோம். கடவுளை வேண்டிக்கொள்கிறோம். பிறகு குணமானதும் நாம் கொள்ளும் பூரிப்பு மகத்தானதன்றோ?

ஃ

இவ்விதமே மனைவியின் அருமை அவள் ஊருக்குச் சென்றிருக்கும்போது தெரிகின்றது. இரண்டாந்தாரத்தினர் ஸதா தமது மூத்த மனைவியையே நினைத்துக் கண்ணீர் விடுவர். குமார்த்தியின் அருமை அவள் நம்மைப்பிரிந்து கணவனின் வீட்டிற்குச் செல்லும்போது தான் தெரிகிறது. இதனால்தான் பிரிந்து பிரிந்து மீண்டும் கூடுதலில் ஒரு புது இன்பமும் அருமையும் தோன்றுகின்றது.

“ அமிர்த குணபோதினி ”

ஸ்ரீமுக ஷ்லத்திய புரட்டாசி மாத பஞ்சாங்கம்.

யோகம்	இங்	தமிழ்	வார	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள், முதலியவை.
சி-ம	16	1	சனி	துவா-44-26, பூச-5-59, கன்யாரவி 4-20, ஷடசீதி புண்ணியகாலம்.
சி-ம	17	2	ஞா	திர-46-0, ஆயி-9-57, பிரதோஷம்.
ம-சி	18	3	திங்	சசி-45-56, மக-12-25, சிவராத்திரி.
சி-அ	19	4 (5—4)	செ	● 44-25, பூர-13-21, மஹாலய அமாவாசை.
அ-ம	20	5	புத	பிர-41-29, உத்-12-53, நவராத்திரி ஆரம்பம்.
சி	21	6 கன்யாரவி	வியா	துவி-37-33, ஹஸ்-11-14, சந்திரதரிசனம்.
சி	22	7	வெ	திரி-32-47, சித்-8-3.
அ-சி	23	8	சனி	சது-27-27, ஸ்வா-5-24, துலாயனம் 29-11, உபாங்கலலிதா விரதம்.
உ-ம	24	9	ஞா	பஞ்-21-50, விசா-1-58, உப-55-53, திதிதுவயம்.
சி	25	10	திங்	ஷஷ்-16-5, கேட்-54-4, மஹிடாசுர ஸம்ஹாரம்.
அ-சி	26	11	செ	ஸப்-10-26, மூல-50-25.
அ	27	12	புத	அஷ்-5-0, உப-54-53, பூரா-47-6, ஆயுதபூஜை.
சி	28	13	வியா	தச-55-12, உரா-44-8, விஜயதசமி.
ம-சி	29	14	வெ	ஏகா-51-4, ஸ்ரூவ-41-44, ஸ்ரீ வில்லிபுத்தூர் தேர்.
சி-அ	30	15	சனி	துவா-47-31, அவி-39-51, கோதுவாதசி.
சி	1	16	ஞா	திர-44-38, சத-38-38, கரிநாள் பிரதோஷம்.
சி	2	17	திங்	சசி-42-36, பூட்-38-15.
அ-சி	3	18	செ	○ 41-33, உட்-38-48, கௌமுதீ விரதம்.
உ-ம	4	19	புத	பிர-41-43, ரே-40-28.
அ-சி	5 அக்டோபர்	20	வியா	துவி-43-4, அசு-43-23, அசூன்யசயன விரதம்.
சி	6	21	வெ	திரி-45-49, பர-47-38, சந்திரோதய கௌரீவிரதம்.
அ	7	22	சனி	சது-49-52, கிரு-53-5.
சி	8	23	ஞா	பஞ்-55-6, ரோ-59-38.
அ	9	24	திங்	ஷஷ்-60-0, மிரு-60-0.
சி-ம	10	25	செ	ஷஷ்-1-7, மிரு-6-57.
சி	11	26	புத	ஸப்-7-9, ஆரு-14-27.
அ	12	27	வியா	அஷ்-13-23, புந-21-35.
உ-ம	13	28	வெ	நவ-18-24, பூச-27-45, தசமி திதி.
ம-அ	14	29	சனி	தச-21-59, ஆயி-32-27, அதிதி, கரிநாள்.
ம-சி	15	30	ஞா	ஏகா-23-49, மக-35-27, ஏகாதசி திதி.
சி	16	31	திங்	துவா-23-42, பூர-36-41, துலாரவி-34-7, விஷுவத் புண்ணியகாலம்.

ரா	15உ-க்கு ராசி		
சனி			ரவி கேது
	குஜ	சுக்	பு குரு

“அமிர்த குணபோதினி” பிரஸ், 158 A, பிராட்வே, சென்னை—1933.